www.padippakam.com



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அம்பி கவிதைகள்

கவிஞர் அம்பி

மித்ர வெளியீடு
375 - 10, ஆற்காடு சாலை
சென்னை-600 024 இந்தியா

படிப்பகம்

www.padippakam.com

முதற் பதிப்பு : நவம்பர் 1994
மித்ர : 5
உரிமைப் பதிவு
விலை ரூ. 43-00

*AMBI KAVITHAIGAL*

Poetry by
AMBI
(R. Ambihaipahar)

First Edition :
15th September, 1994

Printers :
AR prints
Madras-600 024

Price :
Rupees Forty Three Only

Pages :
236

Cover Design :
JAMAL

Published by :
Dr. PON. ANURA

*MITHRA* PUBLICATIONS
375-10, Arcot Road
Madras-600 024 INDIA

அமைப்பு : இளம்பிறை எம். ஏ. ரஹ்மான்

படிப்பகம்

www.padippakam.com




மேடையின் இசைத்
தேவைகள் கருதியும்
இவை
படைப்புப்
பெற்றன

படிப்பகம்

www.padippakam.com

அகிலமே வாழ்க!
கருணைக் கண்
கண் இன்னொன்று வேண்டும்
அன்னை தமிழே!
மாலை மணி ஓசை
கண்ணா நீ எங்கே?
என்ன கோலம் தேடுவேன்?
கத்ரபோன் குன்றில்...
பொன் வளர் பூமியில்...
அரங்கேற்றம்
எழுவான் கரையில்
இறைவா!
சொல்லடி தென்றலே!
மாங்குயிலே!
மாயங்கள் ஏன்?
ஆசை
நீ தெய்வம்
வருக புதுயுகமே

படிப்பகம்

www.padippakam.com

# தயவு செய்து திருத்திக் கொள்ளுங்கள்

| பக்கம் | வரிசை | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 18 | 1 | கவிகைள் | கவிதைகள் |
| 31 | 9 | இடந்தேடி | இடந்தேடிக் கண்ணா |
| 36 | 5 | ஒளி | ஒலி |
| 40 | 6 | கேளிந்த | கேளிந்த |
| 48 | 7 | நியைிலா | நிலையிலா |
| 48 | 16 | தோழில் | தோளில் |
| 64 | 19 | என்றங் | எண்ணங் |
| 90 | 22 | வெண்ணிதழீ | வெண்ணிதழ் |
| 93 | 16 | அன்றின் றொன்றும் | அன்றின்று என்றொன்றும் |
| 99 | 8 | திருவை | திரு |
| 132 | 5 | பரவு | பரவி |
| 135 | 13 | சாரணம் | காரணம் |
| 148 | 10 | இணவாக்கும் | உணவாக்கும் |
| 178 | 21 | மம்மிபோய் | மம்மியாய்ப் |
| 227 | 8 | கேளீரென | கேளிரென |
| பின்னட்டை | 1 | Sankar | Sri Lankan |
| பின்னட்டை | 13 | and | on |

[illegible]
கால் அடி வைத்துள்ள
வண்டமிழ் மக்களுக்கு ...

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# கவிஞர் அம்பி

**அரை** நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தமிழ்ச்சேவையும் கவிதை ஊழியமும், கல்விப் பணியும் புரிந்து வரும் நண்பர் அம்பி நாவற்குழியில் பிறந்து, கடந்த பதினைந்து ஆண்டுகளாகப் புலம் பெயர்ந்த தமிழனாய் வாழ்கின்றார்.

அவர் கவிதைக்கும், விஞ்ஞானக் கல்விக்கும், புலம் பெயர்ந்த நாடுகளில் சிறுவர் பயிலும் தமிழுக்கும், நமது சிறுவரின் மழலைகளின் இனிமைக்கும் செய்துள்ள சேவைகள் காலத்தை வென்று நிற்கும்.

புதிய கவிதைகள் இயற்றும் கவிஞர்கள் புதிய மொழி தேடி அலைவதாகச் சொல்லுகிறார்கள். இந்தத் தேடல், மரபுக் கவிதையிலே வேர் கொண்டு, படைப்பு வீரியத்தின் புதிய வானத்தை நோக்கியதாகஅமைதல் வேண்டும். புலம் பெயர்ந்த நாடுகளிலே தோன்றும் புதிய கவிஞர்கள், ஈழத்தின் மரபு வழிக் கவியுலகின் செழுமையை அறிதல் வேண்டும்.

மஹாகவி, நீலாவணன் ஆகிய கவிஞர்களுடன் சம காலக் கவிஞராய் தமது ஆளுமையை நாட்டிய கவிஞர் அம்பியின் இந்தக் கவிதைத் தொகை, புலம் பெயர்ந்த நாடுகளிலே வாழும் புதுக் கவிஞர்கள் நமது மரபுச் செல்வங்களைத் தரிசிப்பதற்கு உபகாரமாய் அமைகின்றது. இதனை உள்வாங்கி, புலம் பெயர்ந்த நாடுகளின் புதிய தமிழ்க் கவிஞர்கள் படைப்பிலக்கியத்தில் நம்மவர்களுக்கு ஒரு கௌரவம் சம்பாதித்துத் தர முன் வருவார்களென்று நம்புகிறேன்.

**எஸ். பொ.**

படிப்பகம்

www.padippakam.com



# ஆசிரியரின் பிற நூல்கள்

**வெளிவந்தவை :**

1. கிரீனின் அடிச்சுவடு
(நூறு ஆண்டுகளின் முன் தமிழில் விஞ்ஞானம்)
-யாழ் இலக்கிய வட்ட வெளியீடு (1967)

2. அம்பிப் பாடல்
(குழந்தைப் பாடல்கள்)
-வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்(1969)

3. வேதாளம் சொன்ன கதை
(கவிதை நாடகம்)
-செய்யுட் களம், கொழும்பு (1970)

4. கொஞ்சும் தமிழ்
(குழந்தைப் பாடல்கள்)
-கொழும்புத் தமிழ்ச் சங்கம் (1992)

5. LINGERING MEMORIES
(Collection of Poems)
-CODE, Papua New Guinea (1992)

**வெளிவர இருப்பவை :**

1. தமிழில் விஞ்ஞானம் தந்த முன்னோடி
-சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

2. 19-ம் நூற்றாண்டில், யாழ்ப்பாணத்தில் சொற்களஞ்சியக் கலை
-சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

3. மனங்கவர்ந்த மூன்று நாடுகள்
-மொரிசியஸ், ஓமன், பப்புவா நியூகினி

4. அம்பி மழலை
(பாலர் பாடல்கள்)

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

**புலம்** பெயர்ந்த நாடுகளிலே மட்டுமன்றி, பொது வாகவே, படைப்பிலக்கியத்திற்கு மிகவும் வசதியான ஊடகமாகக் கவிதை வடிவம் பயிலப் படுகின்றது. 'சுருக்கம்' என்கிற வசதியையும் கவிதை பேணுகின்றது.

தமிழ்க் கவிதையின் வயசு குறைந்தது இரண்டாயிரம் ஆண்டுகள். வீண் பெருமையல்ல; உண்மை. புதிய தேவைகளை உட்கொண்டு, தொனிப் பொருளிலும் உருவ அமைதியிலும் நெகிழ்வையும் புதிதையும் தமிழ் இணைத்து வளர்ந்தது. இக்கவி மரபின் யுகசந்தியிலே நின்று, தமிழ்க் கவிதை ஊழியத்துக்குப் புதிய அர்த்தம் பாய்ச்சியவனே மஹாகவி பாரதியார்.

பாரதியாருக்குப் பின்னர் கவிதையின் உருவ அமைதி யில் அதிசய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. வழக்கம் போலவே, ஆரம்பத்தில் இந்த மாற்றங்கள் அங்கீகரிக் கப்படவில்லை; கடுமையான விமர்சன எதிர்ப்புக்கு உள்ளாயின. புதியன எழுதுவதற்குப் புதிய மொழி தேவை என்கிற நியாயம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. புதிய படைப்புகள் உரிய இடத்தினைப் பெற்றன. இதிலே வேடிக்கை என்னவென்றால், இக்காலத்தில் 'கவிதை' என்றால் புதுக் கவிதையையே குறிக்கும். இலக்கணங்களுக்கும் யாப்புகளுக்கும் இசைந்தொழுகும் கவிதைகள் 'மரபுக் கவிதைகள்' என்றழைக்கப்படு கின்றன. இருவகைக் கவிதைகளும் தமிழை வளஞ் செய்தல் சாத்தியம் மட்டுமல்ல, தக்கதுமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

மரபு நிலைகள் துண்டிக்கப்படுவதினால் ஏற்படக்கூடிய Identity Crisisஐப் புலம் பெயர்ந்த தமிழர்கள் அநுபவ வாயிலாக அறிவார்கள். பிறிது பிறிதாக மாறிவிடாது, இனத்துவத் தனித்துவங்களைப் பாதுகாப்பதற்கு மரபின் தொடர்ச்சி இன்றியமையாதது என்கிற அக்கறை நம்மவர்கள் மத்தியிலே ஏற்பட்டுள்ளது. இது நற்சகுனமே.

ஈழத்தின் கவிதை மரபுகளின் அடையாளமாக கவிஞர் **அம்பி** நம்மத்தியிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் அக்கறைகள் பரந்து பட்டன. விஞ்ஞானம் கற்றலுக்கான புதுச் சொல்லாக்கம்; மாறிவரும் சூழலைப் பிரதிபலிக்கும் பாடவிதான அபிவிருத்தி ஆகியனவும் அவற்றுள் அடங்கும். தென்துருவத் தமிழ்ச் சிறார் கள் கற்பதற்கான அர்த்தமுள்ள பாடவிதானத்தை அவர் தந்துள்ளார். சிறாரின் வளர்ச்சியில் அவர் கொண்டுள்ள நீடித்த அக்கறையின் பயனாக 'அம்பிப் பாடல்' 'கொஞ்சும் தமிழ்' ஆகியன தமிழுக்குக் கிடைத்துள்ளன. அவருடைய நாற்பது ஆண்டு காலத்தின் கவிதை ஊழியத்தை முழுமையாகப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது.

'பழம் பெரும் எழுத்தாளர்களுடைய படைப்புகள் கௌரவிக்கப்படும்' என்று நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன் உங்களுக்குத் தந்த வாக்குறுதி இவ்வாறு செயலுருப் பெறுதல் கண்டு மகிழ்கின்றேன்.

டாக்டர் பொன்-அநுர

**1/23 Munro Street**
**Eastwood -2122**
**AUSTRALIA**
**1st November, 1994.**



படிப்பகம்

www.padippakam.com

# அணிந்துரை

**'அம்பி கவிதைகள்'** என்னும் புத்தகத்துக்கு நான் அணிந்துரை வழங்க வேண்டுமென்று தோழர் 'எஸ். பொ.' கேட்டுக் கொண்டபோது நான் சற்றே வியப்ப படைந்தேன். ''அம்பியா? கவிஞரா? எந்த அம்பி?'' என்னும் கேள்விகள் என் உள்ளத்தில் குமிழியிட்டு எழுந்தன. காரணம், **அம்பி** என்னும் இ. அம்பிகை பாகன் அவர்களை ஒரு கவிஞராக நான் இதயத்தில் இருத்திக் கொண்டிருக்கவில்லை. அவருடைய 'அம்பிப் பாடல்' என்னும் சிறுவர் இலக்கிய நறு மலரை நன்கு அறிந்தவன்தான்; கவியரங்குகளில் அம்பி பங்கேற்கிறார் என்பதையும் அறிந்தவன்தான். தமிழ் உலகின் ஈடு இணையற்ற இலக்கியத் திறனாய் வாளரான மாமனிதர் இரசிகமணி கனக. செந்தி நாதன் அவர்களால் 'ஈழத்துப் பேனா மன்னர்களுள்' ஒருவராக ஏற்றெடுத்துப் பாராட்டப்பட்ட அம்பியை யும் அறிந்தவன்தான். ஆனாலும், -1974 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாலாவது உலகத் தமிழ் (யாழ்ப் பாண) மாநாட்டின் போது, என் கைக்குக் கிடைத்த 'கிறீனின் அடிச்சுவடு' என்னும் புத்தகம் அம்பியின் மற்றச் சாதனைகளையெல்லாம் பின்னுக்குத் தள்ளி விட்டு என் நெஞ்சத்தில் நிமிர்ந்து எழுந்து நிற்கிறது.



படிப்பகம்

ஈழத்து இலக்கியத் தலைமக்களில் தலைமையான வரும் என் நண்பருமாகிய எஸ். பொன்னுத்துரை கேட்டுக் கொண்டதால், மிகுந்த நம்பிக்கையோடு 'அம்பி கவிதைகள்' கைப்பிரதியைப் பிரிக்கிறேன். அங்கே, ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள எட்டின் பெரும்பாலான பக்கங்களை ஊடுருவிக் கொண்டு எழுந்து தெரியும் 'ஈழத் தமிழரின் இன்றைய வாழ்வு' என்னும் பசுங்கொடி ஏறி நிமிர்ந்து என் இதயத்தையே சுற்றிக் கொள்ளுகிறது!..

'இசையில்....' என்னும் முதற் பகுதியில் அம்மா வைப் பற்றி ஒரு பாடல் வருகிறது. இசைப் பாடலாக இருந்தாலும், இதயத்தை உருக்கும் நன்றிப் பெருக் கும் நயமான இலக்கிய வளமும் பொதுளும் பாடல். 'அம்மா நீ தெய்வம், அணையாத தீபம்!' என்று தொடங்கும் இந்தப் பாடல்,

**கண் காத்த இமையே,**
**கருணைத் தேன் கடலே,**
**கரம் தந்த அருந் தெய்வமே,-வாழ்வு**
**வரம் தந்த பெருந் தெய்வமே!**

என்று முடியும் போது, நம் இதயமெல்லாம் உன்னத மான உணர்ச்சிகள் பீரிட்டடிக்கும் ஒரு தேனூற்றே பெருக்கெடுத்து விடுகிறது! மூன்றாவது பகுதியில் வரும் 'வளர் தெய்வம்' என்னும் பாடல் அன்பின் மூத்த வடிவமாகிய பாட்டியைச் சொல்லோவியம் செய்கிறது. ஒன்பது கண்ணிகள் கொண்ட இந்தப் பாடலின் ஒவ்வொரு வரியும் என்னை என்னுடைய இளமை நினைவுகளில் கொண்டுபோய் நிறுத்துகிறது. அவைகளின் மலர்ச்சியாக நான் பாடியுள்ள (அன்னை நீ ஆட வேண்டும்) பாட்டிகளையும் நெஞ்சத் தளத்துக்கு மீட்டுக் கொண்டு வருகிறது.

www.padippakam.com

,'நாட்டுப் பாட்டு என்றுள்ள நற்கருப்பஞ்சாறதனை பாட்டுப் பாட்டாக வயதோடு அளந்து அளந்து ஊட்டிய பாட்டி உனக்கும் கிடைத்திருப்பாள்- போட்டு நொறுக்கடா, பொய்த் துன்பப் பொய்ப் பேச்சை!,.''

இந்த இடத்தில்,— இனிமை தவழும், இந்தக் கனிவுக் கட்டத்தில்,—இவருடைய சந்த இனிமை கமழும் பாடல்களையும் நினைத்துக் கொள்ள வேண்டும்:

**காலைக் கதிர் அடி வானில் முளைக்குது**
**வீரம்மா—எடி வீரம்மா**
**காற்றினிலே சங்கொலி தாவி அழைக்குது**
**கேளம்மா — ஒலி கேளம்மா**

என்னும் சந்தத்தில் நடக்கும் வீரம்மா பாட்டிலும்,

**ஆறுதவழ் ஓரம் ஒரு ஆலமர நீழல்**

**ஆலமர நீழலிலே ஆறுகிற வேளை**

எனத் தொடங்கி ஓட்டமாக ஓடும் 'மனநோ' என்னும் பாடலிலும், ஏழாவது (இலங்கை வானொலி) கவியரங்கின் தொடக்கத்தில் கவர்ச்சிகரமாக நடைசிந்தும் சந்தப் பாட்டுத் தொகையிலும் எந்தப் பாட்டு எழிலார்ந்த சந்தம் உடையது என்பது கணிக்க முடியாத கடாவாக உள்ளது.

ஒரு கவியரங்கப் பாடலில், நாவலர் பேசுவதாக வரும் பின்கண்ட பகுதி அவருடைய வாழ்க்கைப் பணிகள் அனைத்தையும் ஒரே ஒரு பாட்டுச் சிமிழுக்குள் பிடித்து அடைப்பதாக உள்ளது:



படிப்பகம்

www.padippakam.com

பாலருக்கு எழுதி, எங்கள்
பாமரர்க்கு எழுதி, ஞான
சீலருக்கு எழுதி - எல்லாச்
சிந்தையும் திறந்து வைத்தேன்!

ஆறுமுக நாவலரின் பலதிற — பலதரப் பணிகளை அறிந்தவர்களின் நெஞ்சிலே தேனாகத் தித்திப்பது இப்பாடல். மொறீசியசுத் தீவில் பாடிய கவியரங்கத் திலேயே, 'தமிழ் தன் மக்களிடமே ந்நியமா அகிப் போகிறதே' என்னும் கவிஞரின் ஏக்கம் முளைகட்டத் தொடங்கி விடுகிறது, அடுத்துவரும் கவியரங்கிலும் அதைத் தொடர்ந்த அய்ந்தாம் பகுதியிலும் இறுதிப் பகுதியான குறுங்காவியத்திலும் இந்த ஏக்கமே படர்ந்து சடைத்து, கவிஞரோடு சேர்ந்து நம்மையும் ஏங்க வைத்துவிடுகிறது.

மொறீசியசு நாட்டில் தமிழின் அழிநிலையை ஒரு பாடல் பின்வருமாறு வினாக்கள் எழுப்பி வேதனை கக்குகிறது!

அன்பு வளர் சைவ ஆலயம் பூசைகள்
ஆசிபுரிதல் இன்பம் - எங்கள்
இன்பத் தமிழ்ப் பெயர் சொந்தப் பரம்பரை
சொல்லி வளர்தல் இன்பம் - ஆயின்
என்பிலே ஊறிய செந்தமிழ் நாவினை
ஏய்த்துத் திரிவதென்னே! - தமிழ்
மன்பதை வாயை மறந்து தமிழ் மொழி
மாயம் புரிவதென்னே!

மொறீசியசு நாட்டிலுள்ள 75 ஆயிரம் தமிழர்கள் தமிழ்ப் பண்பாட்டில் ஆர்வம் உடையவர்களாக இருந்



படிப்பகம்

தாலும் அவர்கள் தமிழ் பேச முடியாதவர்களாகிப் போனார்கள் என்பதை ஏக்கம் அளாவிய சொற்களில் இப்படி எடுத்துக் காட்டுகிறார் அம்பி. ஆயினும் அங்கே நடைபெறும் தமிழ் மீட்பு முயற்சிகளையும் கவிஞர் மறந்துவிடவில்லை. அந்த முயற்சிகளின் விளைவு வெற்றியாகக் கனிய வேண்டுமே என்னும் ஆர்வப் பெருக்கில் சில கேள்விகளை அடுக்குகிறார் அவர்:

**ஓடித் திரிகிற பாலகர் நெஞ்சிலே**

**ஒன்றித் தமிழ் வருமா?-தினம்**

**பாடித் திரிகிற பாவையர் நாஇசை**

**பண்ணில் தமிழ் வருமா? - பாடி**

**ஆடிக் களிக்கிற ஆடவர் வாயிலே**

**ஆர்த்துத் தமிழ் வருமா? - அன்பில்**

**கூடிக் களிக்கிற சோடிகள் ஊடலில்**

**கொஞ்சித் தமிழ் வருமா?**

இந்தக் கேள்விகளோடு, ஆஸ்திரேலிய நாட்டு சிட்னி நகரில் நடைபெற்ற கவியரங்கிற்குள் நுழைகிற நம் முன் ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து சென்ற சின்னத் துரை என்பவரையும் அவருடைய குடும்பத்தையும் அப்படியே கொண்டு வந்து நிறுத்துகிறார் கவிஞர். அயல்நாடு சென்றவுடன் 'துரை' என்னும் அவருடைய பெயரே 'டொறை' என மாறி விடுகிறது; 'கலகலெனத் தமிழ் பேசிய சிறுவர் கனிதமிழ் மறக் கின்றார்!' அந்த நிலையில், தமிழ்க் குழந்தைகள் வேற்றுமொழிக் குழந்தைகள் போல் மாறிவிட்டதை ஏற்க முடியாமல் ஏற்கிறார் கவிஞர்.

www.padippakam.com

**சூழல் மொழியே வாழும் மொழியாய்ச்**
**சுவைபட வளர்கிறது**
**வாழும் மொழியாய் வளரும் மொழியாய்**
**வாயில் தவழ்கிறது**
**நாளும் பொழுதும் நவிலும் மொழியே**
**நமதாய் வருகிறது**
**ஆளும் மொழியாய் நாளும் அதுவே**
**நாவில் திரிகிறது**

என்று கவிஞர் விளக்கங்கள் தரும்போது, தாய்மொழியை மறந்து அயல் மொழியில் மறுபிறப்புப் பிறந்து எப்படி எப்படியோ வாழும் தமிழ்க் குழந்தைகளின் அணிவகுப்பு ஒன்று நம் இதயத்தில் ஏக்க இருட்டைப் பரப்புகிறது.

'வழியில்....' என்னும் அய்ந்தாவது பகுதியில், மேலே எழுந்த ஏக்க வேதனையை நகைச்சுவை கலந்து நினைவு கூர்கிறார் கவிஞர். தாத்தா ஒருவர் ஓர் ஆப்பிள் பழத்தைக் கையில் எடுத்து அங்கு நின்ற 'தமிழ்ப் பிள்ளைகளிடம் (தமிழில் பேசஆசை கொண்டு) யாருக்கு வேண்டும் இது?' என்று கேட்கிறார். அவருடைய ஆசைப் பேரன் ஒருவன், ''நானுக்கு நானுக்கு நானுக்குத் தா என்று தான் சிந்தினான் தன்தமிழ்!'' எனக்கு என்னும் சொல்லாட்சியைக் கூடத் தமிழ்ப் பிள்ளைகள் மறந்துபோன நிலைமை இப்படிச் சித்திரிக்கப்படுகிறது. பெற்றோர் பார்த்து ஏற்பாடு செய்த மாப்பிள்ளையை நிராகரித்து மேல்நாட்டு மோகத்தில் தன் தாயையே தூக்கியெறிந்து பேசும் ஓர் இளம் பெண்ணை மற்றொரு பாடல் சித்திரிக்கிறது.

இதே போன்ற தமிழ் மொழிச் சிதைவு, தமிழ்ப் பண்பாட்டுச் சிதைவு போன்றவை புலம்பெயர்ந்த தமிழர்



படிப்பகம்

www.padippakam.com

களிடம் வெகு சாதாரணமாக இருப்பதை ஒருவிதமான ஏக்கக் கறை படிந்தசொற்களால் சித்திரிப்பதே இந்தக் கவித் தொகையின் இறுதியில் அமைந்த 'இரண்டு உலகம்' என்னும் குறுங்காவியம். இந்தக் கதை நியூகினியில் உள்ள பப்புவா என்னும் பகுதியில் நடை பெறுகிறது. கடற்கரையில் அமர்ந்திருக்கிறார் கவிஞர். அவர் கண்ணிலும் கருத்திலும் பல காட்சிகள் படர் கின்றன, அவைகளுள் ஒன்று.

**என் அருகாற் சென்ற பிள்ளை - ஆமாம்**

**எங்கள் தமிழ்க்குலக் கிள்ளை**

**தன்னருந் தாய் முகம் பார்த்து - 'மம்மி**

**ஷால் வீ கோ நவ்?' என நின்றாள்!**

தாயை மம்மியாக்கித் தமிழை ஆங்கிலமாக்கிய அந்தத் தமிழ்ப் பெண்ணைப் பார்த்ததும், ''நாங்களும் நாங்களாய் வாழ, தமிழ் நாவில் வளர வேண்டா மோ?'' என்று தம்மைத் தாமே கேட்டுக் கொள்ளு கிறார் கவிஞர். காலப்போக்கில் இவர்களெல்லாம் தமிழர்கள் என்னும் அடையாளமே அழிந்து போகுமே என்றும் அவர் ஏங்குகிறார்.

இத்தகைய எண்ணப் படைப்புகளை எழுத்தில் தேக்கி வரும் கவிஞர் யாழ்ப்பாணத்திலிருந்து நியூகினி யில் குடியேறிய சங்கரப்பிள்ளை ஆசிரியரைக் காண் கிறார். அவரும் குடியேறிய நாட்டுச் சூழலுக்கு ஏற்ப மாறிவிட்ட நிலையைக் கண்டு வருந்துகிறார். ஆயினும், வேறு வழியில்லாமல் சில மாறுதல்களை வலிதில் ஏற்றுக்கொண்ட அவருக்காகக் கசிகிறது கவிஞரின் உள்ளம். கடைசியில் ஈழத்தமிழர்களின் வாழ்வே 'இரண்டு உலகம்' ஆகிப்போன வரலாற் றைச் சில கேள்விகளோடு முடிக்கிறார் கவிஞர்:



படிப்பகம்

www.padippakam.com

நற்றமிழ் வாத்தியின் நாளைய செல்வமே
நம் தமிழ் கற்கவில்லை;
பெற்றவர் பண்பினைப் பேணி மதித்து அவர்
பிள்ளைகள் நிற்கவில்லை!
தொற்றிய பூமியின் சூழல் சுகங்களில்
சொந்தம் நிலைக்கவில்லை
மற்றொரு சந்ததி எண்ணம் எழுந்து அவர்
மார்பை அலைக்கவில்லை!
நாட்டைப் பிரிந்தவர் நெஞ்சிலே தம்புலம்
நாளும் தெரிகிறதா?
தோட்டம் துறவுகள் சொந்தம் உறவுகள்
சுற்றித் திரிகிறதா?
பாட்டி நினைவுகள், பண்பு பெருமனப்
பாங்கு விரிகிறதா?
மீட்டொரு சாதியை மேதினியில் விடும்
தாக்கம் புரிகிறதா?

இந்தக் கவித் தொகையைப் பாட்டியின் நினைவு களோடு தொடங்கிய அம்பிக் கவிஞர், பாட்டியின் நினைவுடனேயே இந்தக் காவியத்தையும் கவித்தொகையையும் முடித்திருப்பது ஆழ்ந்த கவனத்துக்கு உரியது. பாட்டி ஊட்டி வளர்த்த பண்பாடு வழி வழியாக நின்று நிலைக்க வேண்டும் என்று விரும்புகிறார் கவிஞர். புலம் பெயர்ந்த தமிழர்களின் புதுப்போக்கு (வாழ்க்கை) அவருடைய விருப்பத்துக்கே பெரிய அறைகூவலாக எழுந்து நிற்கிறது. இந்தப் போராட்டத்துக்கு முடிவு என்ன என்னும் கேள்வியும் அவர் நெஞ்சில் பெரிதாக எழுந்து நிற்கிறது. இந்தக் கவிதைத் தொகுதி பல்வேறு பொருள்களின் மீது படர்ந்திருந்தாலும், ஈழத் தமிழர் வாழ்விலே இன்று பெரிதாக எழுந்து நிற்கும் இரண்டு உலகச் சிக்கலே இந்தக் கவி



படிப்பகம்

www.padippakam.com

தைகளின் தலைமைக் குரலாக எழுந்து ஒலிக்கிறது. அதுவே, காலம் உணர்ந்து கவிதை செய்வதே அம்பியின் பாங்கு என்பதையும் அழகுற உணர்த்தி விடுகிறது. எனவே, 'அம்பி கவிதைகள்' என்னும் இந்தப் பாத் தொகுப்பு சிறந்ததொரு வெற்றிப் படைப்பாகத் திகழ்கிறது.

1992-ல் நான் படைத்து வெளியிட்ட 'ஈழத்துப் புலிகளுடன் 28 நாள்' என்னும் உரை வீச்சுத் தொகுதியின் ஓரிடத்தில் (பக். 25) பின் கண்ட அடிகள் வருகின்றன:

**வாயிலே வீரத்தோடு**
**பலபேர் இங்கே நடமாடிய காலத்தில்**
**ஈழத்துக்குப் போயிருக்கிறேன்:**
**இங்கு இருப்பவனை விட**
**அங்கு (ஈழத்தில்) இருப்பவன்**
**தெளிவுடையவனாக இருந்ததை**
**நேரிலேயே கண்டு மகிழ்ந்திருக்கிறேன்**

ஈழத் தமிழர்கள் எனக்குத் தந்த இந்த மகிழ்ச்சிக்குக் காரணமானவர்கள் பலர். அரசியல், கலை-இலக்கியம், பண்பாட்டுப் பரிமாற்றம் போன்ற பல துறைகளைச் சேர்ந்த தமிழர்கள் அவர்கள். அவர்களின் வரிசையில் மாமனிதர் கனக. செந்திநாதன், இலக்கிய ஏந்தல் எஸ். பொன்னுத்துரை, மணிக்கவிஞன் மஹாகவி, நாட்டுப்பாடல் அறிஞர் வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம், மில்க்வைட் வள்ளல் கனகராசா, கோவை மகேசன், கா. பொ. இரத்தினம், புதுமைலோலன் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். 1974-ல் 'கிறீனின் அடிச்சுவடு' என்னும் சிற்றேட்டைப் படித்த பின் அம்பி என்னும் இ. அம்பிகைபாகனையும் அந்த அணியிலே சேர்த்து எண்ணத் தொடங்கினேன்.



படிப்பகம்

www.padippakam.com

இன்று, அம்பி கவிதைகள் படிக்கக் கிடைத்தபின், நான் அவ்வாறு எண்ணியது சரியே என்பது வலுவாக உறுதிப்பட்டுள்ளது. ''தளிரொன்று எழுங்கால் சருகொன்று உதிர்ந்தே கழிவதுபோல், பழமை கழிந்து புதுமை மலர்ந்து இப்புவி வளரும் - எழுமின் விழிமின் என உள்ளச் சேவல் குரல் கொடுக்கப் பொழுது புலரும் - புது நாள் மலரும், மரபு அதுவே!'' என்று நம்பிக்கைக்குரல் கொடுக்கிறார் இந்தக்கவிஞர். ''ஒன்று பழுத்தால் இரண்டு தளிர்க்கும் உறுதியை எண்ணாமல், நான், 'ஓகோ நித்தம் அநித்தியம்' என்றே ஓலம் இடுவேனோ?'' என்று உறுதிக்குரல் கொடுக்கிறேன் நான். இந்த ஒற்றுமை வளையத்துக் குள் வந்துவிட்ட அம்பிக் கவிஞரை வேற்றாளாகக் கருதி நான் பாராட்டுச் சொற்களை அடுக்கலாமா? கூடாது! எனவே, மகிழ்ச்சி அடைகிறேன்; எனக்கும் ஏனைய தமிழர்களுக்கும் 'அம்பி கவிதைகள்' படிக்கக் கிடைத்ததை எண்ணி மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

பேராசிரியர்
**முனைவர் சாலை இளந்திரையன்**
**அமைப்பாளர்**

**அறிவியக்கப் பேரவை**
**பேரவை இல்லம்**
**சென்னை-600 086**



படிப்பகம்

www.padippakam.com

# என்னுரை

**பா-**

உள்ளத்து உணர்வுகளை, ஓசை தொடர்ந்து பரந்து ஒன்றி முழுமைதரும் மொழியில் வடிப்பது, பா. பா, பாவினம் என்பன தமிழ்ச் செய்யுள் மரபுவழி வந்த இலக்கிய வடிவங்கள்.

**கவிதை-**

காலப்போக்கில், பா, பாவினம் ஆகியவற்றுடன் சந்தக்கவி, சிந்து, கண்ணி... போன்றவையும் அணைந்து, இன்று பொதுவாகக் கவிதை எனப்படுகின்றன.

பாரதிக்குப்பின், இவை ஜனரஞ்சகம் அடைந்துள்ளன. ஓசை தொடர்ந்து ஒன்றி முழுமை தருவதால், பா, பாவினம் போலஇவை யாவும் செய்யுள் மரபை விரிவு படுத்தி, காலத்திற்கு ஏற்ற கோலம் பெறுவன என்பது மிகையாகாது; தவறாகாது! 1960-க்களில், (அமரர்)ஈழத்து 'மஹாகவி' உருத்திரமூர்த்தி அவர்கள், மரபுவழி நின்று புதுமைகாண விரும்பி எழுதிய 'குறும்பா' முயற்சி, இந்த விரிவாக்கல் முயற்சிகளுள் குறிப்பிடத் தக்கதாகும்.

**அம்பி கவிதைகள்-**

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக, பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, கவியரங்கம் ஆகியவற்றுக்குக் கவிதை எழுதியும், இன்றுவரை எனது கவிதைகள்



படிப்பகம்

நூலுருப் பெறவில்லை; இப்பொழுது **அம்பி கவிகைள்** நூலுருப் பெற்றுள்ளன. நூலுருப் பெறாத எந்த இலக்கிய வடிவமும் ‘மீண்டும் ஒருமுறை’ பார்வையிடவோ,இளைய தலைமுறை படித்தறியவோ வாய்ப்பு அளிப்பதில்லை. அதனால், ‘தொடர்பு சாதனம்’ என்ற பண்பையும் அவ்வாக்கங்கள் விரைவில் இழந்து விடுகின்றன.

**தொடர்பு சாதனம்-**

இலக்கிய வடிவம் எல்லாமே தொடர்பு சாதனங்கள். யாதும் ஒரு செய்தி அவற்றில் அடங்கி இருக்கும். எனினும், உணர்வும் ஆய்வும் ஒன்றிய கற்பனையும் அவற்றில் ஒன்றிணைந் திருக்கும். எனவே, கவிதையிலும் கவிஞன் ஏதோ ஒரு செய்தியை யே வாசகருடன் பகிர்ந்து கொள்கிறான். யான் மட்டும் என்ன விதிவிலக்கா?

**காலமும் கோலமும்-**

பழைய கவிதைகள் பலவற்றின், அன்றைய சமூக, அரசியல்சார் செய்திகளே விரவி இருந்தன. குறிப்பாக, தமிழரசு அரசியல் —அது இன்று பொருந்தாத செய்தி- சம காலப் பிரச்சினை அன்று. ஆக, பழைய கவிதைகள் பலவற்றைத் தவிர்த்தும் சில வற்றைக் காலத்துக்கு ஏற்பப் புதுக்கோலம் அளித்தும் இத் தொகுதி வெளிவருகிறது. சமகாலப் பிரச்சினைகளுள்ளும், புலம் பெயர் மக்கள், அவர்கள் அநுபவங்கள், ஏக்கங்கள், இன்றைய இளைய தலைமுறையின் எதிர்காலம் பற்றிய எண்ணம் ஆகியன செறிந்துள்ளன. பதினான்கு ஆண்டுகள் ‘புலம்பெயர்’ வாழ்வால்—பெருமளவில் புலம் பெயர்ந்துள்ள எமது சமூகத்தின் வாழ்வுக்கோலங்களை நேர் நேர் கண்டு அறிந்த உண்மை கலந்த கற்பனையும் உணர்வுமே அவற்றில் உள.

www.padippakam.com

சுருக்கமாக, இக்காலத்துத் 'திரவநிலை'ச் சரிதமொன் றைப் பல கவிதைகள் எழுத்திற் பதிக்கின்றன.

**முடிவுரை-**

இந்தக் குறிப்புக்களுடன், அம்பி கவிதைகள் என்ற இத்தொகுதியை வாசகரான 'திறனாய்வாளர்' முன் சமர்ப்பிக்கிறேன். பல இடங்களில் புணர்ச்சியைப் பிரித்து, இன்றைய வாசகருக்கு ஏற்ப இலகுவாக்கி உள்ளேன். எனினும், கவிதை ஓட்டமும் ஓசையும் கெடா வண்ணமே இதனைக் கையாண்டுள்ளேன். கவிதை ரசிகர்கள், 'ஆளைப் பாராமல் ஆட்டத்தைப் பார்ப்பார்கள்' என்பது என் நம்பிக்கை.

- அம்பி

*AMBI*
**(R. AMBIHAIPAHAR)**
**P.O. Box : 652**
**Konedobu-NCD**
**PAPUA NEW GUINEA**



படிப்பகம்

www.padippakam.com

நன்றி

★ கவிதையில் ரசனையை ஏற்படுத்தி, கவிச்சுவையில் தொடர்ந்து இன்பங்காண வழிவகுத்தவர் - எனது பிரதம தமிழ் ஆசான் - பரியோவான் கல்லூரி ஆசிரியர் 'கடவுள்' சுப்பிரமணியம் அவர்கள்

★ கவிதை எழுதத் தூண்டி, ஆரம்ப வழிப்படுத்தல் முயற்சியில் என்னை உற்சாகப் படுத்திவர்கள் எமதூராம் நாவற் குழியைச் சேர்ந்த
- நாவற்குழியூர் நடராஜன், த. தியாகராஜன் சு. வே, க. வ. தியாகராஜன் ஆகியோர்.

★ காலத்துக்குக் காலம் இடைவிடாது எழுத வைத்தவர் ஈழகேசரி இராஜ. அரியரத்தினம் அவர்கள்

★ தமது விமர்சனங்களால் என்னைத் 'தட்டித் தந்து' அம்பி கவிதைகள் நூலுருப் பெற வேண்டுமெனப் பல முறை வற்புறுத்தியவர் இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள்

-இவர்களுள், அமரர்கள் ஆகிவிட்ட 'கடவுள்' சுப்பிரமணியம், நாவற்குழியூர் நடராஜன், இரசிகமணி ஆகியோரைத் தவிர மற்றையவர்கள் கையில்கூட ஒரு பிரதி கிடைக்குமா என்ற ஏக்கத்துடன் அவர்கள் நன்றியை அச்சில் பதிக்கின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com

# அகிலமே வாழ்க!

ஒன்றென்றால் ஒன்றாய் ஒன்றும்
இன்றென்றால் இன்றாய் என்றும்
நன்றென்றால் நன்றாய் நன்றே
அன்றென்றால் அன்றே ஆகி
அன்றொன்றாய் இன்றும் ஒன்றாய்
அன்றின்றென் றொன்றும் இன்றி
என்றென்றும் ஒன்றே யான
ஒருவன்பொற் பாதம் போற்றி

ஒருவன்பொற் பாதம் போற்றி
ஒண்டமிழ் மறைநூல் பற்றி
வருமுணர் வினிலே நற்றாள்
வாலறி வாளன் சால்பு
திரிபிலா தொளிரக் கண்டும்
திருவுளங் கனியக் கண்டும்
அரியவாழ் வெடுத்த மாந்தர்
அகிலமே வாழ்க மாதோ!



படிப்பகம்

www.padippakam.com



## கருணைக் கண்

அவளுக்கோர் இணையெங்கும் இல்லை
அறிவுக்கும் அழகுக்கும் அவளேதான் எல்லை

அணுவுக்குள் கருவாகி நிற்பாள்
அழகின்உள் ஒளியாகி நிற்பாள்
துணிவுக்குத் துணையாகி நிற்பாள்
துயருற்ற நெஞ்சத்திற் சுடராகி நிற்பாள்

அரும்புக்குள் மொட்டாகி நிற்பாள்
அழகான மலராகி நிற்பாள்
விரும்புந்தேன் துளியாகி நிற்பாள்
விளைகின்ற பயிருக்குள் விதையாகி நிற்பாள்

கலையின் உட்கலையாகி நிற்பாள்
கதிரின் உட்கதிராகி நிற்பாள்
அலையின் உள்விசையாகி நிற்பாள்
அன்பாயும் அருளாயும் நெஞ்சத்தில் நிற்பாள்

படிப்பகம்

www.padippakam.com



மனவானில் மதியாகி நிற்பாள்
மதியுள்ளும் மதியாகி நிற்பாள்
வனமெங்கும் வனப்பாகி நிற்பாள்
வளம்பொங்கும் நிலத்துள்கனி வளமாயும் நிற்பாள்

பலமெல்லாம் அன்னாளின் நாட்டம்
பணியெல்லாம் அன்னாள்கொண் டாட்டம்
கலையெல்லாம் அன்னாளின் ஆட்டம்
கவியுள்ளம் அன்னாளின் கருணைக்கண் ணோட்டம்

அவளுக்கோர் இணையெங்கும் இல்லை
அறிவுக்கும் அழகுக்கும் அவளேதான் எல்லை.

படிப்பகம்

www.padippakam.com



# கண் இன்னொன்று வேண்டும்

காணக்கண் இன்னொன்று வேண்டும்
கந்தா நினதழகை -காணக்கண்

ஊனக்கண் இரண்டிருந்தும் உன்றன் அழகறியேன்
உள்ளந் திறந்தருளி உண்மைப் புலன் தருவாய்
-காணக்கண்

செல்வச் சந்நிதியில் ஏழை திருக்கைவேல் தேடி நிற்பேன்
சிந்தைக் கமலம் நின்றன் சீரடியில் சூடி நிற்பேன்
நல்லூர் மணி ஒலியின் நாத அலை புரள
நாதா சரவணனே நாடி நலிந்து நிற்பேன்
-காணக்கண்

மாவையிற் கோபுரம்முன் மயிலாடும் என்று நிற்பேன்
மண்டூர்ப் பதியில்ஐய மௌனியாய் வாடி நிற்பேன்
தாவிக்கந்த வனக்கடவைத் தலத்திலுனைப் பாடி
நிற்பேன்
சரணம் சரணம் என்று சங்காரவேல் தேடி நிற்பேன்
-காணக்கண்

மாணிக்க கங்கையிலே மணிநீரில் ஆடி நிற்பேன்
மகரமீன் போலமனம் மருண்டோடித் தேடி நிற்பேன்
காணிக்கை யாகநெஞ்சக் காவடி தூக்கி வந்தே
கதிர மலையில் ஏறி கந்தா வுனைப் பாடி நிற்பேன்
-காணக்கண்

www.padippakam.com



## அன்னை தமிழே!

வாழ்த்தி வணங்கி மகிழ்வோம் - உவந்து தலை
தாழ்த்தி வணங்கி மகிழ்வோம் - தமிழ் அன்னையை
-வாழ்த்தி

வாழ்க எம்மன்னை தமிழ் வாழ்க வளர்க என்றும்
ஆள்க அழகியல்போல் அறிவியல் நுட்பம் என்றும்
-வாழ்த்தி

ஆலால சுந்தரனின் அருளில் பிறந்தவளே
அகத்திய மாமுனியின் அணைப்பில் வளர்ந்தவளே
பாலாவி போல்வடிந்த பாவில் மலர்ந்தவளே
பாராண்டு வாழ்கவெனப் பாடிப் பரவிநின்றே
-வாழ்த்தி

நீரில் நிமிர்ந்து படர் தீயில் மலர்ந்து விரி
பாரில் வளர்ந்த பசும் பயிரே !
சூரர் வதைப்பினும் எச் சூழல் எதிர்ப்பினும் நம்
வேலன் கவசமணி சுடரே!
ஆதி சிவன் மடியில் ஆடல் பயின்றவளே
அன்னை தமிழே எங்கள் உயிரே !
நீதி நெறி மலர நெஞ்சில் குறள் ஒளிர
நின்று வளர்க அன்னை தமிழே !
-வாழ்த்தி

www.padippakam.com



# மாவை மணி ஓசை

மணி ஓசை அலை தாவி மனதில் கிங்கிணி பாட
மகிழ்ந் துள்ள மலர் ஆடுதே -மாவை

தணியாத பெருங்காதல் தவிப்பால் என் மனம் ஏங்கி
தமிழ் தேடி இசை பாடுதே -கந்தா

துணை நீயே வடி வேலனே - வேலின்
சுடர் தோன்ற இடர் நீங்குமே
இணையில் கோபுரம் போலவே - கந்தா...என்
இதயம் மேன் மேல் ஓங்குமே -மணி ஓசை

சூரன் போர் புரி காட்சியும் - தோகை
மயில் ஏறி வரும் மாட்சியும்
தேர் ஏறி உலா ஆட்சியும் - கந்தா...ஆ
தினம் ஏழை மனம் தேடுதே -மணி ஓசை

மாருதப் புரவல்லி யாள் - வாழ்வு
மலர்ந் தோங்க அருள் செய்தவா
தீரா என் பெரும் ஆவலை - கந்தா...நீ
தீர்த்தன்புக் கரங் காட்டுவாய் -மணி ஓசை

www.padippakam.com



## கண்ணா நீ எங்கே?

குழலோசை தவழு திங்கே - இன்பக்
குழலூதி மகிழ்கின்ற கண்ணா நீ எங்கே
களவாக மறைந்தே சென் றாயோ - அட
கண்ணாநீ மாயங்கள் செய்தே நின் றாயோ?

வெண்ணெய் திருடச் சென் றாயோ - இல்லை
விளையாடி குழலூதி மாயஞ் செய் தாயோ
பெண்கள் மென்னீராடும் வேளை - கண்ணா
பின்சென்றும் முன்சென்றும் குறும்பு செய் தாயோ?

மழைபெய்த இடந்தேடி - பெரு
மலையேந்திக் குடையென்று மாயஞ்செய்தாயோ
உளமஞ்சும் பாம்பாடக் கண்டே-அதில்
உடனேறி நின்றாடி நேயஞ்செய் தாயோ?

துகில்நீளச் செயநீ சென்றாயோ - இல்லை
துயிலின்றிப் பண்ணைகளில் சுற்றிச் சென்றாயோ
நிகரில்லாக் கன்னனிடஞ் சென்றே - அவன்
நிதஞ்செய்த தருமங்கள் பெறவே நின்றாயோ?

படிப்பகம்

www.padippakam.com



# என்ன கோலம் தேடுவேன்?

எங்கு சென்று தேடுவதோ
என்ன கோலம் தேடுவதோ
தங்க மயில் வாகனனே
தமிழ முதின் காவலனே!

பாட்டி தின்னச் சுட்டபழம்
பறித் தெறிந்த பாலகன் நீ
பழம் பெற்றான் அண்ணனெனப்
பழனி மலை சென்றவன் நீ

காட்டி னிலே தினைப் புனத்தில்
கதிர் கவர்ந்த பறவை களை
ஒட்டி நின்ற குறமகள் முன்
ஒடி கிழமாய் நின்றவன் நீ

அமரர் சிறை மீட்பதற்காய்
அருள் வடிவேல் தொடுத்தவன் நீ
அசுரர் குடி அழித்த வுடன்
அமுத ரசம் அளித்தவன் நீ

சமர்க் களத்து நாயகனே
தந்தை குரு வானவனே
சாந்தி யெனக் கரமெடுத்து
சஞ் சலங்கள் தீர்ப்பவனே

எங்கு சென்று தேடுவதோ
என்ன கோலம் தேடுவதோ
தங்க மயில் வாகனனே
தமி ழமுதின் காவலனே!

www.padippakam.com



## கத்ரபோன் குன்றில்...

சீர்சால் மொரிசியச் சீலரே வாரும்
செந்தமிழ்க் காவலன் வேலனைப் பாரும்
கூர்வேல் ஒளிர்கிற கத்ரபோன் குன்றில்
கோலம யில்வடி வேலனைப் பாடும்

ஏறிமேல் ஏறியே வாருங்கள் குன்றில்
ஈடில்லாப் பேரின்பஞ் சேருங்கள் நெஞ்சில்
மாறுபடுஞ் சூரர் மாயங்கள் தேர்ந்து
மாய்த்த சுடர்வடி வேலனைப் பாடும்

பழனி மலையிலும் பாலகன் வேலன்
பாடிவீ ட்டுக்கதிர் காமத்தில் வேலன்
பழமுதிர் சோலையில் செந்தூரில் வேலன்
பாருங்கள் கத்ரபோன் குன்றிலும் வேலன்

அன்புளக் காவடி ஆடியே வாரும்
அபய கரன்புகழ் பாடியே ஏறும்
துன்பச் சுமைகளைச் சூரரை மாய்க்கும்
சோதிச் சுடர்வடி வேலனைப் பாடும்

* கத்ரபோன் - மொரிசியசில் உள்ள Quatre Bornes

www.padippakam.com



# பொன் வளர் பூமியில்...

வாழிய செந்தமிழ் வளருக சைவம்
வாழிய தமிழ் இனமே - என்றும்
ஆளுக நின்றுதென் ஆபிரிக் காவினில்
அமைதியும் மீளுகவே !

வாழிய

சிந்தையில் சிவனருள் திருவொளி நிறைய
சீர்பொலி அம்மன் திருவிழி ஒளிர
விந்தை செய் முருகனின் வேல் துணை புரிய
வீர சுதந்திர உணர்வினில் உயிர்த்தே

வாழிய

தில்லையாடி புகழ் வள்ளியம் மாள்பணி
திருநாரா யணசாமி நாகப்ப னாருடன்
செல்வன் எனும்வளர் சீலரின் சேவைகள்
தினமொளி விளக்கென சிந்தையில் ஒளிர

வாழிய

நீரென அன்றவர் வியர்வையைச் சொரிந்தார்
நிலமகள் குளிர்ந்தாள் நிறைவளம் சுரந்தாள்
ஊரினில் இன்தமிழ் ஒண்கலை ஓங்கவும்
உழைத்தவர் மனம்போல் உயர்பணி வென்றே

வாழிய

தென்ஆ பிரிக்கத் தாயகம் ஒளிர்க!
செந்தமிழ் இனமென்றும் சீர்பணி தொடர்க!
பொன்வளர் பூமியில் புதுயுகம் மலர்க!
பொலிவினில் தாயகம் புன்னகை புரிக!

வாழிய

www.padippakam.com



## அரங்கேற்றம்

பூங்காற்றே பூங்காற்றே
பூச்சொரிந்து வாராயோ!
ஈங்கொலிக்கும் இசையலையை
எத்திசையும் சேராயோ!

-பூங்காற்றே

ஆடற்கலை பயின்றுவிட்டேன்
அழகுமலர் சூடிவிட்டேன்
பாடலின் உட்பொருள் உணரும்
பக்குவமும் பெற்றுவிட்டேன்
ஏடுசொல்லும் முத்திரைகள்
எடுத்துவிரல் கூறுகையில்
சோடிணையும் முகபாவச்
சுந்தரமும் கற்றுவிட்டேன்

-பூங்காற்றே

தத்தித்தொம் தாள ஒலி
ததிங்கிணதொம் மேள ஒலி
ஒத்திசைக்கச் சேர்ந்தொலிக்கும்
என்பாதச் சதங்கை ஒலி
எத்திசையும் ஆர்க்கையிலே
என்மனசு பூக்கையிலே
தத்திவந்து சேர்த்தணைத்துத்
தாவி எங்குஞ் சேராயோ!

-பூங்காற்றே

படிப்பகம்

www.padippakam.com



# எழுவான் கரையில்

எழுவான் கரைநகரில் இளமாலை வேளை
ஏரிமரஞ் செடிகொடிகள் எழில் தந்த சூழல்
தழுவிவிரை பூங்காற்றுச் சதுராடித் தாவ
தனிமைதரும் உணர்வில்நிம் மதிதேய்ந் திருந்தேன்

ஓமென்ற மணிநாத ஒளியொன் றெழுந்தென்
னுணர்வோடங் குறவாடி உயிர்தந்து நிற்க
மாமாங்கப் புகழ்பாடி மனவோசை பாய்ந்து
மதுசிந்துந் தமிழ்பாட விசையொன்று முந்தும்

முந்துவிசை யுந்துகிற மூச்சினிலே நெஞ்சில்
முத்தமிழும் மான்மியமும் முளையரும்பு கொள்ள
செந்தமிழைப் பாடவடி தேடமுதற் படியாய்
திருவருளைப் பெறுகவெனத் திருவுள்ளஞ் சொல்லும்

அமிர்தகழித் தீர்த்தத்தில் அமுதாய்நீ ராடி
அருகிலுள ஆனைமுகன் அருள்தேடிப் பாடி
குமரிமணித் தமிழ்பாடிக் குணந்தேடிப் பாடி
குழந்தையுளம் ஆய்ந்தவர்க்குக் கொஞ்சுதமிழ் பாடி

வான்பாடி மீன்பாடி வளருலகம் பாடி
வண்டமிழில் அறிவியலின் வளம்பாடிப் பாடி
மீன்பாடுந் தேனாட்டில் மீளவடி வைக்க
மிகவாசை கொண்டின்றும் தமிழ்பாடு கின்றேன்

படிப்பகம்

www.padippakam.com



## இறைவா!

தேடுகின்றேன் உண்மையை - தெளிவுபெற
பாடுகின்றேன் நின்னையே - இறைவா
-தேடுகின்றேன்

கோடிபல கோடியுயிர் கொம்பனென மோதுலகில்
வீடெரிய நாடெரிய வீதிபல ஓடிநின்றே
-தேடுகின்றேன்

கோயில்மணி நாதமெழ கூப்பியிரு கரமெடுத்தே
கோபுரத்தின் நீழலிலே கொள்கை தெளியநின்றும்-ஓர்
தாய்மகவே நாங்களெல்லாம் சோதரர்கள் என்றநபி
நாயகனை நாடிப்பள்ளி வாசலிலே மண்டியிட்டும்
-தேடுகின்றேன்

போதிமர நீழலிலே பொற்கதிரைக் கண்டபிரான்
புத்தன் விகாரையிலே பூவினங்கள் சேர்ந்து
நின்றும்-மனு
நீதிநெறி ஓங்கவென நின்றழுந்திச் சிலுவையிலே
நெஞ்சம் நிறைவுபெற்ற யேசுவழி நாடிநின்றும்
-தேடுகின்றேன்

எல்லாமத மார்க்கமுமே ஈசன்ஒன்று சொல்லிநிற்கும்
தொல்லுலகில் தூயஅன்பே தெய்வமெனச் சாற்றி
நிற்கும்
கொல்லையிலே பார்க்கையிலே கொள்கையின் வேர்
காய்கிறதே
எல்லையிலா ஈசாவுனை எங்குசென்று தேடுவதோ!
-தேடுகின்றேன்

www.padippakam.com



# சொல்லடி தென்றலே!

என்னென்று சொல்லடி தென்றலே கோபம்
என்னென்று சொல்லடி தென்றலே!

வானப் பெருங்கடல் வீதியில் - நின்று
வண்ண நிலவொளி சொட்டுதே!
ஏன் அந்த அம்புலி பக்கம் நீ - என்றும்
சென்று தழுவிய தில்லையாம்!

ஏனென்று சொல்லடி தென்றலே - கோபம்
என்னென்று சொல்லடி தென்றலே!

பாவையர் தேடுற வெண்ணிலா - நாங்கள்
பாவலர் பாடுற வெண்ணிலா
கோபம் அதா, எடி தென்றலே - இல்லை
கொள்கை பிறிதுண்டா தென்றலே!

என்னென்று சொல்லடி தென்றலே - கொள்கை
என்னென்று சொல்லடி தென்றலே!

போட்டி மனவெறி உந்தலா - இல்லை
போலி அழகென்ற கிண்டலா?
ஒட்டம் எடுத்தங்கு மாந்தரே - ஓடி
ஒய்வெடுப் பாரென்ற தண்டமா!

என்னென்று சொல்லடி தென்றலே - கோபம்
என்னென்று சொல்லடி தென்றலே!

www.padippakam.com



## மாங்குயிலே!

மாங்குயிலே மாங்குயி லே
மாங்குயிலே நீ கூவு -கூ
கூவென்றுன் குரலெடுத்து
கொஞ்சுமிசைக் குழலூது

காலையிலே நீ கூவு
கானவிசைக் குழலூது-மென்
மாலையிலும் மைம்மலிலும்
மணிக்குரலில் நீ கூவு

சொட்டுகிற சுவையுடன் என்
சுந்தரி நீ குரலெடுப்பாய்-நான்
ஒட்டி ஒட்டி ஒளிந்திருந்தே
ஒன்றிணையத் துடிதுடிப்பேன்

மெட்டெடுத்து நீ கூவ
மீதியடி நான் கூவ-நான்
விட்ட குறை நீ தொடர
விருந்தெல்லோ ஒரு காலம்

மாங்குயிலே நீ கூவு
மாலையிலும் காலையிலும்-நான்
ஆங்கில்லை என்றாலும்
ஆசியுண்டு நீ கூவு

என்குரலை எதிர்பார்த்தே
ஏமாற்றம் அடையாதே-உன்
இன்குரலில் நீ கூவு
இசைச்சூரி நீ கூவு

www.padippakam.com



## மாயங்கள் ஏன்?

மல்லிகைப் பூங்கொடி
வேலியிலே நின்று
மாயங்கள் செய்வதும் ஏனடியோ?
சொல்லத் துடிக்கின்ற
சேதிகளைச் சொல்ல
சுந்தரிக் கேளிந்த நாட்டியமோ?

சொல்லித் தெரிகிற
சேதியென் றால் அதைச்
சொல்ல ந் தடைகளோ ஏதுமில்லை
எல்லை கடந்தங்கே
ஏங்கிநிற் குங் கொம்பில்
எட்டிப் படரவும் ஏலவில்லை

எல்லை கடந்தென்னில்
தாவிநின் றாலுன்னை
ஏந்தி மகிழ்ந்துடன் ஆடிநிற்பேன்
மெல்ல வருந்தென்றல்
காற்றினிலே நீந்தி
மேனிமலர்ந் தெழில் சூடி நிற்பேன்

www.padippakam.com



## ஆசை

ஆசைக்குப் பலியானால்
அழிவே அம்மா -எங்கள்
ஆசைக்குப் பலியானால்
அழிவே அம்மா

ஊசல்போல் அலைகின்ற
உள்ளத்தின் வழி சென்றால்
ஈசல்போல் சுடர் சுட்ட
இறகோடு தரை வீழ்வோம்
-ஆசைக்கு

அழகான மருள்மாய
மான்போலவும் -ஆசை
அலைவுக்கு முன்சிக்கல்
வலை வீசலாம்
அழிவின்முன் அகங்கொள்ளும்
உணர்வாகவும் ஆசை
அகந்தைக்கு வழிகாட்டி
அடி சாய்க்கலாம்
-ஆசைக்கு

பெண்ணாகி மண்ணாகி
பொன்னாகியும் -ஆசை
பொருள் காணும் புலன் கொல்லும்
மருள் ஆகலாம்
ஒண்ணாத எண்ணத்தின்
கருவாகியும் -ஆசை
எமதுள்ளே இணைந் தொன்றி
எமை வீழ்த்தலாம்
-ஆசைக்கு

அ.க -3

படிப்பகம்

www.padippakam.com



## நீ தெய்வம்

அம்மா நீ தெய்வம்
அணையாத தீபம்
அதுசொல்லி நான் பாடவா -எந்தன்
அன்புள்ள மலர் சூடவா
இம்மா நிலத்தில்
எனை வாழவைத்த
இதயத்தின் குரல் பாடவா -அம்மா
இறையென்று துதி பாடவா?

ஈரைந்து மாதம்
எனை நீ சுமந்தாய்
பேரின்பம் அதுவே என்றாய் -உன்றன்
பெருஞ் செல்வம் நானே என்றாய்
நேரந் தெளிந்தே
நிதஞ் சேவை செய்தென்
நெஞ்சத்தில் கோயில் கொண்டாய் -மன
மஞ்சத்தில் உலாநீ வந்தாய்

www.padippakam.com



பாலூட்டி வளர்த்தாய்
பலவின்னல் சகித்தாய்
பாசத்தின் உருவாய் நின்றாய் -தமிழ்ப்
பண்பூறக் கருவாய் நின்றாய்
தாலாட்டி வளர்த்தாய்
தமிழூட்டி நிலைத்தாய்
சாந்தத்தின் பொருளாய் நின்றாய் -மறை
தர்மத்தின் தமிழாய் நின்றாய்

உண்ணாத பொழுதும்
உறங்காத இரவும்
எந்நாளும் மறவேன் அம்மா -எந்தன்
இதயத்தில் அணையாதம்மா
கண்காத்த இமையே
கருணைத் தேன் கடலே
கரந்தந்த அருந்தெய்வமே -வாழ்வு
வரந் தந்த பெருந் தெய்வமே.

படிப்பகம்

www.padippakam.com



## வருக புது யுகமே

வருக வருக நீ வருக - புது
யுகமே வருக நீ வருக
தருக இத்தாரணியில் அமைதி - மனத்
தாமரையில் தேனமுதம் நிறை நீ

புத்தம் புதுயுகத்தில்
பூத்து மனிதமனம்
பூங்காவைப் போலவெழில் பெறவேண்டும்
சித்தந் தெளிந்து பஞ்ச
சீலம் தெளிந்து வளம்
சேர்ந்தே மனம்புனிதம் பெறல்வேண்டும்

நித்தமுளத் தேனருவி
நீதிவழி தேர்ந்துணர்ந்து
நெஞ்சம் புதுப்பொலிவு பெறல்வேண்டும்
தித்திக்குஞ் சிந்தனைகள்
செயலாக மாறி மணித்
தேரேறி இன்பவுலா வரல் வேண்டும்

தேனூறுஞ் சிந்தனைகள்
தேரேறி வந்துலவிச்
செல்லுகையில் நெஞ்சுயிர்ப்புப் பெறல் வேண்டும்
கூனல் நிமிர்ந்து மனக்
கோயில் திறந்து வளர்
கோபுரமாய் ஓங்குநிலை பெறல்வேண்டும்

கோனார்நாம் என்றுவளர்
கொள்கை கொலுவிருந்து
கோடியின்பஞ் சேருகிற நிலைவேண்டும்
மாநிலத்தின் மக்களினம்
மக்களினப் பண்புயிர்த்து
மானிடராய் வாழுநிலை பெறல்வேண்டும்

www.padippakam.com

# அலைகளில்...

புலம் பெயர்ந்த்
தமிழர்தம்
உணர்வு அலைகளிலே..

படிப்பகம்

www.padippakam.com



கற்பகமே!

சலனம்

சகடக்கால்

அழியுநான்!

வெல்க

உறவு

ஓடிடும் தமிழா!

மண்ணில் இணைந்தால்...

படிப்பகம்

www.padippakam.com



## கற்பகமே!

காலம் முழுதும்
அடி கற்பகமே!

நான் பாடி நின்றேன்!
ஓலை கிழித்தேன்
ஓடியல் இடித்தேன்
உறுவிசைசேர் போலிக்கள்-போதை-எழ
உன் புகழ் உரைத்தேன்!
ஆயினும்-

ஓர் ஆலை அமைத்து
உன் சுவையை
உலகறியச் செய்திலனே!

இள நுங்கைத் தோண்டி

தனியோ
பலாவின் சுளையுடனோ
அளவாக
தீம்பாணிச் சேர்வை கலந்தும்
பதன் செய்தும்

வளம்தேர்ந்த நுட்ப மதியோர்
தகரத்து அடைத்து அனுப்ப,
சுவைத்தேன்!
மகிழ்ந்தேன்!
தயிலாந்தைப் போற்றடி
என் கற்பகமே!

படிப்பகம்

www.padippakam.com



## சலனம்

அலைகிற ஊசல் ஆடி
அலைவதோர் ஈர்ப்பின் கோலம்
விலகிநாம் செல்லச் செல்ல
விடாதெமை ஈர்க்கும் காலம்
புலம்பெயர்ந் தோடி எங்கு
புதுமனை அமைத்த போதும்
நிலையிலா மனதிற் கோடி
நினைவுகள் கவ்விப் பற்றும்

பற்றிய பற்றிற் பல்கிப்
பழையநாள் பிறந்த பூமி
இற்றைநாள் வாழ்வு பெற்ற
இளசுகள் வளரும் பாங்கு
உற்றவர் உறவோர் சொந்த
ஊர்நிலை எல்லாம் நெஞ்சில்
தொற்றிநின் றழுத்தும் தொன்மை
தொலைந்தவை தோழில் தொங்கும்

கனவென இழந்த தெல்லாம்
காலநுண் சரிதஞ் சொல்ல
இனியந்நாள் வருமோ என்றெம்
இதயமீ டாடும் ஈர்ப்பில்
மனதலை மத்தாய்ச் சுற்ற
மறைந்தவை திரளும் வேளை
நினைவுகள் மொய்த்து மொய்த்து
நெஞ்சிலோர் சலனம் தாவும்

படிப்பகம்

www.padippakam.com



# சகடக்கால்

ஓடி ஓடிச் செல்லு கின்ற தம்பிகேள்
ஓடி நாடிச் செல்வ தெங்கே நின்றுகேள்
வீடு வாசல் காணி பூமி விற்றுநீ
விட்டில் போலச் செல்வ தெங்கே என்றுசொல்!

ஐந்து பத்து லட்சம் என்று வீசிநீ
ஆறு மாதம் அங்கும் இங்கும் நின்றுநீ
நொந்த நெஞ்சுத் தந்தை தாயை விட்டுநீ
நூறு கோடி ஆசை கொண்டு செல்கிறாய்!

நாட்டை விட்டு அப்பர் அன்று துரத்தினார்
நமது நாடு நமதே என்று விரட்டினார்
ஓட்டி விட்ட அந்த மக்கள் நாட்டிலே
ஒன்றி ஆகி இன்று நீயே நிற்கிறாய்!

ஒன்று பட்டுச் சோவியத்து நின்றதும்
ஒவ்வொன் றாகி மோதி மாய்ந்து நிற்பதும்
நின்று நாளை என்ன கோலம் கொள்ளுமோ...
நெஞ்சில் இந்த நிலைகள் எண்ணிச் செல்கநீ!

விகடம் அல்ல பகிடி அல்ல தம்பிகேள்
வெந்த நெஞ்சில் வெண்ணெய் விழச் சொல்கிறேன்
சகடக் காலின் அசைவு கொண்ட உலகிலே
தமிழன் என்ற தனித்து வத்தைப் பேணு நீ!

அ.க. -4

www.padippakam.com



# அழியுநாள்!

அந்தர உலகில் நாளும்
அறிவியல் வளர்ந்து வேகம்
உந்திமுன் தள்ளத் தள்ள
உள்ளமும் மாறும் கோலம்!
வந்தனை கோலம் இந்நாள்
வாழ்க்கையின் பொருளை மாற்றி
மந்திகள் தாமுந் தாவா
மரத்திலே தாவல் ஏனோ!

பெண்மையைத் தேடும் ஆண்மை
பெற்றதில் அமைதி காணும்
வண்மையைத் தேடும் பெண்மை
வளமுள சுகமுங் காணும்
ஒண்மையும் உயிரும் தந்தவ்
வுறவிலோர் இனிமை கண்டு
தண்மையில் மலர்தல் இந்தத்
தரணியில் இயல்பே - ஆனால்

அவனுடன் அவனும் ஆசை
அவளுடன் அவளும் வாழத்
தவிதவித் தணைந்து தம்இல்
தாமமைத் தழியு மாக்கள்
பவணிவந் தணியாய்ச் சென்று
பாரிலே உரிமை கோரும்
அவயுகம் அந்தோ மக்கள்
அழியுநாள் விடியு தாமோ?

www.padippakam.com



# வெல்க

ஆழிகள் அலைகள் தாண்டி
அருந்தமிழ் வாழ்க என்றும்
வாழ்கநம் கலைகள் என்றும்
வளம்பல பெறுக என்றும்
ஆளும்நன் நிலைக்கெஞ் சொத்தை
அகமுவந் தெடுத்துச் சென்று
தோளிலே சுமக்கும் சேவை
சொல்லரும் பணியே அம்மா!

தமிழ்மொழிப் பற்றால் நெஞ்சம்
தழைத்துயிர்த் துரமும் பெற்றோர்
அமிழ்தெனும் இலக்கி யப்பெண்
அணைப்பினால் ஆர்வம் பெற்றோர்
தமதுளம் மலரப் பாரில்
தமிழ்ப்பணி வளர்க என்றும்
அமைதியாய்ச் சேவை செய்க
அரும்பணி தொடர்ந்து வெல்க!

படிப்பகம்

www.padippakam.com



பழமையை ஆய்ந்து கற்றுப்
　பரப்பினைப் பசுமை செய்து
வளமெலாம் ஆய்ந்த பின்னர்
　வருநிலைக் கேற்ப எங்கள்
அழகுறு தமிழும் பண்பும்
　அணிவகுத் தோங்கி வாழக்
கழகமொன் றமைத்துப் பல்நாள்
　கனிதமிழ் பணிகள் வெல்க!

எத்தொழில் செய்தால் என்ன
　எம்மொழி கற்றால் என்ன
எத்திசை சென்று வாழ்வை
　இயக்கநீர் முயன்றால் என்ன
அத்திசை எல்லாம் எங்கள்
　அருந்தமிழ் வாழப் பாதை
நித்தியம் அமைத்து வாழ்க
　நின்றுநும் பணிகள் வெல்க

படிப்பகம்

www.padippakam.com



## உறவு

அணைத் தாலும் அடித்தாலும்
கரம் ஒன்றுதான் - அம்மா
இணைத் தாலும் பிரித்தாலும்
இழப் பொன்றுதான்
குணத் தாலும் மனத்தாலும்
குலம் ஒன்றுதான் - அம்மா
இனித்தாலும் கசந்தாலும்
உற வொன்றுதான்!

உற வென்ற உணர்வொன்றில்
உளம் ஏங்குதே - இங்கு
பிறனென்ற நினைவொன்றில்
பிணி ஓங்குதே
சிறை ஒன்றில் உடலொன்று
தினம் வாடுதே - ஆயின்
குறை வின்றி உளமொன்று
தமிழ் பாடுதே!

என் நாடு என் மக்கள்
என் சூழலே - நெஞ்சில்
எந் நாளும் எழுந் தோங்கி
எனை வாட்டுதே
பொன் னாடு விட்டோடிப்
பரதேசி நான் - இனி
எந் நாடு என்நாடு
எனச் சொல்லுவேன்?

படிப்பகம்

www.padippakam.com



கடலென்ன மலை என்ன
அணை யோடுமா - இந்த
உடலென்ன உளம் என்ற
உலை மூடுமா?
தடை யின்றி மன வோசை
தமி ழாகுதே - அந்தக்
கொடை ஒன்றால் மது சிந்தி
மனம் ஆறுதே!

அணை இன்றி நினை வுந்தி
அகந் தேயினும் - என்றும்
துணை என்று தமிழ் நின்று
உற வானதே
தனி மைக்குத் துணை என்று
தமிழ் ஊறுதே - நெஞ்சில்
இனி மைக்குக் கவி பாடி
உள மாறுதே!

படிப்பகம்

www.padippakam.com



# மண்ணில் இணைந்தால்...

அப்போலோ என்ற
அதுபோய் அழகாய் அறிவியலில்
தப்பே இலாது
சொயுசைத் தொடர்ந்து தலைகொடுத்து
செப்பற் கரியவோர்
நுட்பத் தொழிலின் திறன் நிறுவி
எப்போதும் வாழும்
எழிலார் நினைவை எழுப்பியதே!

ஈர்ப்பை எதிர்த்தங்கு
எழுந்தும் சுழன்றும் இணைந்து பசி
தீர்த்துக் குலவத்
திசைகண்டு அணைத்த திருவுளத்தோர்
போர்த்தேர் செலுத்தும்
புலனை அடக்கிப் புவிதழைக்கப்
பார்த்தோர்நற் பாதை
வகுத்தாலிப் பாரில் பலன்பலவே!

படிப்பகம்

www.padippakam.com



இருவேறு அமுக்க
நிலையில் இருந்தோர் இணைகையிலே
வரும்அந் நிலையை
வளமாய் வகுத்து வழி சமைத்து
வருக எனக்கை
பிடித்துக் குலுக்கும் வளர்மதியோர்
உருகும் உளங்கொண்டு
உலகுந் தழைக்க உளங்கொளுமே!

விண்ணில் இணைந்து
இவ்வுலகே வியக்க வினைபுரிந்தீர்
மண்ணில் இணைந்தால்
மனித குலமும் மதிப்புகழும்
எண்ணற் கரிய
இனிய வளங்கள் எமதகத்தில்
தண்ணென்று எழுந்து
தரணி உயிர்த்துத் தளிர்விடுமே!

www.padippakam.com




மனசிலே ஏற்படும்
சலனங்கள்
தாக்கங்கள்
அனைத்துமே
கவிதைக்கான
பொருள்களே...

படிப்பகம்

www.padippakam.com



புலரிப் பொழுதிலே
சொல்லுந்தரமோ சுவை!
நிறைவான உலகு
இன்பம்
விசித்திரம்
உழவன் திருநாள்!
ஏணி
ஆட்சி நடத்த விடு
போனேன் இல்லை!
மனித குலமே
வீரம்மா!
அகதி
மனநோ
மரபு
வா!
தீண்டாமை நன்று
பிடி அரிசி
துடிப்பு
வளர் தெய்வம்
ஜய் கவிரசிக!
புலவன் தொழில்!
இரசிகமணி
பொதுமை
குமரிக் குன்றிலே
கவியமுதம்
கவியரசி!
வெண்பாவாய்
தனிமை
இலக்கியப் பெண்
செங்கோன்மை
நாமகள் போற்றுதும்
தேவசுதன்
ஞானப் பெண்ணே!

படிப்பகம்

www.padippakam.com



# புலரிப் பொழுதிலே

அழுத மனதில்
அரும்பும் முறுவலெனப்
பொழுது புலர்ந்து
போதலரும் முன் பாக

"நித்திரையா அத்தான்
நீளிரவில் ஓர் தூக்கம்
இத்தரணி பூக்கும்
இவ்வேளை பேய்த் தூக்கம்"

என்றென் னருகணைந்த
என்னாசைத் தேன்குரலும்
தென்றல் எனத் தழுவித்
தேன் சொரிந்த பூங்கரமும்

ஆழ்ந்த துயிலில்
அயர்ந்துகனாக் கண்டவெனைச்
சூழ்ந்து தழுவிச்
சுயநினைவில் சேர்த்தனவே

கண்விழித்துப் பார்த்தேன்
கற்பனையே அல்ல அல்ல
தண்ணிலவு பொங்கித்
தவழுகிற சோபையுடன்

பூத்துக் குலுங்கிநின்ற
பூங்கொடியாள் என்னருகே
பாத்தவழும் பார்வையுடன்
பாசமொழி பேசிநின்றாள்

படிப்பகம்

www.padippakam.com



யான்நோக்குங் காலை
நிலன்நோக்கும் அந்நிலைபோய்
தான்நோக்கி நின்ற
தளர்மதியாள் சால்புணர்த்தி

ஈர்க்கும் இருவிழியால்
இதயத்தைச் சொல்லிநின்றாள்
பார்த்தேன் அவள் பார்த்தாள்
பக்கத் தமர்கவென்றேன்

ஊடல் உணர்தல்நிலை
ஓர்பால் அகன்றதெனக்
கூடும் நிலைமை
கொலுவிருந்த நெஞ்சுடனே

வாடி எனக் கட்டி
வாரி அணைக்கையிலே
ஓடிவந்த கண்ணன்
ஓகோ எனமகிழ்ந்து

நானிங்கே என்றுசொல்லி
நம்மிருவர் ஊடமர்ந்து
தேனமுதைச் சிந்திச்
சிரித்து மகிழ்ந்திருந்தான்

யான் அவளைப் பார்த்தேன்
இதயக் கதைசொல்லித்
தான் மெல்லக் கீழே
தரைபார்த்தாள் தண்மதியாள்!

www.padippakam.com



# சொல்லுந் தரமோ சுவை!

சீருஞ் சிறப்புஞ் சிரிக்கின்ற வைகறையிற்
பூரிப் படைந்து புலருகிற நெஞ்சம்போல்
வானில் உயர்ந்து வளர்ந்து செறிந்திருந்த
சேனை இருளுஞ் சிதைந்து கரையக்
குருவி இனமெல்லாங் கூடிக் குலவிப்
பெருகுங் களிப்புந்திப் பேசத் துடிக்க
விதியின் விளைவால் விளைவறியா துள்ளஞ்
சதியெண்ணி விழ்ந்து தனியன்றயில் மாய்வது போல்
கூடைச் சிறையிற் கொலைத் தண்டனைக்காளாய்
மூடிக் கிடந்து முழுஇரவும் ஏங்கியபின்
கோடி அருகினிலே கூவத் துடித்தவொரு
சோடி...அவற்றினது சொந்தக் குரல்கேட்டுக்
கீழ்வான் வெளுக்கக் கிளரும் மன உணர்வில்
மூழ்கி உலகினிலை முற்றும் மறந்தேன்
சுருண்டு படுத்தறிவுச் சுக்கானில் எண்ணம்
உருண்டு புரள உளமிழந்த வேளையிலே,
இப்பார் அறியா இயல்பால் இடந்தேடி
அப்பாஎன் றன்பாய் அணையத் தவிதவித்த
தப்பேதுஞ் செய்யாத் தளிரை விழித்துப்போ
அப்பாலே என்றேன்! அசைந்தாளோ? சொக்காது

www.padippakam.com



சொக்காதா என்று சொரிந்தாள் அமுதமழை!
நெக்காத நெஞ்சம் நெகிழ்ந்து கனிந்ததம்மா!
தேடி அடைந்த திரவியத்தை நெஞ்சத்திற்
கோடி புனைந்துடனே கொஞ்சி அணைத்தேனே
அந்தப் பொழுதை அறிந்தோ பணிந்தருகே
வந்தாள் அவளும் வளரன்பு காணுதற்கே!
வையம் முழுதும் வனப்பவிழுங் காலையிலே
மைம்மற் பொழுதில் மகிழ்ந்து மதுநீர்சேர்
பொய்கை முழுகிப் புதிது மணிந்துமலர்
கொய்து பரப்பிக் குலதெய்வங் கும்பிட்டு
ஆடி ஒடிந்தே அணைந்தாள் அவளிதய
நாடி அறிந்து நவசிந் தனையூறும்
கண்ணிற் கயலாள் கருமுகிலிற் றண்மதியாள்
பண்ணிற் றமிழாள் பவனிவரப் பார்த்துமனக்
கற்பனைகள் ஓங்கும்! கடையி லொருமலிவு
விற்பனையிற் கண்ட விலைகுறைந்த அத்தனையுங்
கட்டிச் சுமந்த கடனழியா விட்டாலுமீ
எட்டா வெளியில் எழுந்து சுழன்றுவரப்
பட்டாசின் வால்நுனியைப் பற்றியவன் போல் என்றங்
கட்டில் அடியிற் குடைசாயும்! கார்குழலி
தீபாவளிநாள் திசைபுலரு வேளையில்நற்
பூவாய் மலர்ந்து புதிதணிய வேண்டாமோ?
என்றாள் எழுந்தேன் எழிலின் உருவானேன்!
நன்றேஇஃ தென்று நயவுரையோ டேயணைந்தாள்!
மெல்லுச்சரிந்தானம் மேனி மலரணையோ?
சொல்லுந் தரமோ சுவை!

www.padippakam.com



# நிறைவான உலகு

நெஞ்சத்தில் உயிர்ப்பொன்று கொண்டேன் -அதில்
நிறைவான உலகொன்று கண்டேன்
தஞ்சம்நம் உலகோர்க் கெந்நாளும் -பண்பு
தளராது வளர்கின்ற பணியென்று கண்டேன்!

பணிசெய்தல் கடன் என்னும் நெஞ்சம் -இந்தப்
பார்வாழ வழிதேடும் மஞ்சம்
பிணியான பிரிவுப்போர் பஞ்சம் -வென்று
புதுவாழ்வு தர ஏற்றும் மதியொன்று தஞ்சம்!

மதியொன்று நாமின்று கொள்வோம் -என்றும்
மனம்போல வாழ்வென்று வெல்வோம்
சதிசெய்யும் விதியென்ப தின்றி -மனுச்
சால்போங்கும் ஈசன்சந் நிதியாகச் செய்வோம்!

ஈசன் சந்நிதியொன்று வேண்டும் -அங்கே
எல்லோருஞ் சமமாதல் வேண்டும்
தேசத்தில் வாழ்கின்ற மக்கள்- நெஞ்சம்
சேர்ந்தொன்றி நின்றென்றும் அன்போங்க வேண்டும்!

அன்புக்குப் பொருள்சொன்ன நாங்கள் -என்றோ
அறனுக்கும் பொருள் சொன்ன நாங்கள்
என்புக்குத் தோல்போர்த்த வாழ்வால் -இன்று
ஏலத்தில் போகின்ற நிலைவென்று நின்றால்

கார்ஊர்ந்து வரும்நெஞ்ச வானில் -புதுக்
கதிராடும் வளரன்புத் தேனில்
தேர்ஊர்ந்து வருமின்பம் ஊரில் -செல்வம்
செழித்தோங்கி மனுவாழ்வு நிறைவெய்தும் பாரில்

அ.க. -5

www.padippakam.com



## இன்பம்

இன்பமெது வென்றென் இதயங் துருவுகையிற்
கன்னற் றமிழிற் கவிசெய்தேன் -என்னைப்போல்

மண்ணிற் பிறந்து மனித உருவெடுத்துப்
பெண்ணிற்பிறழும் பொருள்பொன்னில் எண்ணமெலாம்

ஊன்றி நிலைத்து முலக நிலைமறந்தும்
ஆன்றோர் வகுத்த அறன்மறந்தும் -ஈன்றாளும்

ஈன்றெடுத்த நாடும் இயல்பும் இயல்மொழியும்
சான்றோர் வழியுந் தழுவாது -தான்தோன்றித்

தன்மை செறிந்து தகைசால் நெறியளிக்கு
நன்மை உணரா நமதகத்தில் என்னன்பர்க்

கீவதுவுமின்பம் இரப்பதுவு மோரின்பம்
தாவுமனப் போக்கின் தனியின்பம் -ஓயாதே

உண்பதுவு மின்பம் உறங்குவது மோரின்பம்
மண்பெறுத லின்பம் மனவியல்பால் -பெண்ணுறவிற்

பேசுவது மின்பம் பெறற்கரிய பேற்றின்பின்
ஆசைவெறி தேய அறிவின்பம் -ஈசனெணிக்

காசிசெல லின்பங் கருணை மழைபொழியும்
ஆசிமொழி அன்பர்க் கதியின்பம் -'ஓசி'யிலே

வெள்ளைச் சுருட்டிழுத்து விண்ணிற் சுருளூதி
உள்ள நிறைதல் ஒருவின்பம் -மெள்ளப்போய்க்

www.padippakam.com



கள்ளில் நிமிர்ந்து கலையிற் புலனிழந்து
தள்ளத் தவறல் தனியின்பம் -பிள்ளையென

ஊட்டி வளர்த்த உறவுக் குயிரான
ஆட்டைச் சுவைத்தல் அதியின்பம் -கேட்பீரேல்

கண்ணிலொரு இன்பம் கதையிலொரு காலின்பம்
பண்ணிற் பசுந்தமிழ்ப்பா வோரின்பம் -எண்ணில்

எழுத்திலொரு இன்பம் எழுதாத தோரின்பம்
அழுத்து நினைவுறுத்த லோரின்பம் -பழுத்தபழம்

பண்புவழி இன்பம் பழமைநிதி பேணுகிற
நண்புவழி வாழ்வில் நனியின்பம் -தண்புனலாய்

என்புருகப் பாடி எழிலா ரடிதழுவல்
இன்பநிலை என்பர் இனுமோர்பால் -உன்னுங்காற்

பண்புநிலைக் கேற்பப் பலவாய்ச் சுவைமாறி
இன்பநிலை தோன்றல் இயல்பாகும் -பன்னரிய

இன்பமொரு கோடி இறைவ னுணரீரேல்
துன்பமொரு கோடி தொடர்பாகும் -அன்பேதான்

மாறாத இன்பம் மறைகள் முடிவன்பே
ஊறாத நெஞ்ச மழிதுன்பம் -நீறாத

உண்மைப் பொருளே உளத்துக் கொருவின்பம்
விண்ணோர்க் குகந்த வினையின்பம் -கண்ணாக

அன்பை வளர்க்கு மகத்தின் அழகேதான்
இன்பநிலை என்பேன் இயைந்து.

www.padippakam.com



# விசித்திரம்

நேற்று நடந்த இவன் நிம்மதியாய்த் தூங்குகிறான்
காற்றை உறுஞ்சுகிற கலையை மறந்தானா?
போற்றிப் புகழுகிறார் பூவகைகள் தூவுகிறார்
நாற்றஞ் சே என்று நறுமணங்கள் வீசுகிறார்

சீற்றத்தில் அன்று சிதறிவிட்டான் சொற்கணைகள்
ஆற்றத் தணியாத ஆத்திரப்புண் ணாகியதாம்
ஈற்றில் அவனடங்கி இரந்துண்ணும் வேளையிலும்
சோற்றுத் திரளை சோதரர்கள் ஈயவில்லை

கஞ்சிக் கலைந்தான் கந்தையின்றி இன்னலுற்றான்
கெஞ்சி இரந்தான் கேவலம் போ என்றார்கள்!

கட்டி அழுதுகண்ணீர் சொட்டுகிறார் இன்றேனோ!
தட்டி எழுப்பிடவா கொட்டுகிறார் முத்தெல்லாம்?

வாழ்வில் துணைபுரிந்து வாழாத மக்களினம்
வீழ்வில் துடிக்கின்ற விசித்திரந்தான் என்னையா?

www.padippakam.com



# உழவன் திருநாள்!

பழுத்தழி மனதின் பண்பெலாம் பரந்து
பசுந்தளிர்ப் பயிர்தலை நிமிர்ந்து
குழைவுட னணைந்து குடலைகள் முதிர்ந்து
குளிர்பனித் தென்றலில் விளைந்து
தொழுமணிக் கதிர்கள் தொன்மைநன் மரபில்
தொழில்வளத் தூய்மையில் நிறைந்து
உழவனின் உயர்வை உளநறும் பண்பை
உலகெலாம் உணர்கிற திருநாள்!

நெற்றியில் திலகம் நெறிமுறை வழுவா
நிலமெலாம் மரபுசொல் கோலம்
பொற்கரக் கமலம் புனைவினைப் பொலிவில்
பூவையின் இதழிலுங் கோலம்!
நற்பயன் இரந்து நயம்பெறப் பொங்கும்
நாயகன் நெஞ்செழிற் கோலம்!
கற்றையால் இருளின் கலையறுத் துயிர்க்குங்
கதிரவன் சுந்தரக் கோலம்!

படிப்பகம்

www.padippakam.com



வரம்பெறு முலகில் வழிபிறந் ததுபோல்
விழிதிறந் திடுமொளிச் செல்வம்!
அரும்புகள் விரைந்து அழகுடல் மலர்ந்து
அவனியில் அலைபுரள செல்வம்!
கரும்பொடு கனிகள் கனியில் புதுநெல்
கருத்திலே களங்கமில் செல்வம்
சொரிந்திடு திருநாள்! சோதியின் சுருதிச்
சோபையின் உலகெலாஞ் செல்வம்!

விடிந்தது பொழுது விளைந்தது இன்பம்
வீடெல்லாம் பொங்கலோ பொங்கல்!
முடிந்தது மிடிமை முதிர்ந்தது உடைமை
முகமெலாம் மகிழ்ச்சியின் பொங்கல்!
நடந்தது நழுவி நலம்பல தழுவி
நாடெலாம் நறுமணம் பரவிப்
படர்ந்தது பசுமை! பகவனின் மகிமை!
பாரெலாம் பொங்கலோ பொங்கல்!

படிப்பகம்

www.padippakam.com



## ஏணி

ஏறிமேல் ஏறிமேல் ஏறி
ஏணிப் படிகளில் ஏறி
வீறில் மிதந்தனன் எத்தன்
வெற்றிப் பெருமிதப் பித்தன்

எத்தன் மனதொரு தாசி
இன்னும்மேல் ஏறவே ஆசை
மெத்தப் பெரியதோர் கொம்பில்
மேலே பிடித்தனன் நம்பி

தாவிப் பிடிக்கிற உந்தில்
தட்டினன் ஏணியின் நெஞ்சில்
காவி உயர்த்திய ஏணி
காலடி சாய்ந்தது நாணி!

எட்டி அமர்ந்தனன் எத்தன்
ஏற்றம் தனதெனும் பித்தில்
கொட்டம் உணர்ந்திடு முன்னே
கொம்பு முறிந்ததும் என்னே!

சேர்த்துப் பிடித்தனன் கொம்பை
சே! என் றெறிந்தது கொம்பு
பார்த்துச் சிரித்ததே ஏணி
பாவி எழுந்தனன் நாணி

படிப்பகம்

www.padippakam.com



# ஆட்சி நடத்தவிடு

உள்ளம் படைத்ததில் ஊற்றுத் திறந்தென்ன
ஊர்ந்து திரிய வைத்தாய் - உலகில்
ஊர்ந்து திரிய வைத்தாய் - தினமும்
அள்ளிச் சொரிந்திட ஆற்றுப் பெருக்கென
அன்புஞ் சுரக்க வைத்தாய் - இறைவா
அன்புஞ் சுரக்க வைத்தாய்!

காலை முதல் படு மாலை வரை தினம்
கஞ்சிக் கலை பவர்கள் - தெருவில்
கெஞ்சி அலை பவர்கள் - இரந்தே
ஓலம் இடுங் குரல் வேலை எறிந்திட
உள்ளம் துடிக்கிறதே - இறைவா
உள்ளம் துடிக்கிறதே!

ஊரில் பிளவுகள் உள்ளத் துணர்வுகள்
ஓடிப் பொருது கையில் - நாடே
வாடிச் சுருளு கையில் - பரந்த
பாரில் பசி பிணி பற்றிப் படர் அனல்
பார்த்துத் துடிக்கிறதே - மனது
ஆர்த்துத் துடிக்கிறதே!

www.padippakam.com



சொந்த நலன் பெற முந்தித் துணிந் தழி
சூழ்ச்சி வகுப் பவர்கள் - அரிய
சூழல் அழிப் பவர்கள் - மனித
பந்தம் அறுத் துளப் பண்பும் அழிவதைப்
பார்த்துத் துடிக் கிறதே - மனது
ஆர்த்துத் துடிக் கிறதே!

நீல நெடும் வெளி வானைத் தொடு மலை
நெஞ்சை சிலர்க் கமைத்தாய் - பாறை
நெஞ்சை சிலர்க் கமைத்தாய் - அறனை
ஏல மிடுங் குலக் கோனார் இனத் தினை
ஏற்றிக் கொலுவில் வைத்தாய் - அறனின்
கூற்றைக் கொலுவில் வைத்தாய்!

உள்ளத் துணர் வினை மெள்ள அடைத் துள
ஊற்றை அடைத்து விடு - மனதின்
ஊற்றை அடைத்து விடு - இலையேல்
அள்ளிக் கொடுத் தறன் அன்பில் நிறைந்த நான்
ஆட்சி நடத்த விடு - இறைவா
ஆட்சி நடத்த விடு!

படிப்பகம்

www.padippakam.com



# போனேன் இல்லை!

தாயே தயவே தவமே தலமே
   தமிழும் நீயும்
ஓயா துறவாய் உணர்வாய் உயிராய்
   உலகில் வாழ்நாள்
தேயா எழிலை தேய்த்தென் உருவில்
   மகவாய் வந்தேன்
மாயாத் தளிரென் றெனைநீ தினமும்
   மனதிற் கொண்டாய்!

கருவில் உருவாய் கனவின் நனவாய்
   கலையின் வடிவாய்
குருவாய் குலமே குளிருந் தருணம்
   குமிழாய்ப் போனேன்
பிரிவில் பதியும் பயனும் மங்கிப்
   பிணிமேல் ஓங்க
சொரியும் கண்ணீர் துளியில் ஒளிரும்
   துணையாய் நின்றேன்!

www.padippakam.com



தேனும் வேம்பாய் தெளியும் தென்றல்
தணலாய்த் தந்தை
தானும் நீயும் தணலில் புழுவாய்த்
தவிக்கும் படியோ
போனேன் இல்லை இல்லை என்றும்
போனேன் இல்லை
ஊனில் உருவில் உளமாங் கோயிலில்
உள்ளேன் அன்றோ!

விதியா சதியா மதியா எதுவோ
விளையாட் டொன்றே
அதுவே நியதி அதுவே வாழ்க்கை
அடியென் மார்பில்
எதையும் உலகில் நிலையென் றெண்ணின்
உறவே துன்பம்
நிதியும் நிலமும் நினைவும் நிலவும்
நிறையும் மறையும்!...

தளிரும் கொடியும் தமிழோ அழியா
தவமோ அல்ல
தெளியும் நினைவில் தினமும் தமிழே
தரும்பே ரின்பம்
அழியா நிலையில் அலையாய் கலையாய்
அழியாத் தமிழாய்
ஒளியாய் உணர்வாய் உயிராய் வாழ்வேன்
வாழ்வேன் அம்மா!

படிப்பகம்

www.padippakam.com



# மனித குலமே

ஆகா மனித குலமே
எழுக அகமொளிர்க
தாகம் தணிக தரணி
தகர்க்குந் தொழில் விடுக
பர்காய் அறிவு படர்க
பரந்த பகுத்தறிவின்
ஏவா யுதங்கள் எழுந்து
விரவி எழில் பெறவே!

விரவும் அறிவால் விளையும்
பயனாய் விரைந்துலகில்
சிரசை இழந்தோர் சிறுமை
அகலும் சிறு தொழிலாற்
பரவு கதிருங் கனலும்
பல திசையும் பாழ்படுத்தி
எரியும் அனலும் அடங்கும்
உலகம் எழில் பெறுமே!

ஆளும் முறையும் அறனும்
பிரிந்து வழி விலகி
யாளி திறந்த அனல்வாய்ச்
சுடரில் அவலமெழ
மூளுஞ் சமரில் முதலிழந்து
மாயும் உலகினிலே
மாளும் மனித குலமே
மன்வுயிர்ப்பு மீளுகவே!

www.padippakam.com



# வீரம்மா!

காலைக் கதிர் அடி வானில் முளைக்குது
 வீரம்மா - எடி வீரம்மா
காற்றிலே சங்கொலி தாவி அழைக்குது
 கேளம்மா - ஒலி கேளம்மா
பாலைப் பருகும் பாலனைப் பாயிலே
 போடம்மா - அடி வீரம்மா
பச்சைக் கொழுந்துகள் பார்த்துக் கிடக்குது
 சேரம்மா - அணி சேரம்மா
சேரும் அணியிலே ஓடி விரைந்து நீ
 சேரம்மா - எடி வீரம்மா
சேலைத் தலைப்பினை வாரிச் செருகிநீ
 சேரம்மா - அணி சேரம்மா
கோரப் பனிக்குளிர் கூதிர் கொடுமைதான்
 வீரம்மா - அடி வீரம்மா
கொய்யும் கொழுந்துடன் கூதிர் அகன்றிடும்
 பாரம்மா - எடி வீரம்மா

www.padippakam.com



ஓடி மலையிலே ஏறித் தொடர்ந்தடி
　தேடம்மா - வழி தேடம்மா
ஒற்றை அடிவழி ஒன்றைத் தொடர்ந்துநீ
　ஓடம்மா - எடி வீரம்மா
கூடை எடுத்தந்தக் கோலும் பிடித்து முன்
　செல்லம்மா - முன்னே செல்லம்மா
கொள்கை நிறுத்திடும் ஆயுதம் ஆகவும்
　கொள்ளம்மா - அதைக் கொள்ளம்மா!

கொய்யும் கொழுந்துகள் செல்வக் குழந்தைகள்
　வீரம்மா - எடி வீரம்மா
கொட்டி நிறுக்கையில் கோடி இன்பந்தரும்
　பாரம்மா - அம்மா வீரம்மா
செய்யுந் தொழில் எங்கள் தெய்வம் என்றே பணி
　செய்யம்மா - எடி வீரம்மா
தெய்வம் என்றோ அருட் கண்ணைத் திறந்திடும்
　மெய்யம்மா - அம்மா வீரம்மா!

www.padippakam.com



# அகதி

தமிழினம் என்றோம் பின்பு
 தமிழ்மொழி என்றோம் வேண்டும்
தழிழர சென்றோம் எல்லாந்
 தமிழ் தமிழ் என்றோம் நம்மோர்
அழிவதா இல்லை இல்லை
 அறவழி அறப்போர் என்றோம்
விழி, எழு தமிழா என்றோம்
 விடிந்திட வில்லை அன்று!

அறவழி நின்று தந்தை
 அரசுதா என்ற வேளை
சிறைவழி இதுபார் என்றார்
 சீரழித் தடக்கிப் பின்னர்
உறவுகொண் டினிக்கப் பேசி
 ஒன்றிநின் றறுத்தார் அந்த
வெறியரின் கோலங் கண்டே
 வீழ்ந்ததவ் வறப்போர் எண்ணம்

வீழ்ந்ததவ் வறப்போர் எண்ணம்
 விளைந்தது களப்போர் எண்ணம்
தாழ்ந்தழிந் திடவா இந்தத்
 தம்பியர் என்ற நெஞ்சில்
சூழ்ந்தது சுதந்தி ரப்போர்ச்
 சுடரொளி அம்மா அன்று
வாழ்ந்தவன் தமிழன் இன்றும்
 வாழ்கிறான் என எழுந்தார்!

படிப்பகம்

www.padippakam.com



எழுந்தவர் திரண்டார் ஒன்றாய்
எதிரணி வகுத்து நின்றார்
குழந்தைகள் எழுந்த வேளை
குளிர்ந்தது தமிழ்த்தாய் உள்ளம்
அழுந்தமிழ்க் குலமே வெற்றி
அல்லலுற் றழியோம் உண்மை!
பழந்தமிழ் வீரம் தீரம்
பாய்கிற குருதி என்றார்!

நெற்பயிர் எழுந்த தென்று
நிறைந்தது பசுமை நெஞ்சில்!
புற்றலை எழுந்த வேளை
புலர்ந்தது நிலைமை, அந்தோ!
தற்கொலை செய்தல் போலத்
தம்பியர் கூறு நூறாய்ப்
பற்பல திசையில் ஓடிப்
படுகொலைச் செயலில் வீழ்ந்தார்!

வீட்டிலே அமைதி குன்றி
வீதியில் விரிந்து மல்கி
நாட்டிலே நம்மோர் நம்மை
நரபலி கொடுத்தல் கண்டோம்!
மீட்டு நம் முரிமை பெற்று
மேதினி புகழ வாழும்
நாட்களோ முயற்கொம் பென்று
நம்மவர் அகதி யானார்!

www.padippakam.com



## மன நோ

ஆறுதவழ் ஓரமொரு
ஆலமர நீழல்
ஆல மர நீழலிலே
ஆறுகிற வேளை!
நூறு நினை வோடிமன
நோ எழுந்த காலை
நொண்டிஎன வந்தொருவன்
நொந்த கதை சொன்னான்!

ஊறுபடு கோலமிதேன்
உற்றவனே என்றேன்
உண்மையிது ஐயவென
உள்ளமிக நைந்தான்
கூறதனை என்றவுடன்
கூதலெது மின்றி
கோணலெது மின்றியவன்
கோலமது சொன்னான்!

மாறுபடு சூரரினம்
மலைத்து நின்ற வேளை
மனவதிர்வில் மாற்றுவழி
பார்த்திருந்த காலை
வீறுசுடர் விட்டெழுந்து
விண்ணொளிரு நேரம்
வேறுவழி என்னஇனி
வெற்றி எனும் போதில்

அ.க—6

படிப்பகம்

www.padippakam.com



கூறுபட நின்றெமது
கொள்கையிது வென்றும்
குலமழிய வேறு பகை
தேவையிலை என்றும்
வேறுபடை ஏதுமின்றி
வீழ்ந்தவருள் ஒருவன்
வீழ்த்தியது யாராமோ
விழுந்தவனும் யாரோ!

வேல்எடுத்த வேளையிலே
வில்லுடைதல் நன்றோ
விண்ணெழுந்த ஏவுகணை
வீறழிதல் நன்றோ
கோல்எடுத்த வேளையிலே
குறியிழத்தல் நன்றோ
குறியறிந்த வேளையிற்கண்
குணமிழத்தல், அந்தோ!

என்றவனின் உந்துமொழி
என்மனதில் தாவி
என்னிதய ஊசலிலே
இன்னலிசை கூவி
நின்றுவளர் கின்றநிலை
நெஞ்சில் அலை தாவி
நொந்தவரை எண்ணிமன
நோவிலழி கின்றேன்!

படிப்பகம்

www.padippakam.com



## மரபு

ஓர்கால் எடுத்தே
உயரேர் தொடர்ந்து களமுழுத
ஊரார் மரபை
ஒருபால் ஒதுக்குந் திரக்டரெனும்
பேரேர் புகுந்த
புதுமை பழமை வதைத்ததெனச்
சீரார் களமுந்தன்
சிந்தை குமுறாது பொங்குகவே!

குற்றை அகற்றியதிற்
கொம்பைச் சுழித்துக் குறைதீர்த்தோன்
பற்று மலர்ந்த
செயலைப் பகட்டில்லப் பாதிரியின்
அற்றம் அறுந்த
அறிவை உணர்வோர் அகத்தினிலே
பொற்றேர் அமர்ந்து
புகழ்சேர் மரபும் புலருகவே!

படிப்பகம்

www.padippakam.com



காவைப்போல் நாவைப்போல்
ணாவை அவைநிகர்க்க றானாவை
கோவைப்போல் நோவைப்போல்
ணோவை அவைநிகர்க்க றோனோவை
தேவை எதுவோ
உளதென்று மாமதியோர் சீர்திருத்த
யாவருமே இந்நாள்
எமதென்றோம் பாரின் இயல்பதுவே!

தளிரொன்று எழுங்கால்
சருகொன்று உதிர்ந்தே கழிவதுபோல்
பழமை கழிந்து
புதுமை மலர்ந்துஇப் புவிவளரும்
எழுமின் விழிமின்
எனவுள்ளச் சேவல் குரல்கொடுக்கப்
பொழுது புலரும்
புதுநாள் மலரும் மரபதுவே!

படிப்பகம்

www.padippakam.com



## வா!

நேற்று வரையும்
நினைவில் சுமையுடன்
நீ
காற்றாய் அலைந்தாய்!
கருத்தறிவேன்!

ஆற்றுதற்கு,
பா ஒன்று நாளும்
பசி தீரத் தா என்றாய்

வா என்றேன்
வா
விரைந்து வா!

மஞ்சள் தடவு
மனதில் எழில் தடவு
கொஞ்சும் விழியில் குளிர்தடவு!
வஞ்சீ!

கவிதைப் பொருளே!
கனிதமிழே!
சிச்சீ!

விவரம்பின்
நீ
விரைந்து வா!

படிப்பகம்

www.padippakam.com



# தீண்டாமை நன்று

வையம் முழுதும்
வளருமனல் மூட்டுகிற
வெய்யோன் சுரமும்
விறுவிறுப்பும்
வானில் அசைவெய்தாது
உறங்கும் வளியும்
வியர்வையுமாய், ஐயோ!

இவைகள் அணையுங்
கொடுமையினால்
ஈக்கள்
சுடரில் இறகெரிந்து மாழ்வதுபோல்
தீக்குளித்து
மக்கள் தினமும் அவலமுற
அப்பப்பா!

www.padippakam.com



தொற்றும்
விடநோய் பலவாகி
தொற்றியவை பற்றும் முறைகளுமே
பல்கிப் பெருகுவதும்
ஆய்ந்தறிந்த விண்ணர்
அசல்கிருமி நாசினிகள் தேர்ந்தடிக்க
அக்கிருமி

திருக்கோலம் மாறுவதும்
கற்றோர் அறிவர்!
கற்றபடி நிற்பதெனின் சற்றே விலகல்
தருமந்தான்!

ஆகையினால், தீண்டாமை நன்றே!
மிகநன்றே! இல்லாளும்
வேண்டாம் போ என்றால்
விடு!

படிப்பகம்

www.padippakam.com



# பிடி அரிசி

சின்ன வயசில்...
திரிந்த களைப்பில் எதும்
தின்னும் விருப்பு எழவே செல்கின்றேன்-

என் ஆச்சி
என்றும்போல் அங்கே
எடுத்து மரக்கொத்தால்
அன்றும் அளக்கின்றாள் குத்தரிசி!-

சென்று அடுத்தோர்
மூலை அருகினிலே
முடிக் கிடந்த பனை
ஓலைப் பழம்பெட்டி ஒன்றுள்ளே-

கோலியவள்
ஓர்கை பிடி அரிசி
எடுத்து இட்டாள்: பின்மீதி
சீர்செய்து உணவுக்கு உலையில் இட்டாள்!-

படிப்பகம்

www.padippakam.com



தேராமல் ...

ஏன் ஆச்சி அஃதென்றேன்
என்னை விழித்து அன்பாய்

"மேனே கேள்... நாளும் ஒருபிடியை-
பானையிலே
போடாமல் எம்மை
ஒறுத்துப் பிடித்து வைத்து

நாடிவரும் ஏழை எளியோர்க்கு-
கோடாமல்
கிள்ளிக் கொடுத்தல்தான்
தானமடா!

...உள்ளதனால்
அள்ளிக் கொடுத்தல் அல்ல அஃது"
என்றாள்.

வள்ளல் அவள்!

தன்னை ஒறுத்து என்றும்
தான உணர்வு ஓங்கும்
வன்மை அன்னாளின் வளம்!

www.padippakam.com



## துடிப்பு

நெஞ்சில் மலரணை மஞ்சம் அமர்ந்ததில்
என்றும் வளர்கிறது - நினைவில்
நின்று வளர்கிறது - அன்று
பிஞ்சில் மழலைகள் கொஞ்சிய பூமியின்
பெற்றி வளர்கிறது - மனதில்
பற்றி வளர்கிறது!

காலையில் சித்திர வேலவன் மாமணி
நாதம் எழுந்துவரும் - க் அ
ணீரென் றெழுந்து வரும் - பசுஞ்
சோலையில் பூங்குயில் பைங்கிளி புள்ளினம்
கீதம் பொழிந்து தரும் - உதய
கீதம் பொழிந்து தரும்!

கோயில் அருகொரு கொன்றை மலர்ந்துபொற்
குஞ்சம் அணிந்துவரும் - பொற்
கோலம் வரைந்து தரும் - பல
ஆயிரஞ் செவ்விதழ்ச் சாயல் அலரிகள்
ஆடல் முயன்று வரும் - சதிர்
ஆடல் பயின்று வரும்!

மின்விழிப் பாவையர் மார்கழி ஏரியில்
மூழ்கிநீ ராடுகையில் - வரால்
மார்பளைந் தோடுகையில் - கோடி
வெண்ணிதழ் தாமரை செவ்வித ழாளுடன்
வேடிக்கை பார்த்து நிற்கும் - கூடி
ஆடிக்கை சேர்த்து நிற்கும்!

www.padippakam.com



கூடி உழவர்கள் நாடிப் புலம்உழக்
கொள்கை வளர்ந்து நிற்கும் - செங்
கோன்மை புலர்ந்து நிற்கும் - ஆண்பெண்
சோடி களைபறித் தாடி மகிழ்கையில்
சொந்தம் வளர்ந்து நிற்கும் - சொந்தச்
சிந்தும் தெளிந்து நிற்கும்!

பச்சைப் பசும்பயிர்ப் பாவையர் தோழிற்பூ
வாடை தழுவி நிற்கும்-வாடை
ஓடித் தடவி நிற்கும்-நிறை
உச்சி குளிர்ந்தெழில் வாலைக் குடலைகள்
உள்ளம் பொலிந்து நிற்கும்-பின்பு
மெள்ளக் குனிந்து நிற்கும்!

இந்த நினைவுகள் நின்று மனதிலே
என்றும் வளர்கையிலே-என்றும்
நின்று வளர்கையிலே-அந்தச்
சொந்த நிலனின்று நொந்த நிலையெண்ணி
சோறுங் கசக்கிறதே-உணர்வில்
சோணங் துடிக்கிறதே!

எந்தை நிலனென எங்கள் மணற்கும்பில்
எற்றிக் களிப்ப தென்றோ-அதில்
ஏறிக் குதிப்ப தென்றோ-இனி
அந்த நிலத்திலே வேலன் குளத்திலே
ஆடிக் களிப்ப தென்றோ-கவி
பாடிக் களிப்ப தென்றோ!

www.padippakam.com



# வளர் தெய்வம்

காலஞ் சுழல்கிறது காட்சி மறைகிறது
ஞாலம் புதுக்கோலம் நாளும் பெறுகிறது
நாளும் புதுக்கோலம் ஞாலம் பெறுகையிலும்
வாழும் நினைவிலொரு தெய்வம் வளர்கிறது!

தெய்வம் வளர்தெய்வம் தெளிவுபெற்ற நாள்முதலாய்
ஐய எனதகத்தை ஆளுகிற பெருந் தெய்வம்
சின்னஞ் சிறுவயதில் செந்தமிழை ஊட்டியபின்
முன்னைப் பழமைநிதி மூதுரைகள் ஊட்டியது!

மூதுரைகள் ஊட்டியஅம் மூதாட்டி என்பாட்டி
ஆதவனைப் போல அகத்தில் வளர்கின்றாள்!
பாட்டியென அன்றிருந்தாள் பாசத்தின் ஒருருவாய்
தோட்டித் தொழில் செய்தாள் தோழமையின்
பேருருவாய்!

தோழமையின் பேருருவாய் தோட்டித் தொழில்புரிய
கீழ்வான் கிளுகிளுக்க கிழம்தன் பணிதொடர்வாள்!
கூட்டிப் பெருக்கியவள் குளநீரில் தோய்ந்துவந்து
வீட்டில் விளக்கேற்றி வீசுமணத் தூபமிட்டு

கோலம்பல அமைத்துக் கொள்கை நிலைநாட்டப்
பாலாவா பவளம்வா பண்பிதெனப் பாதையிட்டாள்!
பாதையிட்டு முன்நின்ற பாட்டிபின்னே நாம்நின்றோம்
பாதையிட்டாள் நெஞ்சத்தில் பசுமரத்தில் ஆணியென!

www.padippakam.com



தோய்ந்துலர்ந்த வெண்சேலை தொன்மரபு சொல்
கோலம்
தீட்சையவள் பெற்றதனால் திரிபுண்டரக்கோலம்
கோயில்மணி ஒலிக்கக் கும்பிடுதல் ஓர்கோலம்
வாயில் சிவன்நாமம் வந்தணைதல் ஓர்கோலம் !

பழம்பாக்கு வெற்றிலையை பக்குவமாய்த் தட்டிவிட்டு
உளமொன்றும் உத்தமியாள் ஊர்வலமே ஓர்கோலம்
கோயில் அருகேநம் குளநிறைவும் ஓர்கோலம்
தாயின் அருளகம்போல் தாமரையாள் ஓர்கோலம்!

பூங்கோல ஏரியிலே பூவெடுத்துத் தட்டிலிட்டு
வாங்கோடா என்றெமக்கு வழிகாட்டல் ஓர்கோலம்
கோலம் பலகாட்டிக் கொள்கை நிலைநாட்டி
காலச் சுழற்சியுடன் கடவுளருட் சேர்ந்துவிட்டாள்!

காலத்தால் சாகாது காலத்தின் கோலத்தால்
ஏலத்தில் போகாது என்றும் வளர்தெய்வம்
நின்றென் மனதினிலே என்றும் வளர்கிறது!
அன்றின் றொன்றும் இன்றி வளர்கிறது!

www.padippakam.com



## ஐய கவிரசிக!

ஐய கவிரசிக!
அன்பாய் ஒருவார்த்தை
மெய்யாகச் சொல்கின்றேன்
மென்றால் அசைபோடும்

அசைபோடும் வேளையிலே
அலைதாவி நெஞ்சில்
விசையேறி வந்தால் நீ
வேண்டாம் மறப்புரட்சி!

சத்தியமாய்ச் சொல்வேன்நான்
சங்கப் புலவனல்லன்
மெத்தப் படித்தறிந்த
மேதையல்லன்...சாதாதான்

ஐயா நான்
அன்றொருநாள்

ஏட்டைப் படித்தேன்
எண்ணங் குமுறியொரு
பாட்டு முடுகிவரப்
பாவெழுதிப் பார்க்கின்றேன்

பாவொன்றை நான் எழுத
பண்டிதனார் ஓடோடி
பூவின் இதழ் ஒடித்துப்
பூ...வென்று வீசுகிறார்

www.padippakam.com



அப்பாவா இப்பாவா
எப்பா இதுவென்றும்
உப்பில்லை என்றும்
உமியென்றும்...அப்பப்பா

குறியை அகற்றியசைப்
புணர்ச்சி நுகரவில்லை
தறியிலிடு பாப்போல
தண்ணோசை ஒடவில்லை

சீர்தளைகள் இல்லை
சிந்தைத் தெளிவில்லை
பேர்கவிதை என்று
பிடுங்கி எறிகின்றார்

பேரன்பர் ஆசியுடன்
பிளவு விரிவுபடும்
சூரன்போர் வாழ்கவெனச்
சுதிசேர்ப்பார் நாரதனார்!

ஆனாலும்
ஐயா நான்

சத்தியமாய்ச் சொல்கின்றேன்
சங்கப் புலவன் அல்லன்
மெத்தப் படித்தறிந்த
மேதையல்லன்...சாதா தான்

படிப்பகம்

www.padippakam.com



உண்மை நிலையறிவேன்
ஊரறியும் உலகறியும்
விண்ணன்நான் என்றால்
வீட்டிலுமே ஏற்கார்கள்

என்றாலும், என்னைய!
எனதினிய வாசகரே
நின்றென் மனதில்
நிதமுந்தும் ஓசைகளை

ஆனாச் சுழித்தன்று
ஆசிபெற்ற காரணத்தால்
பேனாப் பிடித்துவிட்ட
பித்தனென எண்ணாதீர்!

கலையை வளர்த்துமட்டும்
கலாசூரர் ஆவாரோ
கொலையை வளர்ப்பவர்கள்
கோனாராய் முந்தாரோ?

பாருக் குழைப்பவர்கள்
பட்டினியும் பண்புகளின்
வேரை அறுப்பவர்கள்
வெள்ளை உடையணிந்து

மாந்தர் குலப்பெருமை
மனிதப் பிறப்புரிமை
காந்தி மகான்நாமம்
கனிவுதரும் சாய்நாமம்

www.padippakam.com



என்றெல்லாம் பாடி
இதய நிறைவுடனே
நின்று வளர்ந்தோங்கி
நிறைவுபெறும் இவ்வுலகில்

வேறென்ன செய்வேன்?
வேதனைதான் ஆனாலும்
ஆறும் மனமென்றே
ஆற்றுப்பா பாடுகிறேன்

ஐய
கவிரசிக!

கறந்த பசும்பால்போல்
கலப்பில்லா தேன்தமிழில்
நிறைந்த உணர்வுகளை
நெஞ்சால் இறக்குகிறேன்

நெஞ்சின் சுமையிறக்கும்
நம்பணியில் ஐயாநான்
கொஞ்சுந் தமிழ்செய்து
கொலுவமர எண்ணவில்லை!

ஆகையினால்
ஐய!

பூவின் அழகையொரு
பூங்கொடியில் பாருங்கள்
பாவின் அழகையிந்தப்
பைந்தமிழில் பாருங்கள்

அ.க—7

www.padippakam.com



## புலவன் தொழில்!

சீரும் தளையும் திருவும் மொழியாகிச்
சேருகிற பேனாவில் சொல்லின் உயிர்சேர,
எண்ணக் குமுறல் இதயத் துணர்வுகளை
பண்ணார் மொழிசெய்வோர் பாவலராம்....

ஐயா, நான்

நாதஸ் வரத்தின் நடுவே நெடுங்கொடியாய்ப்
பாதை பிடித்துப் படர்ந்த வளிநிரல்தாம்
ஊதத் துலங்கி உணர்வில் துடிப்படைந்தே
ஓதற் கரிய ஒலியாய் வடிகையிலே,

காதுக் கினிய கனியமுதாய் காற்றலையில்
கீத அலையாய்க் கிளர்வெழுப்பி வார்ப்பதற்கு
கைவிரல்கள் ஆடுங் கலைபால் கவினேற்றி
மெய்யின்பம் ஊட்டும் கலைஞன்போல்,...

நானோ,

இசையறியேன் ஆனாலும் இன்பத் தமிழின்
விசையறிவேன் சொல்லின் சுவையறிவேன், ..

ஆக,

புதுமை வெறியில் புலனிழந்தும் இன்ப
மதுவை மறந்தும் மனது மருண்டோடி,
அம்மானின் பின்னே அலைந்த அவன்போல
இம்மா நிலத்தில் இயல்புப் படிதவறி,

www.padippakam.com



பட்டாங்கில் உள்ள படியேறிப் பாராமல்
கட்டறுத்து நெஞ்சக் கடிவை நிரப்பாமல்
முட்டறுத்து நெஞ்சில் முழுமை தெளியாமல்
வட்டப் பரிதிவழி செல்வோர்போல் அன்றி

ஐயா, நான்
நானாக
ஆனாவே என்றாலும்
செய்யும் தொழிலின் திருவை நுகர,

எழுத்தாய்ந்து சொல்லின் எழிலாய்ந்து நெஞ்சில்
அழுத்தும் பொருளழகும் ஆய்ந்து பழுத்த
பழைமை கடைந்து படர்பண்பு பாலிக்கும்
அழகே கவிஞர்க் கணியென்று நம்பியதால்,

வண்ண அகல்விளக்கால் வல்லிருட்பேய் நீங்கிவிடும்
எண்ண விளக்கால் இடர்நீங்கும் ஒண்மைக்குக்
குத்து விளக்கில் குறையாது நெய்வேண்டும்
சித்தக் கலத்தில் சிவம்வேண்டும் என்றெண்ணி,

கார்நீர்த் துளியில் கதிர்கள் பிரியுங்கால்
நேர்நேர் விரியும் நிறங்கள் எனவே
ஒலிப்பதிவுத் தட்டின்மீ தோடும் முனைபோல்
நிலைமையம் நாடி நிதியோடுறவாடி,

உள்ளக் குழலில் உறங்கும் உணர்வுகளை
மெள்ள எழுப்பி மெதுவாய்த் துடிப்பூட்டி
முன்னையவர் பாதை முயன்றொழுகி அங்கிங்கே
என்வழியும் நாடி இயன்ற கவிசெய்வேன்

இனிதா?... அளமின்கான்! என்கருத்தில் அஃதே
புனித புலவன் தொழில்!

படிப்பகம்

www.padippakam.com



## இரசிகமணி

வாழிய செந்தி நாதன்
வாத்தியார் நாமம் என்றும்
ஆளுக அம்ம கானின்
அருந்திறன் அளவு கோல்கள்
ஈழநன் னாட்டில் உண்மை
இரசனையின் உருவாய் நின்று
தோளிலே தட்டித் தந்த
துணைவனின் நாமம் வாழ்க!

படிப்பகம்

www.padippakam.com



காத்திர மான மேன்மைக்
கதைகவி நாவல் நெஞ்சில்
ஆர்த்தநல் லுணர்வு சொட்டும்
அருந்திறன் ஆய்வு கண்டோர்
வாத்தியார் என்றார் நல்ல
வாசிக சாலை என்றார்
ஏத்திநின் றன்னார் சேவை
என்றுமே போற்றி நின்றார்!

பழையன போற்றி நின்றப்
பாதைகள் தொடர்ந்து தாம்பின்
உளமுவந் தேற்ற போதில்
உரியநற் புதுமை போற்றி
விளைபயிர் எழுந்த வேளை
விரைந்தவர் கொழுகொம் பாகி
செழுமையில் மலர்ந்து சொக்கா
சோக்கென மகிழ்ந்த மேதை!

www.padippakam.com



எந்தையின் சேவை என்றும்
எழுத்திலே அடங்கா தைய!
செந்தமிழ் வளர்த்த பாங்கு
சிந்தையில் ஒளிரு தைய!
சொந்தநற் குருவாய்க் கொண்ட
சோதரர் ஆயிரம் பேர்
சிந்தையில் ஏற்றி வைத்த
திருவிளக் கொளிரு தைய!

ஒளிர்கிற விளக்கைத் தூண்டி
உளம்பல திறந்த கோனே
எழும்பயிர் கண்ட வேளை
எருவளம் இட்ட கோனே
வளர்கிற வழியைக் காட்டி
வளம்பல மலியச் செய்த
குளிருள இரசிக மணியே
குன்றினில் தீப மைய!

படிப்பகம்

www.padippakam.com



# பொதுமை

காலத்தை வெல்லும் கருத்தும்
கனமும் பெருநிதியாங்
கோலத் தமிழின் குணமுங்
குலமுங் கொலுவிருக்குஞ்
சீலத் தெளிவுஞ் சிறப்பும்
விரிந்த பொதுமறையால்
ஞாலத்தை ஆளும்நல் ஞான
குருசேவை போற்றுதுமே!

சீர்மை மலிந்து திருவில்
மலர்ந்த திருக்குறளாம்
ஏர்கொண் டுழுதே எழில்சேர்
உணர்வோ டுளம் அமைத்து
நேர்மை நிறைவு நிதியாம்
பொதுமை நிமிர்மனதின்
கூர்மை வளர்க்கும் குணமார்
குருநாமம் போற்றுதுமே!

தெய்வத் திருவள் ளுவனார்
திருவாக் கொலி குரலில்
ஐய! மொழியோ சமய
நெறியோ தனியெதுவும்
மெய்யென்றோ உய்யென்றோ சொல்லாது
இதயத் தறன் உணர்த்தி
வையப் பொதுமை வளர்க்கும்
திருவுள்ளம் போற்றுதுமே!

படிப்பகம்

www.padippakam.com



## குமரிக் குன்றிலே

அலை புரளும் ஆழி யிலே
ஆனந்தர் நினை வெழுப்பும்
சிலை எனவே எழுந்த குன்றம்
சீர் வளரும் குமரி முனை!

குமரி முனைக் குன்றினிலே
கொஞ்சு மலை தரு மிசையில்
தமதினிய சால் புயிர்ப்பில்
சாந்தி தரும் சூழ லம்மா!

சாந்தி தருஞ் சூழலிலே
சஞ்ச லங்கள் தேய்ந் தகல
ஓய்ந் திருந்த நெஞ்சினிலே
ஒளிர்ந்த தொரு திருமுகமே!

ஒளிர்ந்த திரு முக வழகும்
ஒண்மை வளர் உறவழகும்
அளந் தறிந்த மன வலைகள்
ஆனந்தர் சால்பு சொல்லும்!

www.padippakam.com



ஆனந்தர் சால்பு சொல்லி
அமைதி தருஞ் சூழலிலே
தேனுந்தும் நினைவலைகள்
செந்தமிழாய்ப் பாய்ந்ததம்மா!

செந்தமிழாய் பாய்ந்து வந்து
சோதரரே என்று நின்று
சிந்தையிலே சாந்தி வர
சீர் வழிகள் புலருமம்மா!

சீர்வழிகள் புலர்ந்து வர
சிந்தை செயல் தூய்மை பெற
பார் வளரப் பாதை வரும்
பல்லுயிரும் வாழுமன்றோ!

பல்லுயிரும் வாழுதற்கும்
பாரமைதி ஓங்குதற்கும்
சொல் செயல்கள் ஒன்றிநின்று
சோதரரே! என்றிடுவோம்

சோதரரே என்றொலித்துச்
சோர்வடையாக் குமரிமுனை
நாதவலை ஓசை யெழும்
நம்குமரிக் குன்றினிலே!

www.padippakam.com



# கவியமுதம்

வான்வெளியிற் பாய்ந்தொழுகி வற்றாதோடும்
வண்ணநிலா பாலருவி போன்றுபாய
மான்விழிபோல் மையலொளி வீசும்விண்மீன்
மாயவலை வீசுபவள் விழிபோல்மின்ன
ஊணுறக்கம் இல்லாமல் உலகைவிட்டு
உல்லாச யாத்திரைசெய் இதயவூற்றில்
தேனொழுகுஞ் செந்தமிழாய்க் கவிதையூறித்
தேகமெலாஞ் சேர்ந்தணைந்து தவழுதம்மா!

அன்பருவி போன்றுதவழ் தென்றல்தாவ
ஆனந்த நாட்டியஞ்செய் அழகுப்பூக்கள்
இன்பமுதம் ஊட்டுகிற இனியாள்போன்றே
இனியபுதுப் புன்முறுவல் இதழிற்சேர்க்க
என்னிதயத் தாமரையில் கதிர்கள் தாவி
ஈர்த்தணைப்பில் மொட்டவிழும் எழிலுஞ்சேர
செந்தமிழாய்க் கவியூறிக் கானம்பாடி
சேர்ந்துகனிந் துள்ளமெலாம் தவழுதம்மா!

கண்ணிமைப்பில் கவியடிகள் தொடர்ந்துபாய
காந்தவலைக் கதிர்களவள் இமைப்பிற்சேர
விண்ணெழுந்து வண்ணநிலாப் பந்தில்தாவும்
வீறுவிசை கொண்டுமணம் உந்திச்செல்லும்
பண்ணெழுந்து விண்ணூதும் பலவாய்நெஞ்சில்
பருவமனக் கனவுகளைப் பலமாய்த்தூண்டும்
வண்ணமலர் நெஞ்சினிற்சேர் அமுதம்போல
வடிந்தோடிக் கவியமுதந் தவழுதம்மா!

www.padippakam.com



உடைநழுவ நடைபழகி உணர்விலொன்றி
உந்துமன விசைமுந்தி உதயவேளை
விடிகிறமென் கதிர்தடவு வதனத்தோடு
வந்தணையும் தென்றலணை நெஞ்சத்தோடு
ஒடிகிறமென் னிடையினிலே கரமொன் றூன்றி
ஒய்யார மாகமறு கரத்தில்தொங்கும்
குடமசைய இடையசைய குளிர்தண்பாவாய்
கொஞ்சுதமிழ்க் கவியமுதந் தவழுதம்மா!

மனமறியேன்! மங்கைமுகம் மலரும்வேளை
மருள்விழிகள் மாயவலை வீசும் அன்பின்
இனமறியேன்! குணமறியேன்! இதயந்தொட்ட
இன்கரத்தின் சால்பறியேன்! இதயவூற்றில்
எனையறியேன்! ஆயினுமென் னகத்தில்அன்னாள்
எழில்நகையோ டாடிவந்து நடனஞ்செய்ய
கனிதமிழில் கரைகாணா கவிதையூற்றில்
கனவுலகில் கவியமுதஞ் சொரியுதம்மா!

www.padippakam.com



## கவியரசி!

மாலை இளமிருளின்
    மைம்மல் வலைச் சுருள்கள்
சோலை அழகை எல்லாஞ்
    சூழ்ந்து சுருட்டுகையில்
நீலநெடு வானத்தில்
    நீந்தி முழுமதிவெண்
பாலும் பழரசமும்
    பாவமுதுஞ் சேர்த்தநிலை!

வீற்றிருந்தேன் சோலையிலே
    விண்மீன் விழியடிக்கும்
காற்றுநிரை ஓடிவந்து
    காதில் விசில்அடிக்கும்
நேற்றுவரை தேடாதோர்
    நக்கல் கதையடித்து
தேற்றவழி வேறுண்டே
    தேடுவதா என்றநிலை!

படிப்பகம்

www.padippakam.com



சொட்டும் நிலவெரித்தும்
சோடிபல சேர்ந்தெரித்தும்
விட்டுக் கொடுக்காமல்
வீற்றிருந்தேன் என்மனதோ
எட்டி நடக்க வுந்தி
எழுந்த குழந்தையென
தட்டித் தடுமாறி
தவறி விழுந்த நிலை!

வாராய்நீ என்கனவின்
வண்ணக் கவியரசி!
பாராய் கடைக்கண்நீ
பாவடியும் பூவணங்கே!
சீரார் அடியெடுத்து
சிந்தையிசை சேர்த்தெடுத்து
ஆராரோ என்றினிய
அடியெடுத்து வாராய்நீ!

கம்பர் இளங்கோபோல்
காலமெல்லாம் பாவலர்கள்
அம்புவியில் வாழ்கவென
ஆசிதந்த தேவதைநீ!
நம்பியின்று நானுள்ளேன்
நற்றமிழ்ப்பூங் காவினிலே
தும்பி வந்து சுற்று முன்னே
சுந்தரியே, வாராய் நீ!

www.padippakam.com



# வெண்பாவாய்

பாவொன் றெழுதிப் பசிதீர்க்க வெண்பாவாய்
வாவென் றழைத்தேன் வளர்கவிதா-தாவென்றேன்
சொல்லும் பொருளுஞ் சுவையுஞ் சுருதிபெறும்
செல்லச் சிரிப்பிலெழில் சேர்!

செல்லச் சிரிப்பு திருவொளிரும் தேன்விழியும்
கொல்லை மலரின் குளிரிதழும்-மெல்லிசையாய்
பேசுந் தமிழாய் பெறற்கரிய இன்னிசையாய்
ஆசிதர வாடி அணைந்து!

அறிவியலை ஆய்ந்தும் அழகியலைத் தேர்ந்தும்
அறவியலில் ஆடி அணைந்தும்-இறவாத
இன்கவிதை ஊற்றே இதயத் துயிரம்மா
அன்பே தவிப்பேன் இனி?

வாழ்வின் பொருளாய் வனப்பாய் வளர்நிதியாய்
மீளும் புதுவாழ்வு மெய்யம்மா-கீழ்வானம்
மெல்ல ஒளியேறி மீளத் திசைபுலரும்
சொல்லின் பொருளைச் சுவை!

பாவூறும் நெஞ்சில் பசுந்தமிழ்பா ஆடுகிற
பூவான செல்வ வசந்தமென-தாவுகிற
பார்வை அழகில்வெண் பாஇன்பம் பாலித்து
சீர்பொலியுஞ் செல்வி சிரி!

www.padippakam.com



# தனிமை

ஓவியத்தின் ஒய்யாரம் ஒல்லிமேனி
ஒயில்நடையில் ஒருநளினம் ஓடும்பார்வை
காவியங்கள் சொரிகின்ற கதிர்க்கண்வீச்சு
கவிதைதவழ் இதழ்களிலே கனியும்பேச்சு
பூவிதழில் புதுமலர்கள் சொரியுஞ்சோலை
புன்முறுவல் வந்துமறை தனிமைச் சாயை
பாவுதிரப் பண்ணிழந்த பாவைபோலப்
பாவமவள் காவினிலே பதறாநின்றாள்!

மைமலிலே மல்லிகையாள் பூத்துத்தொங்க
மனம்பொங்க மணம்பொங்க மழலைபொங்க
மையலிலே மணிசிந்திப் பேசிப்பூத்து
மகரந்தஞ் சிதறவிழி பார்த்துப்பூத்து
மெய்யுடனே மெய்யுரைஞ்ச மார்பம்பூத்து
மெய்பூத்துச் சோடிபல செல்லச்செல்ல
கொய்தமலர்க் கொத்தினைப்போல் கூம்பிப்பாவம்
கோமகனைக் காணாமற் கலங்கிநின்றாள்!

படிப்பகம்

www.padippakam.com



அகிலளையு மிளங்தென்றல் அலைகள் தாவ
    அவனணையு நினைவிலவள் அகமீடாடும்
நகையுதிரும் நடைதளரும் நலியுமுள்ளம்
    நதியோட வுடனோடு மிலையாய் ஓடும்!
முகிலலைகள் தாவிவரும் வானம்போல
    மூடிருளில் கலங்கிமனம் இருளும்நெஞ்சம்
திகுதிகெனும் தீபரவும் திசைகள்மங்கும்
    தேம்பியவள் தனிமையிலே தவித்தாள், பாவம்!

இங்கவனோ அங்கவனோ இங்கங்கெங்கும்
    இல்லையவன் எங்குமவன் இலையென்றாகப்
பங்கஜப்பெண் பானுவையே பார்த்துப்பார்த்து
    படுவானக் கரைநோக்கித் தவித்தல்போல
குங்குமப்பூஞ் செவ்விதழ்கள் சோபைகுன்ற
    குளிர்வதனங் கிரகணநாள் மதியாய்மங்க
அங்கமெலாம் அணுவணுவாய் தனிமைநோவில்
    அவன்வரவைப் பார்த்திருந்து தவித்தாள்,
அந்தோ!

www.padippakam.com



## இலக்கியப் பெண்

ஊடுருவு கதிரெங்கள் உடலூடே
உள்ளதெலாந் துருவிச் சென்று
தேடரிய செய்திபல சேர்த்தாங்கே
திரையொன்றில் பதித்தல் போன்று
பாடலடி பற்றிமன விழிப்போடே
பாவையுளம் பதமாய்ப் பார்த்தால்
ஈடிணையில் இயல்புகளை எமதுதமிழ்
இலக்கியப் பெண் நெஞ்சிற் சேர்ப்பாள்



படிப்பகம்

www.padippakam.com



குறும்புபல புரிகின்ற குவளைவிழி
கூம்பிவிடக் குழம்பு செய்த
திறம்என்ன திறமென்று தித்திக்குந்
திறனாய்வு கேட்டபோது
நறும்பூங்கா வனம்போன்ற நயமான
நாள்மலராய் முகமலர்ந்து
மறுமையிலும் மனக்கோயில் உனக்கென்ற
குறுந்தொகையாள் மாண்போர்சாட்சி

வளமிக்க வண்டமிழாள் வனப்போங்க
வான்வெளிபோல் வளரு மன்பில்
இளங்கணவன் மனைவிநுகர் இன்பத்தின்
இணையற்ற இயல்பு பொங்க
அழுங்குழவி உடனவனை அவள்தாவி
அணைக்கையிலே சேரும் இன்பம்
உளங்கொள்ளும் ஒப்பற்ற உயர்ரசனை
ஐங்குறுநூற் றழகுக் காட்சி

சீர்வளரும் தாய்நாட்டின் திருபேணும்
தாகமுள செல்வி நாட்டில்
போர்முரசம் ஆர்த்தவுடன் பொற்கணவ
போய்வருக என்பாள் பின்னர்
வீரகுலச் சேவையுமே விரைகுதிநீ
விரைகுதியென் றனுப்பி ஈற்றில்
மார்பினிலே ஈட்டியெனின் மனம்பூத்து
நிறைவுபெறும் மறபோர் மாட்சி

www.padippakam.com



# செங்கோன்மை

குழலினமும் யாழும் குயிலு மடங்க
மழலை பொழிந்த மகவாம் - அழகொழுகுஞ்
சோழன் குமரனொரு சுந்தரத்தேர் ஏறிவந்து
வாழுமிளங் கன்றை வதைசெய்ய - மீளாத
துன்பத்தில் மூழ்கித் துயருற்ற தாய்ப்பசுவின்
அன்புத் தவிப்பின் இயல்பறிந்து - தன்மகவென்
றோர்ந்துகண் ணோடா துறவுநிலை பாராது
தேர்ந்த முறைகள் திரியாது - கூர்ந்தறிந்தே
ஆன்றோர் வகுத்த அறவழியில் தீர்ப்புரைத்துச்
சான்றோனாய் வாழுந் தமிழ்ச்சோழன் - யானென்றான்!

உற்றுச் செவிமடுத்தென் உள்ளந் தெளிவுபெற
சற்றேநில் இங்கென் தனிவழிபார் - அற்றையநாள்

வெற்றித் திருவீற் றிருக்கும்பூஞ் சேக்கையமர்
குற்றம் புரியும் குடிமகனார் - வெற்றிடத்தில்
மெல்ல அமர்தலுமே மேலாம் உயிர்பருகக்
கொல்லும் வழமை கொலுவிருந்தும் - நல்லறஞ்சொல்
தண்டமிழைக் கற்ற தவமாய் தனியுணர்வால்
கொண்ட பரிசாய் கொலுவிருந்த - பண்டையநாள்
சேரன் தலைவன்நான் சிந்தைத் தெளிவுடனே
கோர முறையைக் குலைத் தெறிந்தேன் - சீர்முறையில்
மென்கவரி வீசியதன் மேலாஞ் சுகமளித்தேன்
அன்புயிர்த்து நாட்டில் அறன்வாழ - தன்னுயிராம்
மன்னர்க்கோர் குற்றம்தம் மக்கள் புரியுங்கால்
மன்னித் தருளி மனங்குளிர்க - சொன்னமொழி

www.padippakam.com



உற்றுச் செவிமடுத்தென் உள்ளம் திகிலடைய
சற்றேனில் இங்கென் மறுவழிபார் - அற்றையநாள்

மெய்யிற் பொடியாள் விரிந்த கருங்குழலாள்
கையிற் தனிச்சிலம்பு காதைசொல்ல - மெய்மலர்ந்த
பொய்யில் மனத்தாள் புழுவாய்த் துடிதுடித்துக்
கொய்துலர்ந்த பூவாய்க் குளிரிழந்தே - ஐயோ
குறையேதுஞ் செய்தறியாக் கோமகனைக் கொன்ற
தறமோ நெறிமுறையோ அந்தோ - கறையில்லாச்
செங்கோலோ? செங்கோன்மை தேர்ந்தாயோ ஒவென்றே
அங்கம் முழுதும் உணர்வோடி - பங்கமிலா
அன்பின் துடிப்பால் அழியாவெங் துன்பத்தால்
என்பும் உருக எழுவெறியில் - மன்னவனே!
கள்வனோ அல்லன் கணவன் எனநிறுவ
உள்ளங் திறந்த உயர்நெறியோன் - தெள்ளு
பழமை நினைந்து படர்மரபு மாசுண்ட
இழிவால் இறந்தேன் இணையில் - வழியில்
தண்டம் விதித்ததனிச் சால்புடைய செங்கோன்மை
கண்டாய் கருத்தினிமை காணென்றான் - திண்டாடி

உற்றுச் சைவிமடுத்தென் உள்ளம் நிறைவுபெற
பொறறதேரென் நெஞ்சில் பவனிவர - கற்றைவிரி

சங்கத் தமிழில் தமிழ்மரபில் செங்கோன்மை
எங்கள் வழியென் றிதயமெழ - மங்களமாய்
செங்கோன்மை பாடிச்செயுனர் திறன்பாடி
எங்கோன்மை சாடும் இயைந்து!

www.padippakam.com



## நாமகள் போற்றுதும்

நாமகள் போற்றும் நாம்கள் போற்றும்
நற்றமிழ்ப் பாமகள் நாமகள் போற்றும்
ஓமென வீணைநரம் பொலி ஆர்ப்ப
உள்ளக் கிளர்வுகள் ஆங்கலை சேர்ப்ப
தாமரை நாயகி சார்ந்துமென் போதில்
தண்மை நிறைந்துளச் சால்புமேல் ஓங்கப்
பாமழைப் பண்ணெழப் பைந்தமிழ் பாயப்
பஞ்சணையேன் பள்ளி எழுந்தரு ளீரோ!

கல்வி வளர்ந்திடுங் கண்ணொளி வீச்சில்
கவிதை பிறந்திடும் காவிய மூச்சில்
செல்வம் பொழிந்திடும்தேன் மொழிப் பேச்சில்
சிந்தை மலர்ந்திடும் செல்விபண் பாய்ச்சில்!
கொல்லும் வினையறும் கோன்முறை ஓங்கி
கோடியின் பம்வரும் கொள்கையும் வாழும்
செல்வி யவள்பதஞ் சேர்ந்துளம் போற்றி
செய்குவமே பள்ளி எழுந்தரு ளீரோ!

www.padippakam.com



வெண்ணிலாப் பந்திலோர் விண்ணன்போய் நிற்க
வீதியிலே பலர் விண்வலம் வந்தார்
எண்ணமெ லாந்திங்கள் செவ்வாயைச் சுற்ற
எம்மகம் அட்டமி பஞ்சமி சுற்றும்!
விண்ணிலே தாவியங் காடிடல் வேண்டாம்
வெற்றிக்கொடி அங்கே நாட்டவும் வேண்டாம்!
பண்ணிலே பைந்தமிழ்ப் பல்லவி யாத்துப்
பாடுவமே பள்ளி எழுந்தரு ளீரோ!

பொய்கையிலே வெள்ளைத் தாமரை ஆட
புலரியிலே மனப் பூமலர்ந் தாட
மெய்யிலே மெய்வலி மேவிநின் றாட
மேன்மை தருங்கல்வி மேதினி ஆள
கையிலே ஏடுகொண் டெம்முளஞ் சார்ந்து
காலமெ லாங்கவின் நுண்கலை தேர்ந்து
வைகறை யில்அவள் வீணையின் நாதம்!
வந்தது பள்ளி எழுந்தரு ளீரோ!

படிப்பகம்

www.padippakam.com



## தேவசுதன்

மன்னுயிர்கள் மாண்புடனே வாழ்க என்றும்
மாநிலமே புத்தொளியைப் பெறுக என்றும்
என்னுயிரே எவ்வுயிரும் எனுமுயிர்ப்பில்
எம்மகத்தில் அன்பகிம்சை வளர்க வென்றும்
உன்னதத்தில் உள்ளபெருந் தேவன்கீதம்
உள்ளமெலாம் தாவியிசை சொரிக என்றும்
தன்னுயிரைச் சிலுவையிலே தியாகஞ் செய்து
தாரணியில் வாழுகிற யேசுபோற்றும்!

கொட்டிலிலே பிறந்தாலும் வாழ்நாள் எல்லாம்
கோடியின்னல் பட்டுமனம் தளம்பி னாலும்
எட்டியுதை ஏஇவனோர் இழிந்தோன் என்று
ஏளனஞ்செய் திவ்வுலகந் தூற்றி னாலும்
இரட்சகரங் கவதரிப்பர்! இனிமை சேர்ப்பர்!
இன்பதுன்பம் எல்லாமே அவர்தான்! ஏக்கம்
விட்டொழிமின்! விண்ணிலொளிர் கதிரைப் பாரீர்
விழித்தெழுமின் தேவசுதன் ஜெயந்தி போற்றும்!

வீதியிலுன் அயலவன் யார்? விளக்கஞ் சொல்லி
விதைப்பாளி கதைசொல்லி விதைக்கும் போது
பாதையிலே விழுந்தவிதை முடிவு சொல்லி
பாலகரை எம்மிடஞ்சேர் என்றுஞ் சொல்லி
ஈதலென்ன? இருபாணின் கதையைச் சொல்லி
இதுசொல்லி அதுசொல்லி இதயம் எல்லாம்
ஆதிமுதல் தேவனர சுலகில் ஓங்க
அவதரித்த தேவசுதன் ஜெயந்தி போற்றும்!

படிப்பகம்

www.padippakam.com



# ஞானப் பெண்ணே!

தங்கத் தமிழ்த் தாத்தா ஞானப்பெண்ணே புகழ்
சாகாத் தமிழ்க்கவி ஞானப்பெண்ணே
எங்கள் ஈழக்கவிக் கோனார் என்றே தினம்
ஏத்திப் புகழ்ந்திடு ஞானப்பெண்ணே!

ஆடிப் பிறப்பன்று கூழ் சுவைத்தால் பெண்ணே
அன்று கொழுக்கட்டை நீ அவித்தால்
கூடிப் பனங்கட்டிக் கூழ்குடித்தால் கவிக்
கோனார் சுவைவரும் ஞானப்பெண்ணே!

கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்ற
காவல் வெருளியை ஞானப்பெண்ணே
செத்தழி யாதஓர் சித்திரமாய்த் தந்த
தீங்கவி யாரடி ஞானப்பெண்ணே

ஆடு கதறிய ஓலத்திலே அடி
ஆன்மா பதறிய கோலத்திலே
கோடியி லேஎழும் ஓலமெல்லாம் அறக்
கொள்கை வகுத்தவர் ஞானப்பெண்ணே

www.padippakam.com





கற்பக தாருவை போற்றியவர் ஓலை
காய் கனி பூவளம் ஏத்தியவர்
சொற்சுவை சொட்டிய தன்தமிழில் தாத்தா
சொன்ன சுவையறி ஞானப்பெண்ணே!

வாய்ச்ச வளங்களின் சால்புணர்ந்து எம்மூர்
வாரித் தரும் நிதி தாம் அறிந்து
ஈச்சம் பழம் வரும் காலமென்னே என
என்றும் துடித்தவர் ஞானப்பெண்ணே!

நாட்டு வளங்களைப் பாடினவர் பிற
நாட்டை நம்பும்நிலை சாடினவர்
பாட்டுத் திறமையால் தேசியத்தை என்றும்
பாய்ச்சி நிறைந்தவர் ஞானப்பெண்ணே!

ஏற்றம் உறவழி காட்டியவர் உயிர்
எங்கள் உளங்களில் ஊட்டியவர்
போற்று தமிழ்நிலை நாட்டியவர் தாத்தா
பொற்றமிழ்ப் பாவலர் ஞானப்பெண்ணே!

தேசிய மாகவி என்று பாடு தாத்தா
தென்றல் தமிழ்க்கவி என்று பாடு
ஆசிபெற்றே நீயும் இன்றுபாடு கவி
ஆட்சி புரிந்திடு ஞானப்பெண்ணே!

ஞானப்பெண்ணே எடி ஞானப்பெண்ணே தாத்தா
ஞானம் உணர்ந்திடு ஞானப்பெண்ணே
பேனா எடுத்திடு ஞானப்பெண்ணே தாத்தா
பெற்றி தொடர்ந்திடு ஞானப்பெண்ணே!

www.padippakam.com




கவியரங்குகள்
இலக்கிய
விழாக்களைச் சிறப்பிப்பன.
கவியரங்குகள் பலவற்றை
அம்பி சிறப்பித்தமை
பற்றிய ஒரு யாத்ரா...

படிப்பகம்

www.padippakam.com

வள்ளுவர் வகுத்த அரசியல்
புகாரில் ஒருநாள்
அமரகவி பாரதி
எல்லாம் அவளின் எழில்
நாவலர் நினைவு
கண் புதைத்தது ஏன்?
அகத்தியன் மருகன்
செல்வ மொரிசியசில்
ஒரு சொற் கேளீர்!

படிப்பகம்

www.padippakam.com

புங்குடுதீவில்
தமிழ் மறைக் கழகம் நடாத்திய
திருக்குறள் மாநாட்டில்
பேராசிரியர்
சாலை இளந்திரையன் அவர்கள்
தலைமையில்
1962 இல் அரங்கேறியது

# வள்ளுவர் வகுத்த அரசியல்

பொங்கு தமிழின் பொலிவிற் பொலிவாகி
எங்குங் கவியின் எழிலமுதஞ் சொட்டுகிற
பாவலரே! நாவலரே!
பண்டைத் தமிழ்நிதியின் காவலரே!
வாழ்த்திக் கரங்குவித்தேன்!

பேரவையீர்!
முப்பாநூல் சொல்லும் முறையை
அரசியலை—
இப்பா வரங்கில் இனியதமிழ் செய்ய
பேனா நிரம்பப் பெருகுதமிழ்த் தேன் எடுத்தேன்
ஆனாச் சுழித்தேன், அற்புதந்தான்!

அன்றோர்
அசரீரி வாழ்த்தியிறை ஆசியுரை கூற
பசிதீரப் பாவாணர் பாமாலை சூடி
பரிமே லழகருடன் பத்தாமோ... அப்பப்பா!
உரைசொல்லிப் பூத்துத் தமிழ்சொன்னோர்
எத்தனைபேர்?

www.padippakam.com



அத்தனையும் எண்ணி அகவான் ஒளிர்வுபெற
சித்தத் தினிகுறளின் சீர்மை...மிகு அற்புதந்தான்!

அற்புதத்தை விட்டிடுமொய்!
ஆய்ந்த அரசியலைப் பற்றியெதுஞ் சொல்லும்
சொல்லுமெனப் பேரவையீர்
நெஞ்சந் துடிக்கும் நிலையறிவேன்

ஆகையினால், கொஞ்சந் திரும்பி
குறித்த அலுவலுக்கு வந்திடுவோம் வாரீரோ!

பேரவையீர்!
வள்ளுவனார் ஆய்ந்து வகுத்த அரசியலை
தெள்ளு தமிழ்மறையில் தெளியும் அரசியலை
உள்ளத் தனையது உயர்வென்று நெஞ்சத்தைக்
கொள்ளுங் கருத்திற் கொலுவிருக்குங் கோன்முறையை
அள்ளி அலசி
அணுவணுவாய் ஆராய்ந்து
தெள்ளு தமிழ்ப்பாவாய்ச்
செய்துவிடல் ஏலாது!

பானைநிறை சோற்றில் பதம்பார்க்கும் ஒன்றைப்போல்
ஆனாலைச் சொல்லி அரசியலை ஆய்வதற்கு
தேனார் குறளில் திகழுமணி ஒன்றெடுத்து
ஞானச் சுடரின் நயனாய்ந்து பார்ப்போமா?

படிப்பகம்

www.padippakam.com



''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், மனிதா
பரந்து கெடுக உலகியற்றியான்'' என்று
நிறைந்த அரசியலை நித்திலமாய்ச் சொல்லுகையில்
திறந்த மறையை திருக்குரலாய்க் கேட்கின்றேன்

பொதுவுடமை அங்கே
பொதிந்து கிடக்கிறது!
மதிவளமும் அங்கே
மலர்ந்து பொலிகிறது!

பேரவையீர்
வறுமைக் குறட்டமுத்தும் வஞ்சனையில் மக்கள்
சிறுமை யடைந்தமுந்திச் சீர்கெட்டால், அந்தோ!
பரந்து கெடுகவப் பாரமைத்தோன் என்றுள்
எரிந்து கலங்கி எழுச்சிபெறும் வேளை
உலகியற்றி யானென்று குறிக்கின்ற அந்தத்
தலைவன் எவனாமோ?
பாரமைத்தோன் யாராமோ?

தனக்குவமை இல்லாதான்
தாள்சேர்ந்து நின்றால்
மனப்பூவில் கோயில்கொளும் மாகடவுள்
அன்னார்
பரந்து கெடுகவெனப் பச்சைத் தமிழில்
எரிந்து விழுந்தாரா ஏந்தல், மறைப்புலவர்?

www.padippakam.com



பகுத்தறிவுப் பாதையிலே பார்த்தேகின் பாவைத்
தொகுத்து நிறுத்துச் சுவைபொருளைத் தேடுகையில்
பாரமைத்தோன் என்றால் பகவனல்லன்!
பின்னரவன்
யாரென்று கொள்வோம்?
யாரிந்தப் பாரமைத்தோன்?

''இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்'' - ஆமாம்
என்றந்தப் பொய்யில் புலவன் குரலொலியும்
நின்றெந்தன் நெஞ்சில் நெளிவு தருகிறது!

இறையென்று சொல்லுங்கால்
எண்ணஞ் சுரக்கிறது!

காட்டுக் கரியினமே கண்டுவிடும் ஓர் தலைவன்!
விட்டுக் கொரு முதல்வன்!
விரிந்து பரந்தவுடன், நாட்டுக் கொருதலைவன்!
நல்ல நெறி!
நான் முகனார் காட்டும் அரசினிலும்
கருத்தா - ஓர் காவலனே!

காவலனை எண்ணுங்கால்
கருத்து விரிகிறது!
நாவித் தமிழ்மறையின் சாரம் விரிகிறது!

www.padippakam.com



கல்வி யறிவுடையோன்
கல்லாமை நீக்கிடுவோன்
செல்வத் திருவுணர்ந்து
தேர்ந்து பொருள் பெறுவோன்
காட்சிக் கெளியன்
கடுஞ்சொல் அறியான்நல்
ஆட்சிக் குரியமன
ஆற்றல் அழகுடையோன்
வாய்மை உடையான்நல்
வாழ்க்கைப் பொருள்தெளிவோன்
தாய்மை மனதான்
தமது குடிதழீஇக்
கோலோச்சும் சான்றோன்
மமதை இலாத மனிதன் - மன்னனெனும்
மாட்சிமைக்கு ஏற்ற மக்கள் தலைவன் மனச்
சாட்சி உயிர்த்த மனித முதல்வன் அவன்!

பேரவையீர்
எரிந்து மனங்குமுறி என்னைப் பொருதாதீர்!
பரந்தவனே வீழ்கவென்று பாவில் பொருளில்லை!
என்னை விடுங்கள்!
இன்னும் தொடர்கின்றேன்!

படிப்பகம்

www.padippakam.com



பகுத்தறிவுக் கொவ்வாத பாரமைத்து பாராள
வகுத்த வழியெல்லாம் வடுவுடையோன் மாநிலத்தில்
மனிதப் பிறப்புரிமை மலரா அரசமைத்து
புனிதக் கருத்தழகு பூவாத நெஞ்சுடனே
ஏற்றத்தாழ் வற்ற இயற்கை ஒழுங்கை எல்லாம்
மாற்றி அமைத்து மனித சமுகம்துர்
நாற்ற மெடுத்து நலியவைப்போன்
உரிமை இழந்தும் உயிர்இழந்தும் மக்களினம்
கருகிமடிந்து கானகம்மேல் என்றெண்ணும்
சஞ்சலத்தை, அந்தச் சமுகத்தை அமைத்துள்ளோன்—

அவனே கெடுகவென
அர்த்தம் விரிகிறது!
அவனேஇப் பாரமைத்தோன்
என்றுபொருள் சேர்கிறது!

பேரவையீர்!
முறையே இறைகாக்கும் முட்டாச் செயினென்று
அறனும் அரசியலும் ஆய்ந்தாங்கு சொல்லியதால்
குடிதழீஇக் கோலோச்சா காலத்தின் மன்னன்
அடிதழீஇ நிற்காது இவ்வவனி என ஆகிறது!

ஆராய்ந்து
பார்க்குங்கால்,

அ.க—9

படிப்பகம்

www.padippakam.com



முற்போக்கா பிற்போக்கா முரணேதும் இல்லாத
நற்போக்கா நன்மை நாட்டுக்கு எனவாய்ந்து
போக்கை வழிப்படுத்தப் பொன்னினுமே மேலான
வாக்குப் பலத்தையுமே வள்ளுவம் இங்குஏற்கிறதே!

வாழையடி வாழை வளர்ந்தாங்கோ ஆளுமுறை
ஆளும் பிறப்புரிமை அறஞ்சொல்ல வில்லையன்றோ!

ஆமாம்!
அணுவும் அரசியலும் ஐக்கியமாய் ஐக்கியத்தின்
துணிவில் மனவுணர்வே தூங்குகிற காலமிதில்
திண்டாடு வோர்க்குத் திசைகாட்டச் சொல்லுகிறேன்!

அண்டத்தில் ஓரணுப்போல்
அரசியலின் தத்துவமே
மண்டிக் கிடக்கிறதே
மறைநூலில்! ஆமாம்!

அண்டத்தில் ஓரணுப்போல்
அரசியலின் தத்துவமே மண்டிக் கிடக்கிறதெம்
அறநூலில்!

பேரவையீர்!
அற நூல் ஓர்
அரசியல் நூல் என்று அந்த அகரத்தை உச்சரிக்க
சிரசு நிமிர்கிறது சிந்தைத் திரையினிலே—

www.padippakam.com

131★ மனசில் ...

தேர்தல் பிரசாரம்
தெருவெல்லாம் ஊர்வலங்கள்
ஊரில் பிளவும் உரிமைக் குரல் ஒலியும்
புரட்சி சதித்திட்டம் பூவுலகில் பூகம்பம்
பேரரசர் மோதல் பெருவலிமை உள்ளவர்கள்
யாரென்று காட்ட இதயத் துடிதுடிப்பு!
உச்சியிலே கூட்டம் யூ.என் பரபரப்பு
அச்சம் கவிந்த அகிலந் துடிதுடிப்பு
அணுவின் துணையும் ஆயுதமும் உண்டென்று
பணியமறுக்கும் பண்பால் பிணிவிரிவு...

அப்பப்பா!
இந்நிலையில் இதயந் தெளிந்தெமது
சொந்த மறையை திருக்குரலைக் கேட்கின்றேன்!
கடல்கள் கடந்து கண்டங்கள்மேல் தாவிப்
படலை திறந்தெம் பொதுமறையின் பாதைசொல்லி
காலத்தை வெல்லும் கருத்து நிறைவாலே
ஞாலத்தின் ஆளும் ஞானத்தை காணுகிறேன்!

காணுகிற அந்தக் கலகலப்பில்
ஞானமதைப் பேணுகிற நீர்என்று
பிரியவிடை கோருகிறேன்!

www.padippakam.com

சென்னையில்
1968 ஆம் ஆண்டில் நடைபெற்ற
இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு
நடாத்திய
'புகாரில் ஒரு நாள்"
என்கிற உலகக் கவிதைப் போட்டியிற்
அண்ணா பதக்கமும் பாராட்டும் பெற்றது

# புகாரில் ஒரு நாள்

சக்தி வணக்கம்

சீரார் தமிழின் திருவாற் பொலிந்த திருவுளத்துப்
பேரார் அவையிற் பெரியோன் விருது கவர்வதற்குப்
பாராய் கடைக்கண் பழகுந் தமிழைப் பொழிந்துதர
வாராய் திருவே வளர்பூம் புகாரை வலம்வரவே

முன்னுரை

என்றா ரமுதாய் எழிற்றாள் பரவு எனதகத்தில்
நின்றாள் தழுவி நிகரில் மரபின் நிதி தெளிய
மன்றா டியயான் மனதில் மிளிரும் மணிநகரில்
ஒன்றாய் இருந்தேன் ஒருபூம் பொழிலில் உணர்விழந்தே

ஆனாச் சுழித்த அருந்தாய் நினைந்தோர் அடியெடுக்கப்
பேனா நிரம்பப் பெருகுந் தமிழ்ப்பா பெருக்கெடுத்துத்
தேனாய் வடிந்து தினைமாக் குழைந்து திரள்கையிலே
மீனார் கடலில் மெதுவாய் உளமும் மிதந்ததுவே

படிப்பகம்

www.padippakam.com



நூல்

(வேறு)

காவிரி யாற்றுக் கழிமுக மேயகக் கண்களுக் கெட்டியது
பூவிரி நாட்டியப் பூம்புகா ரேபுதுப் புன்னகை கொட்டியது
பாவிரிந் தோடிய பைந்தமி ழால் நெஞ்சிற் பல்லவி முட்டியது
தாவரந் தாவரந் தண்டமிழ்த் தாயெனத் தண்ணிசை கொட்டியது
கொட்டிய நல்லிசை மெட்டினி லேயொரு கோன்முறை எட்டியது
எட்டிய பார்வையில் எங்கணு மேபுகார் இன்கவி சொட்டியது
சொட்டிய தேன்கவி மாரியிலே பொன்னி தோள்களில் தட்டியது
தட்டிய தண்மையில் நான்மலர்ந் தேன் மனந் தாயகம் ஒட்டியது

மருவூர்ப்பாக்கம்

(வேறு)

மாடிகள் உயர்ந்து வானை மருவிய மருவூர்ப் பாக்கம்
தேடிய செல்வம் எல்லாந் திரைகடல் ஓடி வீரஞ்
சூடிய மகுடம் என்னச் சுடர்விடு மனைகள் காண
ஓடிய முகில்கள் நின்றே ஒருமுறை பொழிந்த காலம்

கதிர்மணி களத்தி லாடக் கணிகையர் பரத மாட
மதுமலர்க் குழவி தூங்கி மனைகளில் அமைதி தூங்க
வதுவை செய் குயில்கள் தூண்டி வருடிய உணர்விற் பூத்த
சதுர்விழி மாதர் நெஞ்சில் தனியுணர் வுயிர்த்த காலம்

www.padippakam.com



பார்புகழ் திரவியங்கள் பாய்விரித் தோடிச் சொந்த
ஊர்களிற் சேர்க்க மொய்த்தாங் குலகரங் கான தாலே
சீர்பொலி மணிகளார்ப்பச் சிலம்பொலி கலந்தங் கார்ப்ப
நேர்வழி வணிப மோங்கி நிறைநிதி குவிந்த காலம்

பண்டமாற் றரசு செய்து பவளமும் மணியும் முத்தும்
மண்டிய சந்த னங்தேன் மகிழகில் ஆர வண்ணம்
கொண்டவர் கண்ட வின்பங் குலவிய பெருமை கூறத்
தண்டமிழ்க் கிளவி ஒன்றே தரணியில் அறிந்த காலம்

நரையிலர் மக்கள் நாட்டில் நடப்பவை அறனாய் என்றும்
பரதமும் பண்ணுந் தேர்ந்த பனிமலர்க் கொடிகள் ஆட்டம்
சொரிவன பூக்கள் மாரி துயில்வன பிணிகள் பஞ்சம்
விரைவது பொன்னி இன்பம் விளை நிலம் மலர்தல் வேண்டி

பட்டினப்பாக்கம்

பட்டினப் பாக்க மெங்கும் படர்ந்தடர் வீதி யோரஞ்
சொட்டிய கோலம் நீதிச் சோழனின் மரபு சொல்லும்
இட்டுணல் இல்லை நாட்டில் இரப்பவர் இன்றி ஓங்கித்
தட்டிய அடிகள் எல்லாந் தமிழ்க் கலைத் தொழில் களாசே

ஆயநற் கலைகள் ஓங்கி அரண்மனை அறனி லோங்கிக்
கோயில்கள் விகாரை பள்ளி கொள்கையின் தெளிவு
காட்டு

தாயகத் தணைய முத்துந் தமிழ்விரி யாறும் ஊரிற்
பா ய்கையில் தயங்கி மெல்லப் பலகலை பயின்ற காலம்

www.padippakam.com



பாவையர் காந்தள் ஆடப் பருத்தியும் பட்டும் பூத்துப்
பூவிரிந் தாடும் பொய்கை புனல் மலர்ந் தாடுஞ் சொந்தத்
தேவையீ டாடும் நாளுந் தெளிந்தநல் லறிவு பாடும்
ஓவியஞ் சிற்பம் எல்லாம் உயிர்பெறும் உணர்வில் ஆடும்

நீதிநூல் இல்லை வாழ்வில் நெறிமுறை வளர்வதாலே
வேதியர்க் கில்லை வேலை வீடெலாங் கோயிலாகிச்
சோதிடர்க் கில்லை வேலை துயருறா நாட்டில் நூறாய்ச்
சாதிகள் சொல்வர் நுட்பத் தனிக் கலை விரிவ தாலே

ஆலைகள் இல்லை இல்லம் அனைத்துமே ஆலை யாகிச்
சோலைகள் இல்லை வீடே சொரிமலர்ப் பொழில்களாகி
வேலைகள் இல்லை வாழ்வோர் வினைஞராய் விளங்கி
மேலே
நீலவான் நின்று காணல் நிலமல நிறைந்த செல்வம்

நாளங்காடியில் விழா

காரணம் என்ன நாளங் காடியிற் புதுமை என்ன
தோரணம் கரும்பு வாழை சுடர்விரி கமுகு மாலை
பூரண கும்பம் எங்கும் புன்னகை பூத்த கோலம்
வாரணம் பரிகள் மேள வாத்தியம் சேனை மக்கள்

www.padippakam.com



அந்தரத் தெழுந்தாங் கீர்ப்பை அறுத்தெறிந் தழகு
சொட்டுஞ்
சந்திரன் கொய்ய முந்திச் சன்னதங் கொண்டோர் கூடச்
செந்தமிழ்ச் சோழன் நாட்டிற் சேர்ந்ததேன் செய்தி என்னே
இந்திர விழாவுக் காவிங் கித்தனை அழகுக் கோலம்

ஆய்ந்தறிந் தவிந்த சான்றோர் அருந்தமிழ்த் துறைகள்
ஆடித்
தோய்ந்தெழுந் தமுது சிந்துந் திருவிழா தமிழுக் கென்று
பாய்ந்ததோர் வாக்கு நெஞ்சம் பாலமொன் றமைக்குந்
தன்மை
வாய்ந்ததிவ் வரங்கே யென்று விரைந்ததவ் வரங்கை நாடி

சந்தன வாடை வீசச் சதுர்பயின் றதனில் ஆடி
வந்தன பலவாய் வீணை வேய்ங்குழல் யாழின் கானம்
உந்தியென் உள்ள மாங்கே ஒருவிழி செலுத்த முந்தச்
சந்திர வதன மெல்லாந் தரையினில் நின்ற தென்னே

மனநிறைவு

துடிப்பிலே எழுந்த நாதஞ் சுருதியோ டொன்ற வெட்டி
அடித்ததோர் மின்னற் கீற்றாங் காங்கிலோர் அழகுப்
பாவை
பிடித்தவள் பற்றிக் காந்தப் பித்தொளிர் கண்ணால் ஈர்த்து
விடுத்தனள் அன்புப் பாணம் வியந்தனர் அவையோர்
சொக்கி

வளநிறை மனதின் செல்வ வருகநீ வருக வின்று
வழிபிரிந் தழியு நுட்ப வகையுரை பதங்க ளெல்லாம்
மொழிவழி யொன்றைப் பால மிடுதலே முதன்மைத் தேவை
விழிதர வந்தாய் முந்தி விரைதிநின் பணியில் என்றாள்

www.padippakam.com



(வேறு)

சீர்தமிழ் நுண்கலைச் சொற்களில் ஒன்றிய சிந்தை
நிறைந்ததம்மா
ஊர்பல வாயினும் ஒண்டமிழ் ஒன்றென உள்ளம்
மலர்ந்ததம்மா
கூர்மதி யோர் எந்தன் கொள்கை நயந்திடக் குன்றாய்
உயர்கையிலே
கார்பொழி பூநகர் கண்ட விழாப் பயன் கண்ணைக்
கொடுத்ததம்மா

ஈழ மணித்திரு நாடன் கருத்திது வென்று முழங்குகையில்
தோழ ரெனத் தமிழ் வீரரெலாமெனைத் தூக்கி மகிழ்ந்து
நின்றார்
ஆளுந் தமிழ்க் கலைப் பாலமமைத்துநாம் அண்டி
அணைவோமென
ஆழ நெடுந்திரை ஆழி கடந்தவர் அன்பில் மிதந்து
நின்றார்

படிப்பகம்

www.padippakam.com



சித்தஞ் சுழன்றது மத்தெனவே யதில் முத்துத்
திரண்டெழவே
சொத்து மலர்ந்தது கொத்தெனவே மது கொட்டி
ஒளிர்ந்ததுவே
புத்தம் புதுக்கலைச் சொற்களெலாம் பொதுச் சொத்தாய்
உருள்கையிலே
முத்து மிளிர்ந்தது நெஞ்சினிலே முது சொத்து நிறைந்ததுவே

துள்ளி யெழுந்துநான் பார்க்கையிலே எட தூக்கங்
கலைந்துவிட்டேன்
தெள்ளு தமிழ்க்கவி பாடத் தொடங்கிய செய்தி
மறந்துவிட்டேன்
உள்ளமெலாம் கவி ஊற்றுச் சுரந்திட உண்மை
பகர்ந்துவிட்டேன்
எள்ளி நகைப்பினும் எங்கள் புகாரிலோர் நாளைக்
கழித்துவிட்டேன்

www.padippakam.com

யாழ்-திருநெல்வேலியில்
நிகழ்ந்த
பாரதி விழாவில்
இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள்
தலைமையில்
1959இல் அரங்கேறியது

# அமரகவி பாரதி

அமரகவி பாரதியை
அருந்தமிழாள் அவதாரப் புதல்வன் என்பர்!
தமதரிய பாவிசையால்
தாரணியை ஆளுகிற புலவன் என்பர்!
அமுதகவி ஆற்றலினால்
அமரனென வாழுகிற கவிஞர் கோனார்
நமருயர நாடுயர
நதிபோல கவிபாய்ச்சி வாழுகின்றாரே!

சங்கத்தில் வீற்றிருந்து
தமிழ்பாடிச் சன்மானம் பெற்றோர்போல
மங்குபுகழ் மன்னர்களை
வாழ்த்தியவன் மணிமகுடம் பெற்றானல்லன்
எங்குமுள இறைவனையே
தினம்பாடி ஏகாந்தங் கண்டானல்லன்
பொங்கிவரும் உணர்வினிலே
புவிவாழப் புதுப்பாதை வகுத்தான் அன்றோ!

படிப்பகம்

www.padippakam.com



அடிமைகளாய்த் தளையினிலே
உரிமையிலா அநாதைகளாய் அழிந்தமக்கள்
மடமைநிலை மாறிமன
இருள்தேய மனிதகுல மானமோங்க
திடமனமுந் திண்தோளும்
கொண்டுலகர் திசைகாண திருபெற்றோங்கி
குடிமகனார் மனமொளிர்
குலவிளக்காய் ஒளிரவழி வகுத்தான் அன்றோ!

பாதகரின் பழிச்செயலால்
பார்முழுதும் பாழடைந்து பிளவுமல்கி
சாதிமதம் நிறபேதச்
சதிபலவாய் சமூகமெலாம் கூறுநூறாய்
நீதிவழி தவறிநிலை
கெட்டழிந்து மாநிலத்தில் மதிதேய் வேளை
பேதமறத் தனிமனிதப்
பிறப்புரிமை ஒளிவிரிய வகுத்தான் பாதை!

படிப்பகம்

www.padippakam.com



அஞ்சுகம்போல் மாதர்குலம்
அடிமைகளாய் அடைபட்ட அநியாயத்தை
சஞ்சலத்தைச் சகியாது
சமர்செய்து சமவுரிமை கோரிநின்றான்
வெஞ்சமரின் வெற்றியினால்
விடுதலையாய் மகளிரினம் புகழத்தாயின்
நெஞ்சினிலே ஒளிருகிற
தவமணியாய் தாரணியில் வாழ்கின்றானே!

பிறநாட்டில் வளருகிற
கலைகளெலாம் தமிழ்ஏட்டில் கொணர்ந்துசேர்த்து
இறவாத புகழுடைய
கலைக்கோயில் எழுப்பிவிட ஆர்வங்கொண்டான்
அறைகூவித் தமிழ்மகனை
அழைத்தந்த அருஞ்சேவைக் கேவல் செய்து
திறவாத மனக்கதவைத்
திறந்தறிவுத் தீபவொளி திகழவைத்தான்!

www.padippakam.com



அச்சமெனும் மனப்பேயை
அடித்தோட்டி ஆண்மையெனும் பலமுந்தந்தே
எச்சமயம் எதுவரினும்
எதிர்கொண்டே ஏற்கமன வலிமையூட்டி
பச்சையிளம் பாலகரின்
நெஞ்சினிலும் பசுமரத்தில் ஆணிபோல
அச்சிறுவர் ஆய்ந்துரை
அரும்பரல்கள் சேர்த்தழகாய் அழுத்திநின்றான்!

நல்லதொரு வீணையெனில்
நரம்பதிர நாதமெழச் சுவைத்தல் இன்றி
கொல்லையிலே புழுதியிலே
நலன்கெடவே விட்டெறிதல் நன்றோ தாயே
சொல்லடிநீ சிவசக்தீ!
சொல்லென்றான் சுருதியெழ, அம்மா சக்தீ!
வல்லமைதா மாநிலத்தோர்
வாழவழி செய்யவென அடித்துக் கேட்டான்

படிப்பகம்

www.padippakam.com



தெருவினிலோர் மூலையிலே
சாக்கடையில் தேடவொரு உற்றாரின்றி
திரிகிறவத் திக்கற்றோர்
தினந்துன்பத் தீயினிலே துவழக் கண்டு
எரிமலைபோல் மனங்குமுற
ஏங்கியவள் ஏழைகளுக் கிரங்கி நிற்பாள்!
உருகிவரும் அவனுள்ளம்
உணர்ச்சியிலே ஊற்றெடுக்கும் உலக உண்மை!

உள்ளமதில் ஊறுகிற
தமிழ்த்துளியை உலகத்தோர் வாழ்நாள் எல்லாம்
அள்ளிநித மருந்திமன
நிறைவெய்த அமுதகவி தந்தான் ஆங்கு
தெள்ளுதமிழ்ச் சுவைசிந்தும்
தேன்சிந்தும் சிலைமனமும் உணர்வு கொள்ளும்
வள்ளுவனும் இளங்கோவும்
வளர்ந்துதினம் வாழ்வதுபோல் வாழ்கின்றானே!

படிப்பகம்

www.padippakam.com



பா மதுவைப் பசுந்தமிழாய்ப்
பிழிந்தேந்திப் பழரசமாய் பண்புஞ் சேர்த்து
தேமதுரத் தமிழின்பம்
தென்றலெனத் தேசமெலாம் பரவச் செய்தான்!
பாமரரும் பண்டிதரும்
பிளவற்றுப் பைந்தமிழால் ஒன்று பட்டுச்
சேமமுற வழிவகுத்த
பாரதியோ, செய்தவத்தின் புலவன் அன்றோ!

கோரவன மாக்களென
மாந்தரெலாம் கொடுமைகுலத் தொழிலாய் கொண்டு
சீர்மலரா நெஞ்சுடனே
சிறுமையெனுஞ் சிறையினிலே சிதையும் இந்நாள்
ஆரமுதத் தேன்தமிழில்
தினைமாப்போல் அறவழிகள் சேர்த்துத் தந்த
பாரதியின் பாதையிலே
தொடர்வோம்நாம் பசுமிழலில் பாரும் வாழும்!

படிப்பகம்

www.padippakam.com

யாழ் - வசவிளான்
மத்திய கல்லூரியில்
நடைபெற்ற
வாணி விழாவில்
கவிஞர் வி. கந்தவனம் அவர்கள்
தலைமையில்
1967 இல் அரங்கேறியது

## எல்லாம் அவளின் எழில்!

அணுவின் அணுவாய் அகிலத்தை ஆளும்
இணையில் இறைசக்தி தேவி - பணிவாய்
வணங்கும் அடியார் வளருள்ளப் பூவில்
இணங்கியுறை தாயே, இணை!

நவராத் திரிகாலம் நாடுவிழாக் கோலம்
அவல்சுண்டல் என்றும் அமுதென்றும் ஆயகலை
ஆடல் அரங்கென்றும் அள்ளி இசைநுகரப்
பாடல் அரங்கென்றும் பாவரங்கம் என்றும்...

அட!

ஓரிரவு மட்டுமல்ல
ஒன்பதுரா கொண்டாட்டம்!
சீர்வளர்க என்றவளின்
சிந்தனையில் கொண்டாட்டம்!

ஓர்மூன் றிரவுமனம் ஒன்றிமலை மாமகளை
வீரம் தருகவென வேண்டிப் பரவுகிறோம்,
செல்வம் பொலியத் திருமகளை மூன்றிரவு!
கல்வி கலைக்காய் கலைமகளை மூன்றிரவு!

அ. க. -10

www.padippakam.com



ஓரிரவு மட்டுமல்ல
ஒன்பதுரா கொண்டாட்டம்
சீர்பொலியும் அன்னாள்
திருவடியில் கொண்டாட்டம்!

அந்த அவளை அகத்தில் நினைந்தெனது
சொந்த மனதில் சொரிந்து சுனையாகி
முந்தி வடிந்து முதுதமிழாய் முத்தொளியாய்ச்
சிந்தும் அமுதாய்ச் சிலவடிகள் பாடுகிறோம்!

நாமெல்லாம் இந்த
நவராத் திரிநாளில்
பாமாலை சூட்டிப்
பணிந்து பலவேண்டி,

சீர்பூத்து நெஞ்சில் திருபூத்துச் செல்வஞ்சேர்
கார்பூத்து நெஞ்சின் கருணை மழையாலே
ஏருழுத பாதை எழில்பூத்துத் தேசமொம்
ஊர்பூத்து வாழ்கவென உள்ளத்தால் வேண்டுகிறோம்!

உள்ளத்தால் வேண்டும்
உயிர்ப்பில் உணர்வூற
மெள்ளத் தெளிந்துபடர்
மென்னொளியில் பார்க்குங்கால்,

www.padippakam.com



எல்லாம் அவளாய் எழுந்தருளி எங்குமவள்
இல்லா திருந்தங்கு இணைந்தொன்றக் காணுகிறேன்!
நல்லார் உளத்தில் நறும்பூ மதுசிந்துஞ்
சொல்லாய் மலர்ந்து சுவைசிந்தக் காணுகிறேன்!

கல்லார் உளமுங் களமாய் விளைந்துகவி
வல்லார் உளமாய் வளம்பொலியக் காணுகிறேன்!
பல்லா யிரமாய்ப் பலகோடி கோடியுயிர்
எல்லாம் அவளின் எழிலாகக் காணுகிறேன்!

காணுகிற அந்தக்
கவிதை மனவுணர்வில்,
வாணி அருளால்
வளரும் கவியுணர்வில்,

உள்ளக் கமலத் துயிரூட்டும் எம்மன்னை
அள்ளிச் சொரிகின்ற ஆய கலைளெலாம்
மெள்ள மனதில் மெருகோ டிணைந் தொன்றி
வெள்ளைக் கமல இதழ்போல் பொலிவுதர,

செங்கமலம் பூத்துச் சிரித்தாற்போற் சீரெல்லாம்
எங்கும் எதிலும் எழிலவளாய்க் காணுகிறேன்

www.padippakam.com



காணுகிற அந்தக்
கவிதை மனவுணர்வில்
வாணி அருளால்
வளருங் கலையுணர்வில்,

எங்கும் எதிலும் எழிலாய் உயிராகித்
தங்கி இணைந்து தழையாய் வளர்நிதியாய்,
பொங்கிப் பொலிந்து பொருளாய் பெறுமுணவாய்
மங்காப் புகழ்சேர் மரமாய் மலர்கனியாய்

செங்கதிரோன் கீற்றைத் தெளிந்து திருவேந்தி
எங்கள் இணவாக்கும் இயல்பார் பசுமிலையாய்,
வெண்காயத் தோட்டம் விரிந்து கனிவாழை
உண்பண்டம் என்றெம் முயிர்கள் பெறுமெல்லாம்,

தங்கருணை யாலே தவமாய் அருள்புரியும்
எங்கள் அவளின் எழிலெனவே காணுகிறேன்!

காணுகிற அந்தக்
கவிதை உணர்வினிலே
தோணி எடுத்தோர்
தனிமத்துள் பார்த்தால்,

இலத்திறன்கள் ஓடி இயங்கும் இயல்போர்
கலைத்திறனாம் அக்கலையின் காலாய்க் கருவொன்றைச்
சுற்றிச் சுழலுமவை சுற்றுப் பிறழாமல்
பற்றி இழுக்கும் பணிசெய்யக் காணுகிறேன்!

www.padippakam.com



பற்றை அறுத்தோடிப் பாயும் இலத்திறன் ஓர்
சுற்றில் தொடர்ந்து துரிதமின் னோட்டமென
ஒடித் திரிந்தும் ஒளிவெப்பம் காந்தமென்றும்
ஆடல் புரிந்தவளே ஆட்சிசெயக் காணுகிறேன்!

காற்றில் கனலில் கடலில் கனிப்பொருளில்
ஊற்றில் உயிரில் உலகில் உளவெதிலும்
போற்றற் கினிய பொருளாய் பெருமெழிலாய்
ஆற்றல் முழுதும் அவளாகக் காணுகிறேன்!

காணுகிற அந்தக்
கலைவல்லாள் நாட்டத்தில்
வீணை நரம்பாய்
விளையாடும் நெஞ்சினிலே

ஏணை அமைத்தோர் எழிலே விரிகிறது!
வாணி அருளால் வளர்கவிதை பாய்கிறது!
கண்ணில் அவளின் கருணை தெரிகிறது!
உண்மை உயிர்ப்பில் உளமும் நிறைகிறது!
சொல்லின், உலகில் சுவைசேர் பெருஞ்சக்தி
எல்லாம் அவளின் எழில்!

www.padippakam.com

1969 இல்
குருணாகலை நகரிலே
நடைபெற்ற
நாவலர் நினைவு விழாவில்
மகாவித்துவான்
F. X. C. நடராஜா அவர்கள்
தலைமையில்
அரங்கேறியது

# நாவலர் நினைவு

நல்லையூர் தந்த ஆசான்
நாவலர் எந்தை அந்நாள்
இல்லையேல் சுருதி எங்கே
இனியநற் றமிழ்தான் எங்கே
எல்லையில் சைவ ஞான
ஆகம நெறிகள் எங்கே
சொல்லென ஒலித்த நெஞ்சில்
தொடர்ந்ததோர் நினைவுச் சுற்று!

சுற்றிலே சிக்கி நின்றச்
சுழலிலே அலைந்த நெஞ்சைப்
பற்றியோர் பழமை வந்து
பலகதை கோலஞ் சொல்லத்
தொற்றிநின் றுணர்வு தாவித்
தோளிலே தட்டித் தட்டி
அற்றைநாள் அலைகள் மோதி
அகத்திலோர் சாட்சி சொல்லும்!

படிப்பகம்

www.padippakam.com



அன்னியர் ஆட்சி ஓங்கி
அடிமைகள் தளையில் சிக்கிப்
பன்னரும் பழமை மேன்மை
பலபடச் சிதைந்த வேளை
முன்னைய முதுசொத் தெங்கள்
முத்தமிழ் சைவம் என்று
மன்னலை உணர்த்தி வாழும்
மகான்முகம் ஒளிர்ந்த தம்மா!

முறுவலில் மலர்ந்து சைவ
முறையொளிர் நெற்றி மூன்று
குறிகளில் நிறைந்து பொட்டின்
குளிர்மையில் கனிந்து மாலை
மறைவழி யுணர்த்த நெஞ்சம்
மதியொளி நிரப்ப வாழ்வில்
நெறிவளர் ஆண்மை கொண்டோன்
நினைவிலே நிமிரக் கண்டேன்!

படிப்பகம்

www.padippakam.com



வருகநின் வரவில் ஐய
வளர்மர பொளிர்க நெஞ்சில்
அருளிய காட்சி ஓங்க
அறிவுரை தருக என்றேன்!
பெருகுக இன்பம் எங்கும்
பேரொளி புலர்க என்றார்!
திருநிறை எந்தாய் எங்கள்
திருப்பணி யாதோ என்றேன்!

ஒளிதவழ் முகத்தார் என்னை
ஒருமுறை கூர்ந்து பார்த்தார்
பழமையைப் பேசி நின்றால்
பாதிநாள் அவமே என்றார்
பழையன கழியப் பின்னாள்
புதியன புகுதல் நன்று
வளர்கிற சால்பைச் சொல்லும்
வழிகளைத் தொடர்தி என்றார்!

என்றதும் முகத்தைப் பார்த்தேன்
என்னகம் மீண்டும் மீண்டும்
அன்றிவர் செய்த தென்ன
அதனிலே புதுமை என்ன
இன்றிதைக் கேட்போம் ஆமாம்
எனமனம் துணிந்த வேளை
நின்றுகேள் சொல்வேன் என்று
நினைவலை புரளச் சொன்னார்!

படிப்பகம்

www.padippakam.com



மேடையில் ஆண்மை பேசல்
 மேலைநாட் டியல்பு செய்யுள்
பாடலே வசனம் அல்ல
 பைந்தமிழ் மரபென் றன்றும்
ஏடெலாம் விட்டி ருந்தால்
 எந்தமிழ் அரசி இன்று
நீடவை ஏறு வாளோ?
 நிலனெலாம் பரவு வாளோ?

கடைபயின் றியங்கும் வையம்
 நாளும்முன் னேறும் உள்ள
உடைகளை மாற்றல் இந்த
 உலகரின் இயல்பே சைவ
விடைசொல வினா எழுப்பல்
 விசித்திரம் என்றேன் ஆகில்
தடையறுத் தின்று சைவம்
 தமிழரை ஆளு மாமோ?

www.padippakam.com



கிறித்தவர் வேத நூலை
  கிழித்துநான் எறி வில்லை
மறைத்தமிழ் தேடி அன்றம்
  மதத்தினர்க் களித்தேன் ஆனால்
மறுத்ததை வெல்லச் சைவ
  மறையையும் பரப்பி வைத்தேன்
அறத்தமிழ் முறையும் அஃதே
  அகந்தெளிந் துணர்தி என்றார்!

பாலருக் கெழுதி எங்கள்
  பாமரர்க் கெழுதி ஞான
சீலருக் கெழுதி எல்லாச்
  சிந்தையும் திறந்து வைத்தேன்!
காலசக் கரம்ஓ யாது
  கழிவன கழியும் அந்தக்
கோலநீ தெளிந்து வாழும்
  கொள்கையை வகுத்தல் வேண்டும்!

என்றவர் என்னைப் பார்த்தார்
  என்தமிழ் மகனே தேவை
இன்றெது? எதுவென் றாய்ந்து
  இயன்றதைச் செய்நீ என்றார்
நன்றென நெஞ்சம் நின்று
  நனவிடை தோயும் வேளை
நின்றுகொள் வாறேன் என்றார்
  நீள்வழி காட்டிச் சென்றார்!

படிப்பகம்

www.padippakam.com

மட்டக்களப்பில்
1972 இல்
மண்டூர்க் கவிஞர்
மு. சோமசுந்தரம் பிள்ளை
அவர்கள்
தலைமையில்
அரங்கேறியது

# கண் புதைத்தது ஏன்?

சீருஞ் சிறப்புந் திணையாய்ச் செந்
தமிழே தேனாய் மலிந் தோங்கிக்
காருங் களமும் கருத் தொன்றிக்
கருணை மழையில் உளம்பூப்ப
ஏரின் வழியில் எழுஞ் செல்வ
எழிலார் கதிர்போல் கவியார்ப்பக்
கூர்வேற் குமரன் அடிபோற்றிக்
குளிர்பாப் புனைய அடியெடுத்தேன்!

அடியொன் றெடுக்க உச்சியிலே
அடித்தோர் பல்லி முழங்கியது
எட்டே கமலம் பஞ்சாங்கம்
எதற்கோ பல்லி எனப் பார்த்தேன்
விடைகள் இரண்டில் களிப்பொன்று
வரவுஇன் னொன்றாய்ப் புதிராக,
அட்டா அவள்யார் என்முன்னோர்
அழகுப் பாவை அணைகின்றாள்?

www.padippakam.com



வா என்றாள் நான் பின்சென்றேன்
  வளியில் எழுந்து முன்சென்றாள்
பா என்றாள் நான் பாசொன்னேன்
  பழகுந் தமிழில் ஆஎன்றாள்
ஆ என்றாயே ஏன் என்றேன்
  அதற்கோர் பார்வை... அழகே கை
தா என்றேன் நான் ஐயையோ
  தரையில் கண்ணைப் புதைத்தாள், ஏன்?

நோக்குங் கால்கண் நிலன்நோக்கி
  நோக்காக் கால்தான் நோக்குகிற
போக்கைச் சொன்ன வள்ளுவனார்
  பொருளுட் பொருளை நான் பார்த்தேன்!
வாக்குப் பிழையா வளர்குறளின்
  வலுஎன் நெஞ்சில் வலுவூட்ட
பாக்கள் தவழ்ந்த பாவை விழி
  பார்த்துக் கேட்கத் துணிந்தேன்தான்!

www.padippakam.com



கண்ணைப் புதைத்தாய் ஏனம்மா?
கருத்தைச் சொல்லு, சொல்லம்மா!
விண்ணில் வந்தேன் உன்பின்னே
வீணுக்கா நீ சொல்லம்மா!
பெண்ணே இங்கே பாரம்மா
பெற்றோர் யாரோ சொல்லம்மா!
மண்ணில் கண்ணைப் புதைத்தாய், ஏன்?
மனதைத் திறந்து சொல்லம்மா!

இவ்வண் எனது மனவிசையில்
எதையெல் லாமோ நான்கேட்டேன்
கவ்வி நிலனைக் கண்பார்க்க
காலின் விரலால் நிலனுழுதாள்!
ஒவ்வோர் அசைவும் எனைக்கொல்ல
ஓ!என் றுள்ளம் துடிக்கையிலே
குவ்வென் றிருந்த குவளைவிழி
கொஞ்சம் கனிந்து வாய்திறந்தாள்!

படிப்பகம்

www.padippakam.com



வா என்றேன் வந்தாய் வளரும் தமிழுணர்வு
பாயும் மனவிசையின் பண்பறிந்தேன் - பாவின்பம்

தா என்றேன் தந்தாய் தமிழின் சுவைபருகி
ஆ என்றேன் அந்த அழகுணர்ந்தே - தா கைதா

தா கைதா என்றாய் தலைகுனிந்தேன் ஏனென்றால்
ஆகையினால் நெஞ்சின் அலைசொல்வேன்- ஆகா, நான்

ஆதி சிவனார் அருளியநல் லன்பினிலே
நீதி வழிகள் நிறைதமிழாள் - சோதிபடர்

சங்கத் தமர்ந்த தமிழர் இதயமெலாம்
பொங்கிப் படைத்துப் பொலிதமிழாள் - எங்குமுள

செந்தமிழர் நாவில் தினமும் தவழ்ந்தாடி
வந்து வளர்ந்தோங்கி வாழ்தமிழாள் - அந்தமிலா

காடுங் கடல்கிரியும் காய்மணலுங் காலமெலாம்
பாடிக் கடந்த பசுந்தமிழாள் - ஊடுருவி

நீரில் நிமிர்ந்தும் கொடுந் தீயில் மலர்ந்துமிப்
பாரில் படர்ந்த பயில்தமிழாள் - கூரிருள்சேர்

நாடு நகர்தெருவும் நானிலமும் நின்னகமும்
ஆடிக் களிக்கும் அருந்தமிழாள் - தேடிவந்து

இன்றுன் அடியில் இதயச் சுமைகளுள்ளே
ஒன்றை இறக்கவந்த ஒண்டமிழாள் - என்றவளை

ஏறிட்டுப் பார்த்தேன் இதயத் துடிப்பையவள்
கூறட்டும் கூறிக் குளிர்ந்துமனம் - ஆறட்டும்

www.padippakam.com



என்ற நினைவில் எதுவும்நான் பேசவில்லை
இன்றாளா இல்லை நிமிர்ந்தவளே - இன்றெனது

கண்ணைப் புதைத்த கருத்தென்ன என்றனைநீ
வண்ணத் தமிழாள் வளர்துன்பம் - பண்ணாடும்

நெஞ்சுடையான் என்று நிமிர்ந்து கதைசொல்வேன்
மிஞ்சும் வெறியென்று கொள்ளாதே - கொஞ்சுதமிழ்

ஓதற் கெளிதாய் உணர்தற்கினிதாக்கிப்
பூதக் கலைநுட்பம் பூத்தொளிர்ந்து - மேதினியில்

சீதப் புனலாய்ச் சிலுசிலுத்துப் பாய்வதற்குப்
பாதை தொடர்ந்தயராப் பாவலன்நீ - யாதுசுமை

என்றுள் அடியில் இதயத்தைச் சொல்லுகிறேன்
வென்று தருவாய் எனநம்பி - இன்றோ

தமிழர் அகமெங்குஞ் சங்கத் தமிழை
அமிழ்த மொழியை அடிசாய்த்து - இழிவாய்

ஓட்டல் டீ டூறிஸ்டு ஒயில்மில்ஸ் ஓர்க்ஸ் என்று
வாட்டித் தமிழை வதைசெய்வோர் - ஆட்டமுறு

நெஞ்சர் நலிவால் நிமிர்ந்து தலைவணங்காப்
பஞ்சைப் பதர்போற் படமெடுக்க - பஞ்சமின்றி

நெஞ்சம் நிறைந்து நிலவுலகில் நிற்பேனோ
கொஞ்சிக் குலவி மகிழ்வேனோ - வஞ்சமின்றி

நெல்லுக் கிறைத்து நிலமுழுவோர் மாய்த்தாலும்
புல்லும் முளைத்தல் புதுமையில்லை - நெல்லெழன்

புல்லைக் களையும் பொறுப்பாளி யாரப்பா
சொல்லப்பா என்றாள் துணிந்து!

www.padippakam.com



கண்ணை எடுத்துப் பார்த்தாள் நான்
  கருத்தை அறிந்து தரை பார்த்தேன்!
மண்ணில் கண்ணைப் புதைத்தாய், ஏன்?
  மனதைத் திறந்து சொல் என்றான்!
பெண்ணே நாணிக் குனிந்தேன்நான்
  பெற்றேன் செய்தி எனும்போதில்
விண்ணில் பறந்த என்நெஞ்சம்
  வீதி அருகில் வீழ்ந்ததுவே!

வீதி அருகே பார்த்தேன் நான்
  விளம்பரப் பலகை எத்தனையோ!
ஆதி பகவன் ஓட்டல் அதன்
  அருகே அண்ணாலாட்ஜு ஒன்று
ஜோதி டூரிஸ்டு டிரான்ஸ்போட்டு
  ஜூவல்லர்ஸ் ஒயில்மில்ஸ்அப்பப்பா
சேதி பலவும் தெளிவுதர
  தெருவில் குனிந்து நடந்தேன்நான்!

படிப்பகம்

www.padippakam.com

இலங்கை வானொலியினர்
1972இல்
கவிஞர் நாவற்குழியூர் நடராசன் அவர்கள்
தலைமையில்
நடாத்திய
கவியரங்கில் அரங்கேறியது

## அகத்தியன் மருகன்

அன்றொருநாள் அழகுமலர் அவிழ்புலரி வேளை
ஆருயிரென் அன்னையருள் பாலருந்துங் காலை
இன்றுமென தடிமனதில் எதிரொலித்தே மீளும்
இனியமது மழைபொழியும் இதயமொழி கேட்டேன்

நின்றுவளர் கின்றவுயர் பண்பு நிறை மங்கை
நீளுலகை ஆள்நிதியில் நீந்துமிள நங்கை
என்றுமுள தென்றமிழாள் எழில்பருகி வென்றால்
என்கனவு நனவாகும் என்றுரைத்தாள் அன்னை!

சங்கவரங் கேறியர சாளருமை கண்டேன்
தணியாத பெருமாவல் தலைதூக்கப் பார்த்தேன்
மங்காத புகழ்வீரம் மனிதாபி மானம்
மலைபோல நிதமோங்கும் இயல்பால் மருண்டேன்
சங்கூரம் எறியாது நலியாது நாளும்
நதிதாண்டி அலைதாண்டி யேனும்
சிங்கார வேலன்தன் திணைமாவுந் தேனுஞ்
சிறுவுள்ளம் பெறுமென்று திசைவெல்லச் சென்றேன்

அ. க. -11

படிப்பகம்

www.padippakam.com



நாஏடு அவள்பெருமை நலம்பேசு நாள்போய்
நமதுள்ளம் இணையின்ப நாளெண்ணிச் செல்லப்
பூவாடை வீசுவதைப் புலனுணர்வ தாலே!
புலவோரும் பலபேரும் புகழ்காணச் சென்றார்
பாவாடை அணிபருவ நிலைமாறி அன்னாள்
பலவாடை அணிந்தழகு நடைபயிலின் னாளில்
தேவாதி தேவனருள் தெளிமுனி வளர்த்த
செல்வமகள் தேடியவள் திருவுருவுங் கண்டேன்

(வேறு)

ஆலால சுந்தரன் அள்ளி வழங்கிய
அன்பில் மலர்ந்தவள்மேல்
பாலாவி யாய்ப்பரந் தாடுபட் டாடையாம்
பல்சுவைக் காப்பியங்கள்

மார்பிற் குறண்மணி மாலை அருங்கவி
மன்னன் கரும்பு கையில்
சீரிசை கோவின் சிலம்பணிந் தாள்செல்வி
சிந்தைக் கினியவளே

ஊரின் தெருவிலோர் ஊர்வசியாள் அடி
ஒற்றித் திரிபவர் போல்
சீரிளஞ் சுந்தரச் செந்தமிழ்ச் செல்வியைச்
சுற்றிப் பலப்பல பேர்

www.padippakam.com



பாலையைப் பாடிய பல்பெருங்கோ அந்தப்
பாவையை நாடி நின்றான்
வேலைப் பழித்தகூர்க் காதற் துடிப்புள
வில்லினில் ஏற்றிநின்றேன்

பைந்தமிழ்ச் சோலையிற் பாவமுதுண்டபல்
பண்டிதர் ஆங்கிருந்தார்
சிந்தையில் ஆயிரஞ் சிந்திசைத் தார்த்திடுஞ்
சீருடன் நானிருந் தேன்

விந்தைக் கருத்துரை வித்துவருந் தலை
வீறுகொண் டாங்கிருந்தார்
உந்துணர் வுக்குயிர் ஊட்டுந் துடிப்புடன்
உள்ளந் துணிந்திருந்தேன்

பாவேந்தர் நாவேந்தர் காவேந்தர் என்றுபல்
பேர்வேந்தர் ஆங்கிருந்தார்
மூவேந்தர் முன்பு நான்முற்றுங் குறுகியோர்
மூலையை நாடுவேனா!

தங்க மரபுயிர்ச் சார்புகளோ டொரு
தாத்தாவு மங்கிருந்தார்
எங்கள் இனமென எண்ணி அவரரு
காமையில் நானணைந்தேன்

நற்போக் கிலக்கிய நாயகியாள் எனை
நாடியணைந்து வந்தாள்
சற்றே விழிகளைக் கவ்து விட்டாளுள்ளஞ்
சன்னதங் கொண்டு சொன்னேன்

www.padippakam.com



(வேறு)

முன்னைப் பழமைவெறி மூடிக் கலிதொடர
மூழ்கி மயங்குவதேன் வாவா
பின்னைப் புதுமைகளைப் போற்றி அணைத்தினிய
பேரின் வசைகளைவோம் வாவா

ஏட்டுச் சுவடிகளில் ஏங்கித் தவித்துறங்கி
என்ன பயன் அறிவாய் வாவா
வாட்டும் வறுமையற வாழுங் கலைபயில
வாழ்வின் பயன் நுகர வாவா

கானிற் கலங்குவதேன் காதல் மலர்ந்தவுடன்
காலமழை பொழியும் வாவா
கூனல் நிமிர்ந்து மனக் கூதிர் குளிர்மறந்து
கூவிப் பறந்திடுவோம் வாவா

வாடி எனதுயிரே வாஞ்சைக் களஞ்சியமே
வாழ்வின் இலட்சியமே வாவா
சோடி இணைந் தணைந்து 'ஜெமினி' தனிலமர்ந்து
சோதி நிலைவடைவோம் வாவா

படிப்பகம்

www.padippakam.com



(வேறு)

என்ற பொழுதினிலே - மனதின்
ஏக்கந் தவிர்ப்பதற்கோ
நின்ற விழியசைத்தே - நிமிர்ந்தாள்
நீடவை மீதெறிந்தாள்

சுற்றும் விழி செருகித் - தனது
சூழல் துருவியபின்
சற்றுந் தயங்காமல் - இதழில்
தங்கநகை அணிந்தாள்

முல்லைச் சிரிப்பழகில் - இதழின்
மோக வலை விரிப்பில்
அல்லற் படுமவளை - முழுதாய்
அள்ளிவிடப் பார்த்தேன்

தாவி அணைத்துவிடத் - தனித்தே
தாங்க மறுத்த விழிப்
பாவை புலன் நிறுத்திப் - பரிவாய்ப்
பார்த்த கலையழகில்

www.padippakam.com



சொக்கிச் சிலையாகி - அயர்ந்தே
சொர்க்கம் அடைந்தேன் நான்
வெட்கித் தலைகுனிந்தே - அவையோர்
வெந்து துடித்தகன்றார்

வானத்தைப் பார்த்தேன் நான் - வானும்
வாழ்த்துச் சொரிந்த தம்மா
தேனைத் தினைமாவில் - கலந்தே
சித்தம் மகிழ்ந்த தம்மா

பூதக் கலைகளெலாம் - தமிழாய்ப்
பூத்துச் சொரிந்ததம்மா
ஆதி பகவன் வழி - அதிலும்
ஆட்சி புரிந்ததம்மா

யுகத்தினிலே புதுமை - அவளென்
உள்ளன்பை ஏற்றதுதான்
அகத்திய மாமுனிக்கே - அடியேன்
அன்பு மருகனம்மா

படிப்பகம்

www.padippakam.com

மொரிசியஸில்
நடைபெற்ற
ஏழாவது உலகத் தமிழ்
ஆராய்ச்சி மாநாட்டில்
கவிப் பெருங்கோ
அவர்கள்
முதாமையில்
1989 இல்
அரங்கேறியது

# செல்வ மொரிசியஸில்...

சீர்வளர் இந்து சமுத்திர முத்தெனும்
செல்வ மொரிசியசில் - பசும்
பேரெழில் இன்சுவை சொட்டி வளர்கிற
பெற்றிக் கரும்பினமே! - அட
நீர் இறைத்தா அன்று பாடுபட்டார் அவர்
நெஞ்சம் துடித் தழுந்தி - விழு
சேர் குருதித் துளி சிந்தி அன்றோ வளர்
செல்வம் செழிக்க வைத்தார்!

செல்வம் செழித்தெழ தேனில் கரும்பெழும்
செல்வ மொரிசியசில் - ஓயாது
அல்லும் பகலும்உள் ஆர்வந் துடிக்கிற
அன்புத் தமிழினமே! - இனி
கொல்லும் பசிப்பிணி இல்லை எனும்பசுங்
கோலக் கரும்பினைப் போல் - நின்று
வெல்லும் தமிழ்மொழி சைவம்என்றே விதை
வைத்தார் மூதாதை அன்றே!

படிப்பகம்

www.padippakam.com



அன்பு வளர்சைவ ஆலயம் பூசைகள்
ஆசி புரிதல் இன்பம் - எங்கள்
இன்பத் தமிழ்ப் பெயர் சொந்தப் பரம்பரை
சொல்லி வளர்தல் இன்பம் - ஆயின்
என்பிலே ஊறிய செந்தமிழ் நாவினை
ஏய்த்துத் திரிவதென்னே! - தமிழ்
மன்பதை வாயை மறந்து தமிழ்மொழி
மாயம் புரிவதென்னே!

பாவிரி பாலகர் பார்வையின் இன்மொழி
பைந்தமிழ் ஆவதென்றோ - எழிற்
பூவிரி கூந்தலர் புன்னகை சொல்மொழி
பூந்தமிழ் ஆவதென்றோ - எறி
தாவணி தாவிய தாய்முலைப் பால்மொழி
தண்டமிழ் ஆவதென்றோ - அடி
ஆ! முத்துத் தீவிலே வாழும் தமிழ் என்ற
ஆனந்தம் சேர்வ தென்றோ!

www.padippakam.com



ஓடித் திரிகிற பாலகர் நெஞ்சிலே
ஒன்றித் தமிழ் வருமா? - தினம்
பாடித் திரிகிற பாவையர் நா இசை
பண்ணில் தமிழ் வருமா! - பாடி
ஆடிக் களிக்கிற ஆடவர் வாயிலே
ஆர்த்துத் தமிழ் வருமா! - அன்பில்
கூடிக் களிக்கிற சோடிகள் ஊடலில்
கொஞ்சித் தமிழ் வருமா?

தென்றற் தமிழ்மொழி சேர்ந்து மொரிசியசில்
ஒன்றி வளருகவே! - தமிழ்
ஒன்றித் தமிழ்க்கலைக் கோலம் மொரிசியசில்
நின்று வளருகவே! - வென்று
நின்று தமிழுணர்வு ஒன்றி மொரிசியசில்
என்றும் வளருகவே! - இனி
என்றும் தமிழ் வளம் வென்று மொரிசியசில்
நின்று வளருகவே!

படிப்பகம்

www.padippakam.com

சிட்னி, அவுஸ்ரேலியா
1992இல் நடந்த
ஐந்தாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு
மாநாட்டுக் கவியரங்கிற்குத்
தலைமை தாங்கிய பொழுது
அரங்கேறியது

# ஒரு சொற் கேளீர் !

சித்தங் கேணிச் சின்னத்துரையர்
சிட்னிக்கு வருகின்றார்
சத்தியஞ் செய்து குடும்பத் துடனவர்
தமிழ்மண் துறக்கின்றார்
எத்தனை இன்னல் எவரெவர் தலைமை
எல்லாம் வெறுத்ததனால்
புத்தி ஜீவிதான் எனும்மன உணர்வில்
புலம்பெயர்ந் தோடுகிறார்!

புலம்பெயர்ந் தோடிய துரையர் விரைவில்
டொறையென வாழுகிறார்
நலன்வரும் டொறையெனும் பெயரால் எனவே
நாளும் தேறுகிறார்!
பலவிடர் தொடரப் பழகிய தமிழைப்
பாலரும் வெறுக்கின்றார்
கலகல வெனத்தமிழ் பேசிய சிறுவர்
கனிதமிழ் மறக்கின் றார்!

படிப்பகம்

www.padippakam.com



முப்பது வெள்ளைப் பிள்ளைகள் இடையே
  மூன்று தமிழ்ப் பிள்ளை
அப்புதுச் சூழலை ஆய்ந்ததில் இணங்கல்
  அவர்களின் முதல் தொல்லை
செப்பிடு மொழியும் செயல்படு முறையும்
  தேர்ந்திடல் ஒரு தொல்லை
முப்பது வெள்ளைப் பிள்ளையை வெல்லென
  மூத்தவர் பெருந் தொல்லை!

விடுதலை பெறவழி எதுவெனச் சிறுவர்கள்
  விரைவினில் உணருகிறார்!
நடை யுடை முறைபிறர் நவில்மொழி அசைவுகள்
  நமதெனப் பயிலு கிறார்!
குடே ஹய் ஹியென குழுமொழித் தொடர்களை
  குழந்தைகள் முயலுகிறார்
படிதமிழ் படிதமிழ் விடுமுறை களிலெனில்
  பாதியில் துயிலுகிறார்!

படிப்பகம்

www.padippakam.com



படிதமிழ் என்றால் பாதியில் துயில்வது
பாலரின் தவறா மோ?
நடையுடை மாறல் நவில்மொழி திரிதல்
நமதெனல் தவறாமோ?
விடுகிற சூழல் ஆய்ந்ததில் வளர்தல்
விளைபயிர் சால்பன்றோ
இடர்களை ஆய்ந்துதஞ் சூழலின் இணங்கல்
இளைஞரின் இயல்பன்றோ?

வளருஞ் சூழல் வாழுஞ் சூழல்
வளர்மொழி தமிழாமோ
பழகுஞ் சூழல் நிழலில் நாளும்
பயில்மொழி தமிழாமோ
அழகியற் கலைகள் அறிவியல் கலைகள்
அறிமொழி தமிழாமோ
உள முணர் உறவுகள் உணர்வுகள் பேசின்
உதிர்மொழி தமிழாமோ?

வசுவில் ரயிலில் வழியில் தெருவில்
வருவது தமிழாமோ
இசையுங் கலையும் இணைகிற ரீவீ
இசைமொழி தமிழாமோ
பசிவரும் வேளை பாதையில் ஓடிப்
பகர்மொழி தமிழாமோ?
விசைபெறு மனதின் விளைவுகள் பகர
விரைவது தமிழாமோ?

www.padippakam.com



சூழல் மொழியே வாழும் மொழியாய்
சுவைபட வளர்கிறது
வாழும் மொழியாய் வளரும் மொழியாய்
வாயில் தவழ்கிறது
நாளும் பொழுதும் நவிலும் மொழியே
நமதாய் வருகிறது
ஆளும் மொழியாய் நாளும் அதுவே
நாவில் திரிகிறது!

நாவில் நாளும் வளர்கிற மொழியாய்
நற்றமிழ் வரவேண்டும்
கூவித் திரியும் குழந்தைகள் நாவில்
கொஞ்சும் தமிழ்வேண்டும்
போவா என்கிற பொழுதே வீட்டில்
பேசும் தமிழ் வேண்டும்
தாவித் தாயின் வாயினில் என்றும்
தமிழே வரல் வேண்டும்

படிப்பகம்

www.padippakam.com



அமிழ்தெனும் தமிழே அவனியில் என்றும்
 அருந்தமிழ் அடையாளம்
எமதருந் தமிழே எந்தையர் சந்ததி
 இயல்புசொல் சுடர்தீபம்
தமிழ்மொழி மறந்தால் தமிழினம் என்றவர்
 சந்ததி'வாழாது
குமிழெனும் வாழ்வில் குற்றம் புரிந்தவர்
 குறுகுறுப் பழியாது

குறுகுறுப் பொழிய ஒருவழி அதனைக்
 குறித்துச் சொல்லுகிறேன்
சிறுகை இட்டுத் தொடுகையில் தமிழே
 பேசச் சொல்லுகிறேன்
அறிவுரை ஆசி அனைத்தும் தமிழில்
 அமையச் சொல்லுகிறேன்
நிறைவுற வீட்டில் தமிழ்மொழி பேசி
 நிறுத்திடச் சொல்லுகிறேன்!

படிப்பகம்

www.padippakam.com

# வழியில்...

அகதியின் அவல வழிப்

பயணத்திலே

சேகரித்த சிதறு பூக்களிலே

சில...

படிப்பகம்

www.padippakam.com

குடே

சிவலோகம்

நானுக்கு

போகட்டும் போ

ஏமாற்றம்

எட்டி நட

லெற் மீ டிசைட்

மம்மி, மற

படிப்பகம்

www.padippakam.com



## குடே

அங்கை கொழும்பில்
அடிச்சு மழை பெய்ய
எங்கள் தெருவெல்லாம் எத்தனைபேர்-
தங்களது
தோளில் குடைகள்
சுமந்து குடே என்று
வாழ நினைத்து வலம்வருவர்-
இங்கோ
நடைபாதை ஓரம்
நடக்கும் கிழமும்
குடே என்பது என்ன கொடை!

## சிவலோகம்

நாட்டு அழகு பற்றி
நடுவர் அவை நடுவே
போட்டிக்குப் பேசும் பொடியளுக்கு-
ஏட்டினிலே
எண்ணி எழுத
எழிலைப் பருகியவர்
வண்ண ஒளியில் வசமிழந்து-
கண்முன்னே
சிட்னி இரவில்
சிவலோகம் போல் எங்கும்
சொட்டும் ஒளி என்றார் சுவைத்து!

---

அ.க. -12

குடே - Go'day

www.padippakam.com



## நானுக்கு...

நாலு சிறிசுகள் முன்
நம்தமிழில் பேச எண்ணிக்
கோலக் கிளிகள் முகம்பார்த்து-
பாலரிடம்
யாருக்கு வேண்டும்
இது என்றார் கையினிலே
ஓர் அப்பிள் தூக்கி உறுபாட்டன்-
பேரன் ஈஸ்
நானுக்கு நானுக்கு
நானுக்குத் தா என்று
தான்சிந்தி னான்தன் தமிழ்!

## போகட்டும் போ!

மேனி வளைவு
மெருகு திரியுமெனக்
கூனி மனசு குறுகுறுத்து-
நான் அழுதால்
தாயின்பால் வேண்டாம்
தகரப்பால் போதுமென
வாய்பேசா நாளில் வதைசெய்தாய்-
ஆயாளே
ஆச்சிபோய் அம்மாபோய்
ஆ! இன்று மம்மிபோய்
போச் சென்றால் போகட்டும் போ!

படிப்பகம்

www.padippakam.com



## ஏமாற்றம்

பிஆர் கிடைத்துப்
பெரும் ஆர்வம் பொங்கிவர
ஆறு முகத்தார் அருமையெனை-
வாய் ஊறும்
பாணிப் பனாட்டும்
பனங்கட்டிக் குட்டானும்
பேணிக் கொணர்ந்தார்தம் பேரருக்கு-
வாணி என்று
நாடி அவர்கொஞ்ச
நப் என்றாள் வாயில் அதைப்
போடுகையில் யக்என்றாள் பெண்!

## எட்டி நட

டோல் எடுத்த தெம்பில்
டொறையர் மகளுடனே
டாலிங்கம் என்று நடந்துவர-
பால்வெறியில்
கட்டிப்பிடித்துத்தம்
காதல் சுவைத்தபடி
நட்ட நடுவழியில் நின்றவரை-
கிட்டியதும்
பட்டப் பகல்வெயிலில்...
பண்பில்லாச் சாதி இது!...
எட்டி நட... என்றார் எரிந்து!

படிப்பகம்

www.padippakam.com



## லெற் மீ டிசைட்

இன்று குளிர்நாள்
எதுகல்ல புள்ஒவர்
என்று ஆய்ந்த பத்து வயதினளை
சென்று அணைந்து
அன்னை தனது அன்பால்
ஆஷா... இதைப்போடேன்
என்று சொன்ன சொல்லைச் சகியாமல்-
சின்னவளோ
லெற்மீ எலோன் மம்மி...
லெற்மீ டிசைட்... என்றாள்
சற்றே மயங்கினாள் தாய்!

## மம்மி, மற

கல்யாணம் பேசி
கனடாவால் வந்தவர்முன்
நில்கழுத்தை நீட்டென்றால் நீதியோ-
இல்லைமம்மி
டேற் பண்ணல்... வாழ்வில்
டிபக்ரோக்கள்... ஏதறிவாய்?
ஏற்கும் நிலையில் இல்லை என் மனசு-
ஈற்றினிலே
எம்மனதுக் கேற்ற
எவனும் வரும் வரையும்
மம்மி அதைநீ மற!

www.padippakam.com



# குறுங்காவியம்

பனைமரக் கலாசார வேர்களிலே
பிடுங்கி யெறியப்பட்டு
அந்நிய சூழலிலே வாழும்
பொழுது ஏற்படும்
இரண்டு உலகைப் பற்றிய
ஒரு காவியத் தேடல்.

படிப்பகம்

# இரண்டு உலகம்

பாயிரம்
பின்னணி
எல்லா கடற்கரையில்...
சுமை ஏறுகிறது
சிக்கல்
இரண்டு உலக வாழ்வு
உண்மைக் கதை
மகளின் படலையில்
குற்றமுள்ள நெஞ்சு
அவசர உலகு
சந்திப்பு
பாதை ஓரத்தில்...
வழியில் வந்தவள்
ஜீனின் உறவு
வீடு நோக்கி...
ஈடாடும் இதயம்
இலக்கியச் செம்மல்
பந்தியில்...

www.padippakam.com



பாயிரம்

ஆண்டாண்டு வாழ்ந்த
அருமைத் தமிழ்மண்ணை
வேண்டாம் போ என்று விடுத்து ஓடி-

யாண்டோ

தொழில்தேடி முன்னாள்
விரைந்தோரும் பின்னாள்
அழுது அகதியாகி அலைந்தோரும்-

தழுவிவளர்
பெற்றவைகள் செல்லப்
பிரிவு ஆற்றா ஈர்ப்பாலே
பற்றித் தொடர்ந்த முதியோரும்-

தொற்றியுள
புத்தம் புதுச்சூழல்
போய் அணைந்த ஊர்மொழிகள்
நித்தம் பயின்றும் நிலைதளர்ந்தும்-

புத்திரரின்
கோலம் புதிதாகி
கொள்கை மொழி சால்பு
சீலம் புதிதாய்த் திரிகையிலே-

ஏலா!
மருண்டு அலையும் ஊசல்
மனஓசைப் பாவே
இரண்டு உலகம் என்ற இது!

படிப்பகம்

www.padippakam.com



# 1. பின்னணி

பப்புவா நியூகினி பசுபிக் கடலில்
செப்புடன் தங்கத் திருநிறை பூமி!
ஓர்பெருந் தீவுடன் ஒன்றிச் சிறிசுகள்
சேர்ந்த பின்னஜி திசைபல அறியும்!

இலங்கை நிலன்போல் எண்மடங்கு ஆன
நிலனுள நாட்டில் நின்று வளர்பவர்
நாற்பது லட்சம்; நாமொழி ஓர்எழு
நூற்றைம் பதுவரை: நூதனம் என்ப!

வில்லுடன் வேல்பிடி வீரரின் கோலம்
புல்லின உடையணி பூமுலை மாதர்
கோலமென் மாதரை கொளப்பரிசு அளித்தல்
பாலகர் நிகர்ப்பப் பன்றியை மதித்தல்
நில உரிமைக்கு அவர் நெஞ்சு நிமிர்த்தல்
மலைநீ சியமுறை மக்களை இணைத்தல்
பலபல கலைகள் பற்றையில் வளர்த்தல்
புலன்களை ஈர்க்கும்! புராதனம் உணர்த்தும்!

www.padippakam.com



கிறித்தவ மதத்தின் கிளைபல பொருதி
நிறுத்தி அம்மண்ணில் நிலைபெற முயல
பறித்த சுதந்திர பாவ மன்னிப்பென
இறுத்தும் அவுஸியர் இறைப்பதோ உதவி!

கன்னி வனவளம் கனிப்பொருள் நிலநெய்
அன்னியர் கையை அடைகிற கலையால்
மண்வளர் மக்கள் மனநிறைவு எய்தப்
பண்ணிடும் பூசை பலித்திடல் அரிதாம்!

மாநில அரசுகள் தேசிய அரசென
கோன்முறை தனில்சன நாயகம் விரிந்தும்
நிதம்ஒரு பிரசவ வேதனை வருட
இதயங் குமுறலும் ஏம்பலும் இயல்பே!

அந்நாட்டு உறவால் அன்னியன் ஆகி
இந்நாள் வரைஎன் இருப்பிட மாகி
பன்னாள் வாழ்ந்து பலநாடு உலவி
என்னவர் எங்கும் ஏதிலர் ஆதல்
சின்னவர் வாழ்வு திரிமுறை பலவும்
மன்னிஎன் நெஞ்சில் மனவிசை உந்த
என்னடி மனதில் இழுபடும் சுமையை
நின்னுடன் பகிர்தல் நினைவா கும்மே!

படிப்பகம்

www.padippakam.com



## 2. எல்லா கடற்கரையில்...

'எல்லா' கடற்கரை ஓரம் - இளம்
ஏகாந்த மாலைமென் நேரம்
செல்லம் பொழிந்தபூங் காற்று - தாவி
சில்லெனச் சாமரை வீசும்!

பப்புவா நியூகினி நாட்டில் - ஒரு
பத்து வருடங்கள் ஆக
தப்பாது ஞாயிறு மாலை - மனச்
சாந்தி பெறச்செலும் சூழல்!

மெல்லக் கடலலை தாவும் - அது
மேலே கரைவழி ஏறும்
செல்லும் வழியிலே மூச்சு - மெல்ல
தேய்ந்து கடல்வழி மீளும்!

ஏறும் அலைகளைப் போலே - பல
எண்ணங்கள் நெஞ்சிலும் தாவி
வீறுடன் ஏறி விழுந்தே - மனம்
வேதனை எய்திய வேளை!

---

எல்லா கடற்கரை - Ela Beach in Port Moresby

www.padippakam.com



பிறந்த நிலத்தினை எண்ணி - கூடிப்
பிரிந்த சனத்தினை எண்ணி
துறந்த குலத்தினை எண்ணி - நெஞ்சம்
துன்பச் சுழியிலே கொல்லும்

கொல்லும் நினைவுபல் நூறாய் - மனக்
கோலம் குழம்பிய வேளை
அல்லல் மறந்திட எண்ணி - வளர்
ஆழிப் பரப்பினைப் பார்த்தேன்!

கட்டு மரத்திலே நால்வர் - தங்கள்
காயும் வயிற்றினை எண்ணி
எட்டிச் சவள்வலித்து ஏங்கி - அங்கே
ஏதோ பிடித்திடல் கண்டேன்!

மோட்டார் விசையுந்து வள்ளம் - சில
மூசி விரைந்தடித்து ஓடி
ஈட்டிய செல்வத்தைக் கொண்டு - தாவி
இக்கரை சேருதல் கண்டேன்!

படிப்பகம்

www.padippakam.com



பாய்விரிந்து ஓடிய யொட்டில் - சிலர்
 பாய்ந்து அலை தாவுதல் கண்டேன்
ஆய கலைதெளி யாமல் - சிலர்
 ஆழியில் வீழ்வது துங் கண்டேன்!

தூரத்தில் ஏழெட்டுக் கப்பல் - தங்கள்
 சொந்தச் சுமைகளி னோடு
பாரம் இறக்கிட நிற்கும் - பாங்கு
 பாவி மனிதர்போல் கண்டேன்!

வள்ளத்தில் எத்தனை கோலம் - மனு
 வாழ்க்கையில் எத்தனை கோலம்
உள்ளத்தில் எத்தனை ஓலம் - அவை
 ஊன்றி உதைக்கையில் அந்தோ!

கிளாலிப் படகுகள் கோலம் - உதை
 கீழ்காற் றுடன் வரும் ஓலம்
துழாவி இருளலை மேவி - மனம்
 சூனியம் ஆகிய போதில்...

---

யொட்டு - Yacht

www.padippakam.com



என் அருகாற் சென்ற பிள்ளை - ஆமாம்
எங்கள் தமிழ்க்குலக் கிள்ளை
தன் அருந் தாய்முகம் பார்த்து - மம்மி
ஷால்வீகோ நவ்என நின்றாள்!

சின்னவள் சொல்லலை தட்டி - என்
சிந்தை உயிர்க்கிற வேளை
அன்னைஅப் பால்முகம் பார்த்து - டாலிங்
ஆஸ்க் டடி என்றுமுன் சென்றாள்!

சென்றனள் அம்மணி முன்னே - சின்னள்
சேர்ந்து நடந்தது பின்னே
நின்றந்தக் காட்சிஎன் நெஞ்சில் - சுற்றி
நித்தம் சுழல்வதும் என்னே!

ஆங்கிலம் மட்டுமா இல்லை - மொழி
ஆறல்ல நூறையும் கற்போம்
நாங்களும் நாங்களாய் வாழ - தமிழ்
நாவில் வளரவேண் டாமோ?

www.padippakam.com



# 3. சுமை ஏறுகிறது

அந்தநாள் மருலை ஆழி
அலைகளைப் போல நெஞ்சில்
இந்தநாள் வரையும் ஐய
எத்தனை அலைகள் என்பேன்?

சொந்தநா டிழந்து வாழ்க்கைச்
சோலிகள் மலிந்த போதும்
வந்துவந் துணர்வைத் தட்டி
வதைப்பது ஓர் சுமையே இன்று!

அன்னிய நாடு சென்றோர்
ஆயிரம் என்ற காலம்
மன்னிய நாட்டில் அன்னார்
மாற்றுஉருப் பெற்ற கோலம்

சின்னவர் வளர்ந்து பின்னாள்
சீமையர் ஆனார் ஆனால்
என்னவர் என்றுள் ஏங்க
எத்தனை ஏன்பேன் அம்மா!

www.padippakam.com



ஈழமகன் னாட்டார் அல்ல
எத்தனை நாட்டார் அவ்வண்
வாழுவோம் என்ற தாகம்
வளர்கையில் சென்றார் அன்னார்

நாளைய வாழ்வில் எங்கள்
நற்றமிழ் மக்கள் அல்லர்
ஆழியில் துளிநீர் போல
அவர்களை மறத்தல் கூடும்!

சென்றபத் தாண்டில் எங்கள்
செந்தமிழ் மண்ணை விட்டும்
என்றுமம் மண்ணை நாடி
இழுக்கிற இதயம் விட்டும்

ஒன்றிஇவ் வுலகில் உள்ள
ஒவ்வொரு கண்ட மாக
நின்றலை மக்கள் லட்சம்
நெஞ்சில்அச் சுமையே ஏறும்!

படிப்பகம்

www.padippakam.com



இன்னும்ஓர் கால்நூற் றாண்டில்
இலட்சம்பல் இலட்சம் ஆகி
என்னவாய் வாழும் என்ன
இனமெனத் தன்னைக் கூறும்

சின்னவர் நாவில் இன்றே
செந்தமிழ் இல்லை என்றால்
பின்னவர் அடியில் தோன்றும்
பரம்பரை தமிழா பேசும்?

இச்சுமை நெஞ்சில் ஏறி
இழுபறி தொடரும் நாளில்
பச்சிளம் பாலன் ஆக
பைந்தமிழ் நாட்டை விட்டோன்

அச்சிறு வயது தொட்டே
ஆங்கில மண்ணில் கற்றோன்
சச்சி ஓர் பயிலும் டாக்டர்
சார்ந்தெனை உறவு கொண்டான்!

படிப்பகம்

www.padippakam.com



## 4. சிக்கல்

ஓர்சில மாதங்கள் என்பேன்-சச்சி
ஒட்டி உறவினன் ஆனான்
சீரிய ஆய்வுகள் செய்து-தன்னூர்
செல்கிற நாளிலே வந்தான்
ஈர்கரம் காலிலே தொட்டு-அவன்
என்னை வணங்கிமுன் நின்றான்
யார்மகன் ஆயினும் என்ன-சச்சி
என்னடி உள்ளமும் தொட்டான்!

தொட்டு வணங்கிமுன் நின்ற-அந்த
சுந்தரச் சச்சியின் தோளில்
தட்டிஎன் வாழ்த்துக்கள் சொன்னேன்-தம்பி
தங்கத் தமிழ்முறை என்றேன்
விட்டனம் சென்னையை ஆனால்-நின்று
வீட்டில் வளர்ந்தது பண்பு!
இட்டமாய் பேணுதல் இன்பம்-அதில்
என்மனம் ஒங்குதே என்றான்!

அ.க—13

www.padippakam.com



இத்தனை பண்புள தம்பி-இன்று
என்மனம் தொட்டனை: ஏனோ
பத்தியாய் இன்தமிழ் பேச-ஒரு
பாதை வகுத்திலை என்றேன்
வித்தகர் விட்டனர் எங்கள்-சொந்த
வீட்டிலும் விட்டனர்...ஆமாம்
சித்தம் இருக்கிற போதும்-நாவில்
சேரும் வழியில்லை என்றான்!

ஆளும் மொழியொன்று நம்மை-அது
ஆட்சி புரிந்திடும் எம்மை
வாழுற நாட்டினர் பேசும்-மொழி
வந்து குதித்திடும் உண்மை
சூழலை வெல்வது யாரோ-அந்தச்
சிக்கலை வென்றது யாரோ
நாளும் தமிழ்வரத் தப்பின்-எங்கள்
நாவும் மறந்திடும் என்றான்

என்றவன் என்முகம் பார்த்தான்-நான்
ஏதோ நினைவுகள் பொங்க
நின்றவன் கைகளைப் பற்றி-என்
நெஞ்சில் நிறைமுகம் பார்த்து
இன்றுநீ செல்லுதல் உண்மை-நட்பு
என்றும் நிலைத்திடும் சச்சி
சென்றுவா தம்பிநீ என்று-அவன்
செல்லும் வரைவழி பார்த்தேன்

www.padippakam.com



## 5. இரண்டு உலக வாழ்வு

சென்றனன் சச்சி: மெல்லச்
சேர்ந்தனள் பாட்டி நெஞ்சில்!
அன்றவள் அணைப்பில் கற்ற
அருந்தமிழ் ஆத்தி சூடி
இன்றுமே இனிக்கும் பாட்டு
எனப்பல நினைவில் தோன்றி
தன்புலம் பெயர்ந்த பாலன்
சங்கடம் புலரும் வேளை!

வதிநிலன் சொந்த நாடாய்
வளர்ந்தபின் பெயர்ந்து வந்த
முதியவர் சிக்கல் ஒன்று!
முளையிலே அங்கு வாழ்ந்து
இதயமோர் நிலையைப் பெற்ற
இளைஞரின் சிக்கல் வேறு!
எதுவுமே அறியாச் சின்ன
இளசுகள் சிக்கல் வேறு!

படிப்பகம்

www.padippakam.com



புலம்பெயர்ந் தோடி நிற்கும்
புதுநிலன் சூழல் பண்பு
நிலைமுரண் முதியோர் நெஞ்சில்
நிழலிடும்; இளைஞர்க் கென்றால்
நிலன்வளர் இளைஞர் பண்பா?
நெஞ்சறி சொந்தப் பண்பா?
உலகமோர் இரண்டில் ஆடி
ஊசலாய் அலையும் அன்றோ?

இனித்திடும் இளமை உந்தின்
இயல்பிலே இதயம் பொங்கித்
தினைத்துணை ஏனும் சொந்தத்
திறன்செயல் கொள்கை காட்டி
தனைத்தவிர் பிறரை ஆயும்
தன்மனப் பாங்கு காட்டி
தனித்துவம் வேண்டி நித்தம்
தகர்வதாம் இளைஞர் நெஞ்சம்!

படிப்பகம்

www.padippakam.com



தகர்கிற இளைஞர் தங்கள்
தனித்துவ உயிர்ப்பி னாலே
நகர்தெருக் கோலம் பார்த்து
நடையுடை பாங்கு மாறும்!
பகர்மொழி பண்பு மாறும்!
பரம்பரை முறைகள் மாறும்
சகருடன் சமனாய் வாழச்
சாருலகு இரண்டைக் காணும்!

இரண்டுவே றுலகில் அன்னார்
இடர்ப்படும் அந்த நாளில்
இருண்டுசிற் சிலரின் உள்ளம்
இசையறும் ; மற்றோர் நெஞ்சம்
முரண்படு நிலையை வென்று
மூடிருள் கவ்வா வண்ணம்
திரண்டுநல் லறிவு பெற்றுக்
திடம்பெறும் இனிதே அன்றோ!

www.padippakam.com



# 6. உண்மைக் கதை

பலபல முறைஎன் பழமைகள் வந்து
பாய் விரித் தோடிய தோணியை முந்தி
உலகம் இரண்டின் உலைவுகள் உளைவுகள்
உறுவலி லேமன ஊசல் அலைந்தும்

அலையுடன் ஏறியும் ஆழியில் மூழ்கியும்
அந்தர நெஞ்சுணர்வு உந்த விரைந்தே
அகவியல் ஆய்கலை வாணரை நாடி
ஆறுதல் பெறமனம் அழிதுயர் சொல்ல...

புலம்பெயர் முரணில் பூசல்கள் வருடப்
புந்தி இழந்துதன் புதுநிலன் நொந்தும்
நிலைதடு மாறியும் நெஞ்சம் இழந்தும்
நின்று சுழன்று தகர்ந்து மருண்டும்

உலகம் இரண்டில் இளமுளம் நின்றே
ஊருடன் ஒன்றி இணங்குதல் நொந்தும்
தன்மொழி தன்னிலத் தாகம் எழுந்தும்
தான்பிறன் என்கிற சாயை விரிந்தும்

படிப்பகம்

www.padippakam.com



கற்றல் வெறுத்தும் கடுவெறி உற்றும்
காலமெ லாமவன் காய்மனம் பற்றி
பெற்றவர் உடனவன் பேச மறுத்தும்
பேர்உரு வந்து வெருண்டு திரிந்தும்

தன்அறை உள்ளே தம்மை அடைத்தும்
தனிமையை வேண்டித் தவிப்பினில் மாண்டும்
உண்ண மறுத்தும் உலகை வெறுத்தும்
உள்ளக் கொதிமிக உடமைகள் நொருக்கிய

ஓர் இளம் வாலிபச் சீனனின் கதையை
உளவியல் தேவையை உலகியல் முரணை
சீர்செய ஆற்றிய சிகிச்சையின் வகையை
சிறிதள வேனும் சிதைவுகள் இன்றி

சாற்றிய பொழுதில் தமிழ்உணர்வு ஓடிச்
சஞ்சல வலையில் தம்புலம் பெயர்ந்து
சுற்றினில் எத்தனை இளைஞர்கள் இதயம்
இவ்வண் இடருறும் எனநோ வளரும்!

படிப்பகம்

www.padippakam.com



## 7. மகளின் படலையில்

இரண்டுல கியல்பை இதயம் துருவி
எண்ணியது எத்தனை நாள்-தவம்
பண்ணியது எத்தனை நாள்

மருண்டலை வெய்திய மனவலை ஊசல்
மாய்ந்ததும் எத்தனை நாள்-அடி
சாய்ந்ததும் எத்தனை நாள்!

சீர்வளர் மகளின் நினைவுகள் பலநாள்
சிந்தையில் வளர்கிறது-தினம்
சிந்தையில் விரிகிறது

ஓரிரு வாரம் ஓய்வினில் வருக
எனமடல் வருகிறது-மனம்
உறுதுணை புரிகிறது

படிப்பகம்

www.padippakam.com



'ஓசி'யாய் சிட்னி நகரினில் வாழ்பவள்
உறவெனை ஈர்க்கிறது-பாச
உறவெனைப் பார்க்கிறது

பாசமும் பந்தமும் பலபட இழுத்துப்
படலையில் சேர்க்கிறது-அவள்
படலையில் சேர்க்கிறது!

ஈரறை மாடியில் வாழ்பவள் தனிமை
இதயந் தொடுகிறது-பெற்ற
இதயம் மடிகிறது

ஓர்இரவு அவளுடன் தங்கிய மறுநாள்
உதயம் வருகிறது-விடிவு
உதயம் வருகிறது!

வெள்ளிக் கிழமை விடிவுறு பிரசவ
வேதனை எடுக்கிறது-அடி
வானஞ் சிவக்கிறது

கள்ளத் துயிலுறு கலைபயில் விழிகளிற்
கண்ணிமை துடிக்கிறது-கடைக்
கண்ணிமை துடிக்கிறது!

www.padippakam.com



துள்ளி விழுந்தெழு தொடர்கதை பலவகைத்
தூபம் இடுகிறது-அழல்
தூபம் இடுகிறது

உள்ளத் துணர்வுகள் உயிர்பெற உயிர்பெற
ஊற்றுத் தொடர்கிறது-நினைவு
ஊற்றுத் தொடர்கிறது

தவழ்ந்த வுலகெது சாருல கெதுவெனச்
சலனம் எழுகிறது-மனச்
சலனம் எழுகிறது

வளர்ந்த வுலகெது வாழுல கெதுவென
வாதம் புரிகிறது-பிடி
வாதம் புரிகிறது!

இழந்த தெவையெவை எய்திய தெவையெவை
இதயங் கேட்கிறது-சூழல்
இதயங் கேட்கிறது

தளர்ந்த மனமெது சாய்மென மெதுவெனச்
சன்னதங் கொள்கிறது-மனஞ்
சன்னதங் கொள்கிறது

படிப்பகம்

www.padippakam.com



## 8. குற்றமுள்ள நெஞ்சு

உலகம் இரண்டிலெந்தன்
ஊஞ்சல் ஆடியது
அலைகடலில் ஓடமென
ஆடித் தளம்பியது

தளம்பி அழுந்தி மனம்
தத்தளிக்கும் வேளையிலே
எழும்புங்கள் அப்பா
எனவந்தாள் என் எழிலி

ஏழுமணி ஆகிறதே
எட்டுக்கு வேலையப்பா
நீளப் பயணமினி
நிற்பதற்கோ வேளையில்லை

கோப்பியதில் சீனியிதில்
குளிர்பால் பிரிட்சிலென
மூப்பிளமை எண்ணாதோர்
மூச்சிலெலாம் சொல்லி நின்றாள்

சொல்லி நின்ற சொற்கள்
சுழன்றென் மனதினிலே
வில்லெறிந்த வேல்போல்
விழுந்தழித்த தோர் கணமே

www.padippakam.com



காலைகடுங் கோப்பியுடன்
கட்டிலிலே வீற்றிருந்து
சோலைக் குயிலிசையில்
சொப்பனங்கள் கண்டவன்நான்

சொப்பனமாய்ப் போனகதை
சொற்களிலே ஏறுமுன்னே
தப்பறியா அச்சிறிசின்
சால்புகளைப் பார்க்கின்றேன்

சொல்லிநின்ற நெஞ்சின்
சுமையளந்த உள்ளுணர்வில்
அல்லலுறு சேயின்
அவலநிலை தோன்றியது

உலக மிரண்டிலெந்தன்
உளமூசல் ஆடியது
ஊசலிட்ட உள்ளத்தில்
உண்மையலை ஓடியது

சலன வலையிலுளச்
சால்புயிர்த்த வேதனையில்
மெலியு மவளைவிழி
மேல்கீழாய் நோக்கியது

படிப்பகம்

www.padippakam.com



மேல்கீழாய் நோக்குகையில்
மேலாடைச் சீரழகும்
காலடியில் வந்து நின்று
காதை சொன்ன சொல்லழகும்

கூந்தன் முகிலழகும்
கொஞ்சுமலர் சேரழகும்
சாந்த மதியழகும்
சால்பொளிர்ந்த சாந்தழகும்

செங்கமலப் போதின்
தேன்துளிசேர் நாவதிர்வில்
எங்கள் தமிழ் தவழ்ந்து
எற்றமுறு பேரழகும்

ஆல்போல் விழுதூன்றி
அன்னியரின் மண்ணிலுமெஞ்
சீலம் வளர்த்துநின்ற
செல்வியுளங் காட்டின காண்!

உலக மிரண்டிலவள்
ஊசலிட்டிங் கந்தரத்தில்
சலனந் தவி தவிப்பு...ஆம்
சஞ்சலத்தின் காரணி யார்?

www.padippakam.com



குற்றமுள்ள நெஞ்சு
கூனிக் குறுகியது
சற்றவளைப் பார்த்துத்
தலைகுனிந்த தென் மனசு

ஒய்வுறக்கம் இல்லாமல்
ஓடி டொலர் தேடுலகில்
மாய்வதற்கு வைத்த
மனமூசல் ஆடியது

ஆடிமனம் ஒய்வதற்குள்
அவளின் அவசரத்தை
நாடித் துடிப்பையெலாம்
நானுணர்ந்தேன்-ஆகையினால்

என்னை நினைத்தாயோ
ஏனோ தயக்கமம்மா
சொன்ன தறிவேன்
சுணங்காதே போய்வாடா

போய் வா நீ மேமே
பொழுது சரிவதற்குள்
வாமேமே என்று
வழியனுப்பி வைத்தேன்நான்

படிகள் இறங்கியவள்
பாதையிலே செல்கின்றாள்
படையெடுப்பைப் பார்த்துப்
பலகணியில் நிற்கின்றேன்

படிப்பகம்

www.padippakam.com



## 9. அவசர உலகு

வெள்ளிக் கிழமை
விடிந்து சிரிக்கிறது-என்
உள்ளம் தனிஇரண்டு
உலகியலை ஆய்கிறது

சொந்தமகள் போனதன்பின்
சூழ்ந்த தனிமையிலே-நான்
அந்தரங்க அந்தரத்தில்
அப்பாலே பார்க்கின்றேன்

சூரியர்கை வைகறையில்
சுவால்ஏறாக் காரணத்தால்-கை
சேருமிடம் எங்கணுமே
சேர்ந்தணையும் மென்கரங்கள்

மென்கரங்கள் தாவுகையில்
மேனி குளிர்வெய்தி-சீர்
பன்னிறப்பூ மொட்டினங்கள்
பால முறுவல் இட்டார்!

பால முறுவலுடன்
பாதையிலே நின்றவரின்-பேர்
கோலஞ் சுவைப்பதற்குக்
கொடுத்து வைத்தோர் யாருமில்லை!

பேச்சுவரா மக்களினம்
பெருவேக யந்திரம்போல்-ஓர்
பாய்ச்சல் நடைபயின்று
பாதை தொடருகிறார்!

படிப்பகம்

www.padippakam.com



தந்தைதாய் சேய் என்ன
தாரம் இருந்தென்ன-தம்
அந்தரத்தில் வாழுகிற
அவல உலகம் அது!

குழந்தை அழுதென்ன
குட்டி குரைத்தென்ன-முன்
அளந்த அளவென்னும்
அந்த உலகம் அது!

மூத்தோரைப் பேணுகிற
முன்னைப் பணிசிரமம்-தாம்
பார்த்தோர் முதுமனையில்
பல்சுகமும் காண் என்பர்!

பெறாத மகவல்ல
பெற்றவையே என்றாலும்-ஓர்
'கிறானி ஹவு'சே
கிழவயதில் மேல்என்பர்!

அந்த உலகொன்று
அந்தரத்தில் வாழ்கிறது-என்
சொந்த உலகொன்று
தூரத்தில் மாழ்கிறது

அலையலையாய் எண்ணம்
அகத்தில் புரளுகையில்-நான்
பலகணியின் ஊடாகப்
பார்த்துத் தவித்துநின்றேன்!

www.padippakam.com



# 10. சந்திப்பு

பலகணி வழியே பார்த்துப்
பசிஅடங் காமல் சென்று
அலைபுரள் வீதி ஓரம்
அமைதியாய் நடந்துசென்றேன்
கலகல என்று பேசிக்
கலந்திட வேளை இல்லா
உலகியல் போக்கில் எந்தன்
உள்ளமும் சென்றது அங்கே!

ஓடுமீன் ஓடிச் செல்லும்
ஒன்றுவந்து அணையும் என்று
வாடிநான் சென்றேன் நானாய்
வாயிலே சுங்கான் தொங்க!
தேடிய தெய்வம் ஒன்றே
தெருவிலே வந்தால் போல
தாடியைத் தடவி வந்தார்
சங்கரப் பிள்ளை மாஸ்டர்!



படிப்பகம்

www.padippakam.com



சங்கரப் பிள்ளை மாஸ்டர்
தமிழ்ப்புலி சைவ ஞானி
எங்களுக்கு அந்த நாளில்
ஏட்டையும் தொடக்கும் ஆசான்!
பொங்கிய ஆர்வத் தாலே
பொடியளை ஒன்று சேர்த்து
சங்கம் ஒன்றமைத்துச் சைவம்
தமிழ்என வளர்த்த சீமான்!

வெண்ணிற வேட்டி சால்வை
விரிந்திடா முறுவல் செட்டு
பண்வடி நாவில் என்றும்
பல்நெறிப் பாடல்: ஆயும்
கண்கள் எக்ஸ் கதிர்கள்: காதில்
கடுக்கனில் துளைகள்: நாளும்
விண்ணிலே தலையை நீட்டி
வீதியில் நடந்த கோமான்!

ஈர்த்தது கண்ணை இந்த
உலகிலே அன்னார் கோலம்!
பார்த்த அக்கணமே மெல்லப்
பார்வையை எடுத்தேன் ஏனோ
வேர்த்தது மேனி சுங்கான்
விடுவிடு என்றாடி நிற்க
ஆர்த்தது பழமை நெஞ்சில்
அவர்திருக் கோலம் கண்டு!

www.padippakam.com



நீண்டகால் சட்டை சேட்டு
நிறைவுற ரையும் கட்டி
ஆண்டவா அந்தப் பிள்ளை
ஆ என அசந்து நின்றேன்!
தூண்டிலில் மீன்போல் மேளை
தொடர்கதை புலம்பெயர்ந்த
காண்டம்ஓர் கதையைச் சொல்ல
கண்டுஎனைக் கட்டி நின்றார்!

செப்பமாய் இறுகப் பற்றி
சிறிதுகண் கலங்கிப் பின்னர்
எப்படா வந்தாய் இங்கே
என்னநீ பிஆர் தானோ
கொப்பரைப் போல ஆமாம்
கொப்பரின் கோலம்... தம்பி...
இப்படிப் பலதைச் சொல்லி
இளமையை நினைவு கொண்டார்

இளமையை எண்ணிப் போலும்
இனியவர் என்னைப் பார்த்தார்
உளந்தடு மாறல் இன்றி
உள்ளபடி மனதைச் சொல்ல
'பழைமையை எண்ணி பிஆர்
பழுவெனும் உணர்வில் மாஸ்டர்,
தொழில்புரி காலம் தேயச்
சொந்தம் என் நிலனே' என்றே

படிப்பகம்

www.padippakam.com



நின்றவர் கண்ணில் மீண்டும்
நிறைந்தது கண்ணீர் மெல்லச்
சென்றவர் கையைப் பற்றிச்
சேர்ந்துஒரு புறத்தே நின்றோம்!
கொன்றபல் நினைவை நெஞ்சில்
கொதித்ததைக் கொட்டி நின்றார்
அன்றைய உலகை எண்ணும்
அகநிலை அளந்து நின்றேன்!

சரசுவின் புருஷன் அன்று
தந்தனர் பிஆர் என்றார்
சரியென நானும் வந்தேன்
சங்கிலி விலங்கு தம்பி!
திருவிழாச் செய்தும் கோயில்
திருப்பணி செய்தும் வாழ்ந்த
அருமையை எண்ணும் போதில்
அழுதிடத் தோன்றும் என்றார்!

படிப்பகம்

www.padippakam.com



கலங்கின கண்கள் மீண்டும்
கடவுளே! கண்ணா என்றார்!
புலம்பெயர்ந்து இங்கே வந்தால்
புதியதோர் வாழ்க்கை மாஸ்டர்!
நலன்பெற வேண்டின் நெஞ்சம்
நலிவுறல் முறையா? என்று
பல்கதை சொல்லித் தேற்றிப்
பாதையில் நடந்து சென்றோம்!

என்னநான் சொன்ன போதும்
என்னகம் ஓயவில்லை
வன்முறை வளைந்த கோல்முன்
வளர்ந்த தீ வடிந்த செந்நீர்
சின்னவர் எலும்புக்கூடு
சிதறிய பூமி எல்லாம்
என்னவை என்றோர் எண்ணம்
எழுந்து நின் றாடிற் றாங்கே

எழுந்துநின் றாடு பாம்பும்
இசையலை வலையிற் சிக்கி
வளைந்துவந் தணையும் ஆடும்
வாய்திறந் தசந்தீ டாடும்
உளந்தடு மாறு மாந்தர்
உய்த்தறி சுழியிற் சிக்கின்
இழந்தவை மத்தாய் ஆடும்
என்றுநான் கூடிச் சென்றேன்!

www.padippakam.com



## 11. பாதை ஓரத்தில்...

பாதையிலே பழையகதை புதியகதை பேசிப்
பலவாக இரண்டுலகப் பாங்குகளை ஆய்ந்தும்
சாதிமத இனபேதம் சல்லரித்த நாடு
தலைசாய்ந்த பலநாட்டுச் சால்புகளும் ஆய்ந்தோம்

வெள்ளவத்தை வீதிகளில் வெள்ளமென மக்கள்
வேறெங்குஞ் செல்லவென விடுதிவிடும் உள்ளம்
உள்ளதுகள் விற்றெங்கோ கொடுத்தவரைத் தேடி
உலைகின்ற இளங்குமர்கள் உலகியலை ஆய்ந்தோம்.

ஒன்றங்கு கொழும்பினிலே ஒன்றுநியூ சிலாந்தில்
ஒன்றிங்கு எனவேங்கும் இதயங்கள் பாங்கு
நின்றங்கு வாழ்ந்தாலும் மாண்டாலும் தங்கள்
நிலன்விட்டுச் செல்லாத நெஞ்சத்தின் தீரம் ..

வெள்ளையரின் நல்லியல்பு வீதியிலே கண்டால்
விளித்தெம்மை குடே என்று விரிமுகத்தின் பண்பு
எள்ளளவும் கொள்ளாமல் எங்கள்பெரு மக்கள்
எங்கேநீ போகின்றாய் எனவினவும் ஆவல்...

கனடாவின் படலையிலே காவலிரு மக்கள்
கடல்தாண்டி கரைசேர கப்பல்அலை சீனர்
இனி என்ன மொகடிசியு எமதென்ற நாட்டார்
எடவிட்டால் போதுமென ஈடாடும் சால்பு...

நடைபாதை வழியாக நடைபோட்டுக் கொண்டே
நல்லதையும் அல்லதையும் நாம் ஆய்ந்து செல்ல
குடே மிஸ்ர பில்லை எனும் குரல்கேட்டு நின்றோம்
கொஞ்சுமுக நகைமலர கிழமொன்று நின்றாள்!

படிப்பகம்

www.padippakam.com



## 12. வழியில் வந்தவன்

குடே என்றாள் கொவ்வையிதழ்ப் பாட்டி
கொஞ்சு மொழி சிந்தியசீ மாட்டி
உடல் சோர்ந்தும் உளந் தேய்ந்தும்
நடை ஓய்ந்துந் தடியூன்றி
தடுமாறி நின்றாள்கை நீட்டி

கை ஏந்திச் சென்றார்நம் பிள்ளை
கடை வாயில் சிரிப்போ ஓர் கொள்ளை
ஐயாவை அவள்பார்க்க
அவளைநம் மவர் பார்க்க
ஐயையோ இருநெஞ்சும் வெள்ளை?

காலத்தேர் பாதையிடு கன்னம்
கருஞ்செம்மை அதன்மீது வண்ணம்
ஏலத்திற் போனாலும்
கோலத்தில் கூனாத
ஞாலத்தின் நிலையான சின்னம்

கதை சொல்லி அவள்பாரம் குறையும்
கதை மெல்லும் அவர்நெஞ்சம் நிறையும்
சுதிசேர்த்த மொழியோடு
சுவைசேர்த்த விழியோடு
நதிபோல அவள் பேச்சு விரையும்

அவள் பேச அவர்மேலே பார்ப்பார்
அசைந்தாடு தலையால் 'ஆம்' சேர்ப்பார்
துவள்கின்ற நரைதாடி
சுழியோடுங் கையோடே
சுவைகாட்டி துன்பத்தைத் தீர்ப்பார்

www.padippakam.com



ஐயாவை அவள் பார்த்த அழகும்
அவர் கண்ணில் உயிர்தந்த அருளும்
வைகைமா நதிபோல
வளரின்ப நிதிபோல
பெய்தோயா என்நெஞ்சில் ஒழுகும்

கைக்கோலை முன்வைத்தாள் அம்மை
கடைக்கண்ணால் அவள் பார்த்தாள் நம்மை
யூக்கம்ரு டையற்சிக்ஸ்
எவிறிதிங் யூ மஸ்ற் ஃபிக்ஸ்
ஒக்கே என்றாள் வெள்ளைப் பொம்மை

ஒக்கே ஜீன் ரேக்கயார்பை என்றார்
உயிர்போன உடல்போல நின்றார்
யார்க்குப் போய் அவள் சொல்வாள்
யார்தான்தம் விதிவெல்வார்
பார்க்கோலம் இதுவென்றார் பிள்ளை

அவள்செல்ல ஒருகண்ணால் பார்த்தார்
அகநோயை எனைப் பார்த்துத் தீர்த்தார்
கவலைக்குக் கருவான
கதைமிஞ்சி உருவேற
விவரம்பின் எனச்சொல்லி வேர்த்தார்

பாதையிலே நாம்மீண்டும் நின்றோம்
பாவம் ஜீன் எனப் பேசிச் சென்றோம்
சாதிமத நிறபேதம்
சதிசெய்த சமுதாயம்
நீதிவழி காணவழி வென்றோம்

www.padippakam.com



## 13. ஜீனின் உறவு

நம்வழி தொடர்ந்தோம் ஆனால்
நந்தமிழ்க் குருவோ முற்றுந்
தம்மையே இழந்தாற் போலத்
தாடியைத் தடவிக் கொண்டார்
விம்மின இதழ்கள் கண்ணீர்
விழுந்தவை உருளும் கன்னந்
தம்மிடக் கையால் மெல்லத்
தடவினார் தம்பீ என்றார்

மதியெனச் சொல்வர் மாயும்
மனமெனச் சொல்வர் பாரின்
சதியெனச் சொல்வர் கோளின்
சலனமே என்பர் இவ்வண்
எதையெலாஞ் சொல்லி நம்மோர்
இயற்கையை விளக்கி ஈற்றில்
விதியெனச் சொல்லி ஆறும்
விந்தையைப் போற்றுகின்றேன்

படிப்பகம்

www.padippakam.com



என்றவர் என்னைப் பார்த்தார்
இடுப்பிலே இருந்து கீழே
சென்றகாற் சட்டை மேலே
சீர்பெற இழுத்துக் கொண்டார்
இன்றிவர் சலனம் ஏனோ
ஏன் என இதயம் கேட்டும்
ஒன்றுமே நான்பே சாமல்
ஒமெனத் தலையாற் சொன்னேன்

தலையசைத் திணக்கஞ் சொன்ன
தமிழவர் விளங்கிக் கொண்டார்
நிலைதடு மாறும் எந்தன்
நெஞ்சவர் விளங்க வில்லை
பல பல நினைவு முந்தப்
பழையன மனதில் வந்தும்
அலைகபல மோதும் நெஞ்சில்
அவாவும் ஓர் தூபம் போடும்

படிப்பகம்

www.padippakam.com



யாரிவள் என்ன இந்த
ஈர்ப்பெனக் கேட்க ஆசை
வேரழி மரம்போல் நெஞ்சம்
வீதியில் சரியும் வேளை
பாரடா தம்பீ இந்தப்
பாவி ஜீன் கிழவி யோடே
ஓரிரு மாதந்தான் என்
உறவடா என்றார் பிள்ளை

உடன்பிறப் பொன்று போல
உறவடா உண்மை ஏதோ
கடன்படு நெஞ்சைப் போல
கலங்கு மென் மனமும் பற்ற
இடனிலாக் கொடிபோல் ஆடி
இறுதியில் என்னை நம்பிப்
படுந்துயர் உந்தத் தாவிப்
பற்றினாள் என்றார் விம்மி

படிப்பகம்

www.padippakam.com



பற்றினாள் என்னை என்ற
பைந்தமிழ் மணியின் வார்த்தை
சுற்றிவந் தோடி நெஞ்சில்
சுழன்றது ஓர் இலத்திறன்போல்
இற்றைநாள் வரையும் மாஸ்டர்
இயல்பினை மதித்த நெஞ்சம்
முற்றுமே மறந்து பேசும்
மூச்சொலி தேடிக் கொண்டேன்!

தேடிய மூச்சை இன்பத்
தேன்தமிழ் வார்த்தை ஆக்கி
வாடிய கொக்குப் போல
வாய்ப்பினைப் பார்த்துச் சென்றேன்
நாடுநாம் விட்டு வந்தோம்
நமதுளம் அமைதி காண
காடுவா என்னும் நாளில்
கரைச்சல் ஏன் ஜீனால் என்றேன்!

படிப்பகம்

www.padippakam.com



கரைச்சல் ஏன் ஜீனால் என்றாய்
கசமுசா ஏதோ என்ற
பிரச்சனை எழுந்து நெஞ்சம்
பிசகினாய் . சிச்சீ பேசி
எரிச்சலைக் கிளப்பி நெஞ்சில்
எரிகிற நெருப்பில் எண்ணெய்
சரிச்சு நீ ஊற்ற வேண்டாம்
தாயென மதித்தேன் ஜீனை!

தாயெனப் பெண்ணைப் பார்த்தல்
தாய்மையை மதித்தல் பண்பு!
தாயகம் துறந்தேன் அந்தத்
தமிழை நான் மறக்க வில்லை!
சேயென மதிக்கத் தக்க
சிறிசினைப் பார்த்து மெல்ல
வாயினைப் பிளந்து செல்லும்
வாத்தியார் அல்லப் பிள்ளை!

என்றவர் என்னைப் பார்த்தார்
இளஞ்சிரிப் போடு கீழே
சென்றகாற் சட்டை மீண்டும்
சீர்பெற இழுத்துக் கொண்டே
நன்றடா தம்பி இந்த
நாட்டிலே எவர்க்குச் சொல்வேன்
இன்று நீ கேட்டாய் சொன்னேன்
என்மனம் ஆறும் என்று!

படிப்பகம்

www.padippakam.com



அவள்கதை பெரிது தம்பி
அதையெலாம் பின்பு சொல்வேன்
எவர் கதை என்றால் என்ன
எவர்க்குமே பேச மாட்டேன்
கவலலில் உதவல் இன்பம்
கருணை கொள் மனதில் அன்பு
தவழ்கிற இயல்பும் இன்பம்
சரி அதை விடுவோம் என்றார்!

சரி அதை விடுவோம் என்று ஏன்
சங்கரர் மழுப்பிக் கொண்டார்?
பெரிது அவள் கதையாம்...பின்பாம்
பின்பெது சொல்வார்?...இவ்வண்
ஒருசில நிமிடம் எந்தன்
உணர்வில் ஓர் ஆட்டம்... உண்மை
எரிமலைக் குழம்பு பாய்ந்து
என்னுளம் எரியச் சென்றேன்!

www.padippakam.com



# 14. வீடு நோக்கி...

நடைபாதை வழியாக
நாம் இருவர் சென்றோம்
விடை காண அலைமோதும்
வினா எந்தன் நெஞ்சில்

ஜீன் சென்ற பக்கமொரு
கண்ணாலே பார்த்தேன்
ஏன் இந்த ஈர்ப்பு என்று
என் உள்ளம் வேர்த்தேன்

வெண்தாடி வருடிட அவர்
விரல்கள் விளை யாடும்
கண்ணோரம் நீர் சொட்ட
கதிர்கள் அதில் ஆடும்

கதிர்தாவி விழி கோண
கலைதேயும் அவைகள்
புதிர்தாவி மனம் ஆட
புதுமை பெறும் நினைவு

படிப்பகம்

www.padippakam.com



யார் இந்த ஜீன் ஆமாம்
ஏதிந்த உறவோ?
நீர் சிந்தும் கண் என்றால்
நினைவு என்ன நினைவோ?

கேள் என்று மனம் சொல்ல
கேளாமல் சென்றேன்
வேளை பின்வரும் என்று
வெறும் வார்த்தை பேசி

கரை ஏறி விசை தேய
கதி தேயும் அலைகள்
நரை ஏறி வயது ஏற
நதி ஆகும் விழிகள்

சூடேறிக் கதிர்வெப்பம்
சுவால் ஏறும் வேளை
வீடு இங்கே என்றார் நம்
விசை தேய்ந்த பிள்ளை!

வா தம்பி என்னோடே
வா உள்ளே என்றார்
ஏதும் நான் பேசாமல்
'இம்' என்று சென்றேன்

www.padippakam.com



## 15. ஈடாடும் இதயம்

''இம்'' மென்று நான் கூடிச்சென்றேன் - தம்
இதழோடு நகையோடப் படியேறிப் பிள்ளை
''கம்'' மென்று தாம் முன்னே சென்றார் - நான்
கடிகாரம் பார்த்ததையும் கடைக்கண்ணாற் கண்டார்

படியேறி அவருக்கோ மூச்சு - மேற்
படியேறும் மூச்சோடு ''நுரை நொட்டும்'' போச்சு
கடைவாய்தன் அடர்தாடி தேய்ச்சு - கைக்
கடிகாரம் பார்த்தாயே.... கன நேரம் ஆச்சோ?

கனநேரம் ஆனாலும் என்ன - அட
கண்காணாத் தேசத்தில் கண்டதே இன்பம்
இனிமேலும் எப்போதோ ஏதோ - என்
இதயத்தின் சுமைதீரும் உன்னோடு பேசில்!

என்பேச்சால் கலங்காதே அம்பி - வா
இதுவெங்கள் ''பிளாற்ஸ்'' என்று திறந்துள்ளே
சென்றார்
தன்பேச்சுத் தளர்வெய்தல் கண்டோ - செந்
தமிழ்பொங்கும் கண்ணாலே தவிப்பெல்லாஞ் சொன்னார்

வரவேற்க இங்கெவரும் இல்லை—நான்
வழிபார்த்து மாலைவரை விழிபூத் திருப்பேன்
மருமகனார் ஏழுக்கு வருவார் - என்
மகள்பேரன் சங்கருடன் ஆறரைக்கு வருவாள்!
அ.க—15

www.padippakam.com



புரியாத புதிர்தம்பி வாழ்க்கை - பார்
புலம்பேர்ந்தும் சந்தித்த உறவல்லோ புதுமை
இருதம்பி சோபாவில் என்றார் - அந்த
ஈடாடும் இதயத்தின் துடிப்பங்கு கண்டேன்

சோபாவில் நான்மெல்ல அமர்ந்தேன் - தன்
சுமைதீர மனமாறச் சொன்மாரி பொழிந்தார்.
தூபம்நான் இடுமுள்ளம் இலனாய் - ஓர்
சுமைதாங்கி போலங்குஞ் சுகங்கண் டிருந்தேன்

நாலுமுள வேட்டியுடன் ரோட்டில் - நான்
நடமாட வழியில்லை வாழ்விந்தக் கூட்டில்!
காலையிலே ''வோர்க்குக்குப்'' போகில் - நீ
களிசானை மாட்டென்ற விதியிந்த வீட்டில்!

பேரனுடன் பேசுதற்கோ ஆசை - அட
பேசுதமிழ் என்றாலவன் நாமிகவுங்கூசும்
யாருடனே நோவதடா தம்பீ - இது
யார்செய்த தீவினையோ யாரறிவார் கண்ணா!

தங்கம்மாள் போய்விட்டாள் முந்தி - நான்
சங்கரன் தனியாகி அலைகின்றேன் பிந்தி
இங்கிந்த நிலைகேன்நாம் வந்தோம் - ஏன்?
இதயத்தை கேட்கின்றேன் தினமுள்ளம் நொந்தே!

படிப்பகம்

www.padippakam.com



கனடாவில் ஒரு லட்சம் ஆச்சு - மா
கடலோடி தடுமாறிப் பல லட்சம், சேச்சே!
இனிடாவின் சிட்னியெனப் பார்த்தால் - அட
எத்தனை இலட்சம் ஈ டாடிப் போச்சு

யூதர்கள் ஒரு காலம் சென்றார் - ஆம்
உலகெங்கும் சிதறுண்டும் வழியொன்று கண்டார்
யாதும் நம்மூர் என்ற நாங்கள் - நாம்
யாவருங் கேளீரென உணரும்நாள் வருமா?

வருமாவக் காலமென எண்ணி - என்
வாழ்நாளைக் கழிக்கின்றேன் வேறுவழி யின்றி
விரைவில் என் வாழ்விங்கே தீரும் - பின்
விதியென்ன உறவுண்டோ பிள்ளைக்கென் னூரில்?

என்னூரை என்னுள்ளம் எண்ணும் - பின்
என்னூரா என்றையம் இதயத்தில் பின்னும்
கண்ணா என் கருநீல வண்ணா - என்
காலத்தில் முடிவொன்று காண்போமா கண்ணா?

அது வேண்டாம் விடு அந்தக் கதையை - ஆம்
அட எங்கே போனாலும் விடமெங்கள் பிடியை
இது எங்கள் வமிசத்துத் தோஷம் - நாம்
எங்கெங்கே சென்றாலும் எத்தனை கோஷம்!

என்றவர் எதனையோ நினைத்தோ - நீ
இருதம்பி இந்தாநான் வாறனொரு நொடியில்
என்றுள்ளே விறுவிறெனச் சென்றார் - நான்
என்மாஸ்டர் பழம்பெருமை எண்ணியாங்கிருந்தேன்

www.padippakam.com



## 16. இலக்கியச் செம்மல்

இருதம்பி என்றுள்ளே சென்றவரை எண்ணி
இன்றிங்கு நின்றுள்ளம் இடர்படுதல் எண்ணி
ஒரு காலம் அவர் வாழ்ந்த உலகியலை எண்ணி
உள்ளத்தில் அலைமோதச் சோபாவில் சாய்ந்தேன்!

சோபாவில் சாய்ந்தபடி சூழ்உலகை எண்ணி
சொப்பனங் காணுகிற சுவைபெருகு வேளை
பாமாரி அவர்பெய்த பழமை பல வந்தே
படம்போல மனக்கண்ணில் தொடர்ந்தோடக் கண்டேன்

அண்ணலை அவள்பார்த்த பார்வையின் உட்பார்வை
ஆற்றிலே படகோட்டும் குகன் உள்ளத்தூய்மை
பண்ணுடன் அவர்சேர்த்த பசுந்தமிழின் கூர்மை
பலவந்து தொடர்ந்தோட மனக்கண்ணில் கண்டேன்!

பிட்டுக்கு மண்சுமந்த பெருமானின் காதை
பிரம்படியின் சால்பு சொலும் பேரின்ப தீதி
சொட்டுதமிழ்ச் சுவையோடு சொல்லிய அச்செம்மல்
சுவை என்ன சுவை என்று சுவை ஓங்கக் கண்டேன்!

பாரதியார் காதலித்துப் பாடு குயிற்பேடு
பார்த்திருக்க வானரரைக் காதலித்த கேடு
ஓர்சுவையா ஒண்டமிழில் ஒன்பதையும் அன்றோ
ஒப்புயர்வில் குயிற்பாட்டில் கண்டவரைக் கண்டேன்!

www.padippakam.com



அறப்பாலின் உறைகடைந்து அணைகின்ற அமுதம்
அரியகுறள் மணியில் ஒளிர் அழகுகவி அமுதம்
திறப்பாலே மனக்கதவு திறந்தருளும் நிதியம்
தீபஒளி போல வளர் சீமானைக் கண்டேன்!

தேர்தீர்த்தத் திருவிழாக் காலமெனில் அண்ணல்
தெருவோரம் சர்க்கரைத் தண்ணீரை வார்த்தல்
சூரன்போர் மானம்பு திருவிழா என்றால்
சுழன்றோடி கொம்புபிடித் தாடுதலைக் கண்டேன்!

நீறுதிகழ் நெற்றியிலே நிறைவுதரும் பொட்டும்
திமிர் தோளில் எறிசால்வை விழுகின்ற செட்டும்
மாறுகரைக் கதர்வேட்டி மனங்கொள்ளும் கட்டும்
மரபொன்று தனதென்று வாழ்ந்தவரைக் கண்டேன்

அந்நாட்டில் என்மாஸ்டர் இன்றுவரை வாழ்ந்தால்
அவரங்கே இலக்கியச் செம்மல்என நிற்பார்
பொன்னாடை போர்த்தியவர் சேவைபல போற்றி
பூவுலகை ஆள்கவெனப் புகழ்மாரி பொழிவர்!

தாமாக வந்தாரா இல்லை, அட இல்லை
தமிழ்மாரி பெய்துஓயாப் பெருஞ்செல்வப் பிள்ளை
பாமாரி பொழிகின்ற பழுவேற நெஞ்சம்
படும்பாடு......அதை எண்ணிப் பரிதாபங் கொண்டேன்

எனதுமனம் இருஉலகில் அசைந்தாடும் வேளை
எதுஎந்தன் உலகென்று இதயம் அலை வேளை
கனவுலகில் வெகுநேரம் ஆச்சோடா என்று
கன்னத்தில் மெதுவாக அன்போடு தொட்டார்!

www.padippakam.com



## 17. பந்தியில்....

தொட்டவர் எனக்குச் சொந்த
 சுயநினைவு ஊட்டப் பார்த்தேன்
கட்டிய வேட்டி மாறு
 கரையுள கதரே நெற்றிப்
பொட்டுடன் குறிகள் முன்னைப்
 பொலிவுதான் நரைத்த தாடி
மட்டுமே இன்று வேறு!
 மறுமுறை அவரைப் பார்த்தேன்!

பார்த்தஅக் கணமே மெல்லப்
 பார்வையை எடுத்துக் கொண்டேன்
ஆர்த்தது கவிதை நெஞ்சில்
 அதனையும் பதித்துக் கொண்டேன்
தேர்த்திரு விழாவில் முன்பு
 தெருவிலே கண்ட கோலம்
பார்த்துநீ விறைத்தாய் போலும்
 பழையவன் பிள்ளை என்றார்!

வாஇனிப் பேசிப் பேசி
 வயிற்றையும் கழுவ என்றார்
ஆ-பிடி இலையை என்றென்
 அருகிலே அமர்ந்து கொண்டார்
பாவம் என் பாட்டிக்கு அன்று
 பண்ணிய துவச எண்ணம்..
மாவடிக் கோயில் ஐயர்
 மணியம் இன்று எங்கோ ஏதோ!

www.padippakam.com



என்றவர் எதைஎல் லாமோ
என்முன்னே எடுத்து வைத்தார்
அன்றவர் காலை தானே
அதையெலாம் சமைத்த தென்றார்
இன்றுள நிலையில் நானே
இதைஎலாம் செய்தல் வேண்டும்
சென்றனள் தங்கம்மா ஆம்
சென்றதும் நன்றே என்றார்

வடகமும் வறையும் கீரை
வதக்கலும் தங்கம் செய்வாள்
இடிஇடி என்று தங்கம்
இடித்ததூள் .. நொட்டை சொல்வேன்!
கடையிலே வாங்கும் தூளால்
கறிகளில் சுவையும் இல்லை
விடுவிடு பழசை எண்ணி
வேதனைப் பட்டும் என்ன!

கண்ணிலே கண்ணீர் தேங்க
கணப்பொழுது அமைதி கொண்டார்
எண்ணிய எண்ணம் எல்லாம்
என்னையும் அசைக்கும் வேளை
தண்ணியைத் தெளித்தார் வெள்ளைச்
சாதமும் படைத்தார்-தம்பீ
வெண்ணிறச் சோறுதான், ஊர்
விளைநிலம் என்ன ஆச்சோ!

www.padippakam.com



அதைஎலாம் எண்ணி என்ன
அதைவிடு கறியைப் போடு
சொதிஇதில் தயிரும் உண்டு
சுவைதரும் சேர்த்துண் என்றார்!
நிதமும்நான் சைவம் நானே
நித்தியம் சமைப்பேன்... வீட்டில்
எதைஎல்லாம் சமைக்கின் றார்கள்
என்றுமே மச்ச வாடை!

இங்குநான் என்ன செய்வேன்
இனியஎன் பேரன் என்று
சங்கரை அணைந்துப் பேசல்
சங்கடம் தமிழைக் கற்க
எங்குமே அனுப்பார் கேட்டால்
சங்கர்இஸ் நொட் கீன் என்பர்
சங்கரா! .. என்ற வாறே
தம்இலை மடித்தார் மாஸ்டர்!

மண்ணில்ஏர் பிடித்த காலம்
மணிக்கதிர் ஆர்த்த கோலம்
புண்ணிய காலம் பார்த்துப்
புதிதெடுத்து உண்ட காலம்
அண்ணவா தம்பி வாஎன்று
அனைவரும் மகிழ்ந்த ஞாலம்
எண்ணிய மனசு...என்றே
எழுந்தனர் பந்தி ஒயும்!

www.padippakam.com



## 18. பிரிவில்...

பந்தி முடிந்தது பாசம் எழுந்தது
பாதை பிரிகிற வேளை அது
அந்தா தெரியுது பார்பார் அதுதான்
அவள்ஜீன் சொந்த பிளாற்ஸ் என்றார்!
இந்த வயதிலும் ஏனோ கரைச்சல்
என்றுநீ கேட்டது ஞாபகமா?
சந்தே கம்விடு சந்தே கம்விடு
சங்கரப் பிள்ளையை அறியாய்நீ!

பாட்டியின் கணவன் பீற்றர் என்பவன்
பிலிப்பினோ பாவையை கூட்டி வந்தான்
ஆட்டம் எழுந்தது வீட்டுற வில்ஜீன்
அகதிகள் போல்மனம் வாடி நின்றாள்!
வீட்டை இழந்தனள் வீதி அலைந்தனள்
விம்மும் மனதுடன் எம் பிளாற்சில்
மீட்டொரு யூனிற் எடுத்தனள் ஓர்மகன்
மைக்கல் துணையென வாழுகிறாள்!

வீதியில் அலைகிற ை ள தவிர்ந்திட
வீட்டுள் இருக்கிற வேதனையில்
வாதை தருகிற மனதைத் தேற்றிட
வந்திடுவாள் என் துணை தேடி!
ஏதும் கதையுடன் வந்திடு வாள்தினம்
எங்கள் சிலோன்ரீ சுவை புகழ்வாள்
வேதனை தீர்ந்திடக் கதைபேசி அவள்
வென்றனள் என்மனம் அவ்வளவே!

www.padippakam.com



மைக்கலோ டோலிலே வாழுகிறான் அவன்
மாலையும் காலையும் வீதியிலே
அக்கா எனத்தகு பெண்ணுடனே கட்டி
ஆடி இழுத்தெங்கும் சுற்றுகிறான்
இக்கலி காலத்துக் கோலம் எலாம் கண்டு
எங்கள் பெடியளும் இப்படியே
சிக்கிடு மோஎன்ற நெஞ்சுணர்வில் மனம்
சூனியம் ஆவதும் உண்டு தம்பி!

பிள்ளையை நம்பிநான் இங்குவந்தேன் அது
பேசவும் நேரம் இலாத நிலை!
உள்ளம் திறந்தெதும் சொல்லுதற்கும் அவள்
உற்றவள் என்றுறவு இலாத நிலை!
பள்ளமும் மேடுமே வாழ்க்கையடா தம்பி
பாதியில் வந்தவர் போவரடா!
தள்ளி விடும்விதி தன்வழியில் அதைத்
தட்டித் தகர்ப்பவர் யாரும் இல்லை!

ஏதோ மனச்சுமை சொல்லி விட்டேன் தம்பி
என்றினி?... நீயும் ஊர் சென்றிடுவாய்
ஊதி விடும்பலூன் போலநமர் இன்று
ஊர் உலகெங்கும் பறந்து விட்டார்!
மீதியாய் ஊரிலே வாழ்பவர்தான் இனி
மிஞ்சும் ஈழத்தமிழ்ச் சாதி என்றார்!
வேதனைதான்... சரிவாறன் என்றேன் அவர்
வீதிவரை வந்து பார்த்து நின்றார்!

www.padippakam.com



## 19. நெஞ்சின் அலைகள்

சிந்தையை தேற்றிய செந்தமிழ் வாத்தியார்
சிந்தையை தூண்டிவிட்டார்
நொந்த மனத்தடி நோதலை என்னுடன்
பந்தியில் தாம் பகிர்ந்தார்
தந்த விருந்துடன் தண்டமிழ் நெஞ்சழி
சால்பையும் நான் நுகர்ந்தேன்
எந்தையர் வாழ்வையும் எம்மவர் சால்பையும்
ஏந்தி எடை உணர்ந்தேன்!

நற்றமிழ் வாத்தியின் நாளைய செல்வமே
நம்தமிழ் கற்கவில்லை
பெற்றவர் பண்பினை பேணி மதித்தவர்
பிள்ளைகள் நிற்கவில்லை
தொற்றிய பூமியின் சூழல் சுகங்களில்
சொந்தம் நிலைக்கவில்லை
மற்றொரு சந்ததி எண்ணம் எழுந்தவர்
மார்பை அலைக்கவில்லை

www.padippakam.com



நாட்டைப் பிரிந்தவர் நெஞ்சிலே தம்புலம்
நாளும் தெரிகிறதா?
தோட்டம் துரவுகள் சொந்தம் உறவுகள்
சுற்றித் திரிகிறதா?
பாட்டி நினைவுகள் பண்பு பெருமனப்
பாங்கு விரிகிறதா?
மீட்டொரு சாதியை மேதினியில் விடும்
தாக்கம் புரிகிறதா?

ஆழிகடந்தின்று நாடு துறந்தவர்
ஆதி நிலைத்திடுமா?
நாளைய சந்ததி நற்றமிழ் சாதியாய்
நின்று வளர்ந்திடுமா?
தோழமை கொண்டுதாம் தோற்றிய பூமியில்
ஒன்றி மறைந்திடுமா?
வாழிய செந்தமிழ் வாழிய என்றுள
வாஞ்சை உயிர்த்திடுமா?

□

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com







R. Ambikaipahar (AMBI) had served the Sankar Educational Institutes like the curriculam Development centre before taking up appointment in far away Papua New Guinea, where he lives now. He is a poet and has also written and produced a verse - play titled VEDALAM SONNA KATHAI. He started his career as a short story writer and moved on to writing poems, particularly for children. His first work in this direction was entitled 'AMBI PADALGAL'... 'KONJUM THAMIL' (LILTING TAMIL) is an exemplary work taking into account the multi-disciplinary approach, child psychology, music and dance application... He was the first in this country to write articles in Tamil and Science subjects. He was also a regular broadcaster on these subjects. 'GREENIN ADICHUVADDIL' is a survey of science teaching tradition initiated by Dr. Green...

Island, Srilanka, 24.3.93

School children throughout the country will soon be reading poems from LINGERING MEMORIES, a book written by a Sri Lankan writer. Ambi, who has lived in PNG for more than 11 years, works with the college of Distance Education... The book of poems is considered by the Education Department to be good reading material for school children and copies will soon be printed and distributed to schools in PNG.

– Post Courier, PNG, 19-1-93

படிப்பகம்